# பணமும் வங்கித் தொழிலும்

## பண நிரம்பல்

### பொதுவான போக்குகள்


பொருளாதாரத்தில் தொடர்ச்சியான உயர்ந்த கேள்வி அழுத்தத்தை வலியுறுத்துவதாய் 1994 இல் பண நிரம்பலின் வளர்ச்சி வீதம் தொடர்ந்தும் உயர்வாக விளங்கியது. குறுகிய பண நிரம்பல் (M 1) ஆண்டின் இறுதியில் 19 சதவீத ஆண்டுவளர்ச்சியைப் பதிவு செய்து 1993 இல் பதிவு செய்யப்பட்ட அதே வளர்ச்சி வீதத்தில் நிலைபெற்ற வேளையில் விரிந்த பண நிரம்பலின் வளர்ச்சி வீதம் (M2) ஓராண்டிற்கு முந்திய 23.5 சதவீத வளர்ச்சியிலிருந்து 1994 இல் 19.6 சதவீதத்திற்கு மிதமடைந்தது. 1994 சனவரி-மே காலப்பகுதியில் பண நிரம்பலின் வளர்ச்சியில் ஓரளவு மிதமான தன்மை காணப்பட்டபோதும் சராசரியாக நாணய வளர்ச்சி ஆண்டு முழுவதும் தொடர்ந்து மிக உயர்வாகக் காணப்பட்டது.

உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட உறுதியான உயர்வு 1994 இல் நாணய விரிவாக்கத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான உயர்விற்கு முதன்மைக் காரணமாகும். தனியார்துறைக் கொடுகடனின் 21 சதவீதங்கொண்ட வளர்ச்சி மற்றும் அரசதுறைக் கொடுகடனின் 4 சதவீதம் கொண்ட விரிவாக்கம் என்பனவற்றின் தாக்கத்தின்கீழ் உள்நாட்டுக்கொடுகடன் முன்னைய ஆண்டின் இறுதியில் காணப்பட்ட 3.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதத்தினால் மிகக் கூடுதலாக உயர்வடைந்தது. எனினும், திரண்ட சென்மதி நிலுவையின் குறைந்த மிகையினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சி 1993 இன் 87.9 சதவீதங்கொண்ட மிகக்கூடிய அதிகரிப்புக்கு எதிராக 37.7 சதவீதத்தில் காணப்பட்டமை நாணய விரிவாக்கத்தின் மீதான அழுத்தத்தை இலகுபடுத்துவதாக இருக்கிறது.

நாணயத்தளம் (நாணய வெளியீடு, மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள், அரச முகவர்களின் வைப்புக்கள் என்பனவற்றை உள்ளடக்கியது) 20.5 சதவீதத்தினால் (ரூ. 115,880 இலட்சம்) விரிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 680,550 இலட்சத்தினை அடைந்தது. இதனை முன்னைய ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 25.9 சதவீதம் (ரூ. 116,090 இலட்சம்) கொண்ட உயர்ந்த வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடலாம். மூலப்பக்கத்தில், ரூ. 142,880 இலட்சத்தினால் வளர்ச்சியடைந்த மத்திய வங்கியுடனான தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒதுக்குப் பணம் விரிவடைவதற்கான முக்கிய உதவுக் காரணியாக தொடர்ந்தும் விளங்கின. முக்கியமாக, மத்திய வங்கிப் பிணைகளை வழங்குவதனூடாகவும் மத்திய வங்கி மீள் நிதியிடல் கடனைப் படிப்படியாக குறைத்ததன் மூலமும் மத்திய வங்கியின் தேறிய உள்நாட்டுச் சொத்துக்கள் ரூ. 27,000 இலட்சத்தினால் குறைக்கப்பட்டமையானது 1994 இல் ஒதுக்குப் பணத்தின் அதிகரிப்பினை ரூ. 115,880 இலட்சத்திற்கு கட்டுப்படுத்த உதவியது. ஒதுக்குப் பணத்தில் முன்னைய ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 116,090 இலட்சமாகும். எனினும் பண நிரம்பலின் (M2) வளர்ச்சி வீதத்துடன் தொடர்புபடுத்திநோக்குகையில்

பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.65

### நாணயக்கூட்டுக்கள் 1992 - 1994


(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கால முடிவில் | 1992 | 1993 | 1994 | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் | 1992 ஐ விட 1993 இல் சதவீத மாற்றம் | 1993 ஐ விட 1994 இல் சதவீத மாற்றம் | 1992 | 1993 | 1994 | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் | 1992 ஐ விட 1993 இல் சதவீத மாற்றம் | 1993 ஐ விட 1994 இல் சதவீத மாற்றம் |
| சனவரி | 44,833 | 51,582 | 58,607 | +12.3 | +15.1 | +13.6 | 112,367 | 133,234 | 160,310 | +24.6 | +18.6 | +20.3 |
| பெப்புருவரி | 46,128 | 51,519 | 63,133 | +14.1 | +11.7 | +22.5 | 113,572 | 135,238 | 164,598 | +25.0 | +19.1 | +21.7 |
| மாச்சு | 48,312 | 53,869 | 63,763 | +15.4 | +11.5 | +18.4 | 116,193 | 140,062 | 167,443 | +23.9 | +20.5 | +19.5 |
| ஏப்பிறல் | 48,492 | 53,954 | 62,337 | +17.1 | +11.3 | +15.5 | 118,710 | 142,177 | 168,155 | +25.9 | +19.8 | +18.3 |
| மே | 47,304 | 53,003 | 61,484 | +14.8 | +12.0 | +16.0 | 118,398 | 140,838 | 167,719 | +24.2 | +19.0 | +19.1 |
| யூன் | 47,007 | 52,465 | 63,082 | +13.0 | +11.6 | +20.2 | 117,627 | 139,508 | 172,529 | +22.3 | +18.6 | +23.7 |
| யூலை | 46,208 | 53,443 | 64,099 | +13.3 | +15.7 | +19.9 | 117,513 | 142,054 | 174,109 | +21.8 | +20.9 | +22.6 |
| ஓகத்து | 46,687 | 54,073 | 64,232 | +11.6 | +15.8 | +18.8 | 119,144 | 143,054 | 174,951 | +20.4 | +20.1 | +22.3 |
| செத்தெம்பர் | 47,285 | 55,149 | 66,866 | +9.3 | +16.6 | +21.2 | 120,447 | 146,286 | 179,287 | +18.2 | +21.5 | +22.6 |
| ஒற்றோபர் | 46,758 | 55,693 | 67,798 | +8.3 | +19.1 | +21.7 | 122,975 | 149,584 | 184,336 | +16.7 | +21.6 | +23.2 |
| நவெம்பர் | 47,107 | 55,996 | 67,813 | +9.2 | +18.9 | +21.1 | 125,090 | 154,153 | 185,792 | +15.8 | +23.2 | +20.5 |
| திசெம்பர் | 50,490 | 60,104 | 71,520 | +7.3 | +19.0 | +19.0 | 130,701 | 161,362 | 192,990 | +16.6 | +23.5 | +19.6 |
| மாதாந்தச் சராசரி | 47,218 | 54,238 | 64,561 | +12.0 | +14.9 | +19.0 | 119,395 | 143,963 | 174,352 | +21.1 | +20.6 | +21.1 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## உளநாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.66

## நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1992 – 1994

(பத்து இலட்சம் ரூபாய்களில்)


| விடயம் | 1992 திசெம்பர் | 1993 திசெம்பர் | 1994 திசெம்பர் | மாற்றம் 1992/1993 | | மாற்றம் 1993/1994 | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் | 27,280 | 32,133 | 38,906 | +4,853 | +17.8 | +6,773 | +21.1 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் | 23,210 | 27,971 | 32,614 | +4,761 | +20.5 | +4,643 | +16.6 |
| குறுகிய பண நிரம்பல் ($M_1$) | 50,490 | 60,104 | 71,520 | +9,614 | +19.0 | +11,416 | +19.0 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் | 80,211 | 101,258 | 121,470 | +21,047 | +26.2 | +20,212 | +20.0 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் | 2,714 | 3,287 | 3,781 | +573 | +21.1 | +495 | +15.1 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் | 7,391 | 10,287 | 13,236 | +2,896 | +39.2 | +2,949 | +28.7 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) | 70,106 | 87,684 | 104,452 | +17,578 | +25.1 | +16,768 | +19.1 |
| **விரிந்த பண நிரம்பல் ($M_2$)** | 130,701 | 161,362 | 192,990 | +30,661 | +23.5 | +31,628 | +19.6 |
| **ஏதுக் காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் | 153,347 | 158,709 | 182,044 | +5,362 | +3.5 | +23,336 | +14.7 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் | 42,350 | 35,004 | 36,397 | -7,346 | -17.3 | +1,393 | +4.0 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 54,090 | 43,110 | 48,500 | -10,980 | -20.3 | +5,390 | +12.5 |
| மத்திய வங்கியால் | 40,604 | 24,810 | 27,818 | -15,794 | -38.9 | +3,008 | +12.1 |
| வர்த்தக வங்கிகளால் | 13,486 | 18,300 | 20,682 | +4,814 | +35.7 | +2,382 | +13.0 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் | 11,740 | 8,105 | 12,103 | -3,634 | -31.0 | +3,998 | +49.3 |
| 1.2 தனியார் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் | 110,997 | 123,704 | 145,647 | +12,707 | +11.4 | +21,943 | +17.1 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் | 2,021 | 1,903 | 2,541 | -118 | -5.8 | +638 | +33.5 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் | 14,750 | 7,775 | 5,163 | -6,975 | -47.3 | -2,612 | -33.6 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் | 94,226 | 114,026 | 137,943 | +19,800 | +21.0 | +23,917 | +21.0 |
| 2.வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) | 24,162 | 45,400 | 62,502 | +21,238 | +87.9 | +17,102 | +37.7 |
| 2.1 மத்திய வங்கி (தேறிய) | 21,049 | 45,725 | 60,013 | +24,676 | +117.2 | +14,288 | +31.2 |
| 2.2 வர்த்தக வங்கிகள் (தேறிய) | 3,113 | -325 | 2,489 | -3,438 | -110.4 | +2,814 | +865.9 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) | -46,808 | -42,747 | -51,557 | +4,062 | +8.7 | -8,810 | -20.6 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -19,903 | -17,170 | -20,341 | +2,733 | -13.7 | -3,171 | -18.5 |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) | -25,721 | -20,335 | -24,314 | +5,386 | +20.9 | -3,979 | -19.6 |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் | -1,184 | -5,242 | -6,902 | -4,058 | -342.7 | -1,660 | -31.7 |
| **விரிந்த பண நிரம்பல் ($M_2$)** | 130,701 | 161,362 | 192,990 | +30,661 | +23.5 | +31,628 | +19.6 |

குறிப்பு : அடையாளங்கள் $M_2$ இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

ஒதுக்குப் பணத்தின் உயர்ந்த வளர்ச்சி வீதத்தின் விளைவாக பணநிரம்பலுக்கும் நாணயத் தளத்திற்குமிடையிலான விகிதமான பணப்பெருக்கி – 1993 இறுதியின் 2.86 இலிருந்து 1994 இறுதியில் 2.84 இற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தமையானது நாணய வைப்பு விகிதம் 1993 இன் 24.8 சதவீதத்திலிருந்து 1994 இல் 25.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையின் மூலம் எடுத்துக்காட்டப்பட்டவாறு பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்விக்கெழுந்த உயர்ந்த முன்னுரிமையைத் தெளிவு படுத்தியுள்ளது.

பொருளாதாரத்தில் உயர்ந்த திரவத்தன்மை காணப்பட்டபோதும் மத்திய வங்கியின் பட்டியலில் உள்ள திறைசேரி உண்டியல்களின் கையிருப்பு குறைக்கப்பட்டதனால் மூலம் 1994 இல் தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும் வங்கியின் ஆற்றல் கட்டுப்படுத்தப்பட்டது. இக்கட்டுப்பாட்டுடன், மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்ளும் பொருட்டு மத்திய வங்கி அதன் சொந்தப் பிணைகளை தொடர்ந்தும் வழங்கிய வேளையில் முதலாந்தரத் திறைசேரி உண்டியல் ஏலங்களில் முதிர்ச்சியடைந்த அனைத்து திறைசேரி உண்டியல்களினதும் சந்தைத் தீர்ப்பனவையும் அனுமதித்தது. மேலும் ரூபா வைப்புப் பொறுப்புக்கள் அதேபோன்று வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் தொடர்பாக 1993 ஒகத்தில் 15 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட நியதி ஒதுக்கு விகிதமானது அதே மட்டத்திலேயே தொடர்ந்தும் வைத்திருக்கப்பட்டது. எனினும் வர்த்தக வங்கிகள் அவற்றின் வெளிநாட்டிலுள்ள வெளிநாட்டு நாணய உடமைகளை அதிகரிப்பதற்கு ஊக்குவிப்பதன் மூலம் ஒதுக்குப் பண விரிவாக்கத்தின் மீதான அழுத்தத்தைக் குறைக்கும் நோக்குடன் வெளிநாட்டில் வைத்திருக்கப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புக்களுக்குப் பொருந்தத்தக்க நியதி ஒதுக்கு விகிதம் 1994 பெப்புருவரியில் 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. மேலும் திரவத்தன்மை விரிவாக்கத்தினை மிதமாக்கும் பொருட்டு மத்திய வங்கி குறுங்கால மீள்நிதியிடல் கொடுகடன்களை நிறுத்திக் கொண்டதுடன் நடுத்தர நீண்டகாலக் கொடுகடனின் கீழான கொடுகடனை வழங்குவதனையும் தவிர்த்துக்கொண்டது.

## பண நிரம்பலும் ஏதுக் காரணிகளும்

1994 இறுதியில், நாணயத்தையும் பொதுமக்கள் வசமிருந்த கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பணநிரம்பல் (M1) ரூ. 715,200 இலட்சமாக விளங்கி 19.0 சதவீதமானதொரு (ரூ. 114,160 இலட்சம்) அதிகரிப்பினைக் கொண்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் 19.0 சதவீதமான (ரூ. 96,140 இலட்சம்) வளர்ச்சியே காணப்பட்டது. பணத்திற்கான கொடுக்கல் வாங்கல் கேள்விக்கிருந்த உயர்ந்த முன்னுரிமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் 1993 இல் இருந்த 18 சதவீதம் (ரூ. 48,530 இலட்சம்) கொண்ட உயர்விற்கு மாறாக 21 சதவீதத்தினால் (ரூ. 67,730 இலட்சம்) வளர்ச்சியடைந்த வேளையில் கேள்வி வைப்புக்கள் முன்னைய ஆண்டின் 21 சதவீதம் (ரூ. 47,610 இலட்சம்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் (ரூ. 46,430 இலட்சம்) உயர்வடைந்தது. இதன்படி M1 இல் சுற்றோட்டத்திலுள்ள நாணயத்தின் பங்கு 1993 இன் 53 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் 54 சதவீதத்திற்கு அதிகரித்தது.

வர்த்தக வங்கிகளின் வைப்புக்களைத் திரட்டும் தீவிரமான முயற்சிக்கு இசைவாக வர்த்தக வங்கிகளில் பொதுமக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை, சேமிப்பு வைப்புக்கள் (போலி நாணயம்) 1993 இன் 26 சதவீதம் (ரூ. 210,470 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தினால் (ரூ. 202,120 இலட்சம்) வளர்ச்சியடைந்தன. முன்னைய ஆண்டுகளைப்போன்றே வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் பெருமளவு பங்குக்கு 19 சதவீதத்தினால் (ரூ. 167,680 இலட்சம்) அதிகரித்த தனியார்துறைக் கூறுகளின் வைப்புக்களில் ஏற்பட்ட உயர்வு காரணமாக இருந்தது. அரச கூட்டுத்தாபனங்களினதும், கூட்டுறவு நிறுவனங்களினதும் தவணை, சேமிப்பு வைப்புக்கள் முறையே 29 சதவீதத்தினாலும் (ரூ. 29,490 இலட்சம்) 15 சதவீதத்தினாலும் (ரூ. 4,950 இலட்சம்) வளர்ச்சியடைந்தன. இதன்படி $M_1$ ஐயும் பொதுமக்கள் வசமிருந்த தவணை, சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கிய விரிந்த பணநிரம்பல் ($M_2$) 1994 இல் 19.6 சதவீதத்தினால் விரிவடைந்தது.

தனியார்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட உயர்ந்த வளர்ச்சியே 1994 இல் உயர்ந்த நாணய வளர்ச்சிக்கு முக்கிய உதவு காரணியாக இருந்தது. அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் குறைப்புக் காணப்பட்டபோதும் உள்நாட்டுக் கொடுகடன் முன்னைய ஆண்டின் 3.5 சதவீதம் கொண்ட (ரூ. 53,620 இலட்சம்) வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 14.7 சதவீதம் (ரூ. 233,360 இலட்சம்) கொண்ட உயர்ந்த வளர்ச்சியைப் பதிவு செய்தமைக்கு தனியார்துறைக் கூறுகளுக்கான கொடுகடனில் 21 சதவீதமான (ரூ. 239,170 இலட்சம்) உயர்ந்த வளர்ச்சி காணப்பட்டமையே பெருமளவிற்குக் காரணமாகும்.

உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட விரிவாக்கம் வங்கித் தொழில் முறையினால் வழங்கப்பட்ட அரசிற்கான தேறிய கொடுகடன் 1993 இன் 17 சதவீதம் (ரூ. 73,460 இலட்சம்) கொண்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு மாறாக 4 சதவீதத்தினால் (ரூ. 13,930 இலட்சம்) உயர்ந்தமையினால் மேலும் தீவிரமடைந்தது. அரசின் வைப்புக்கள் ரூ. 10,110 இலட்சத்தினால் அதிகரிக்கப்பட்டு சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் ரூ. 2,370 இலட்சத்தினால் குறைக்கப்பட்டபோதும் மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 17,600 இலட்சத்தினால் அதிகரித்தமைக்கு மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ஏறத்தாழ ரூ. 11,450 இலட்சத்தினால் அதிகரித்தமையும் அரசுக்கான தற்காலிக முற்பணங்கள் ரூ. 18,630 இலட்சத்தினால் அதிகரித்தமையும் காரணமாக அமைந்து 1994 இல் பாதகமான இறைச் சூழ்நிலையை பிரதிபலித்தன. அதேவேளை ஆய்விற்குரிய ஆண்டில் வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான கொடுகடன் வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான மொத்தக் கொடுகடன் ரூ. 23,820 இலட்சத்தினால் அதிகரித்தபோதும் அரச வைப்பு நிலுவைகள் ரூ. 29,860 இலட்சத்தினால் அதிகரித்தமையின் காரணமாக வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 6,040 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது.

1994 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 33.6 சதவீதத்தினால் (ரூ. 26,120 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. மசகெண்ணெயின் பன்னாட்டு விலைகள் பெருமளவு குறைவடைந்தமை காரணமாக திருந்திய நிதி நிலையை பிரதிபலிக்கின்ற விதத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால்

பயன்படுத்தப்பட்ட கடன் 1993 இன் ரூ. 4,160 இலட்சங்கொண்ட விரிவிற்கு மாறாக ரூ. 24,000 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. கூ.மொ. விற்பனை நிலையத்தினால் விற்கப்பட்ட கோதுமை மாவின் மொத்த விற்பனை விலை 1994 யூலையிலும் மீண்டும் ஓகத்திலும் குறைக்கப்பட்ட போதும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் வங்கிக் கடன்பாடு ரூ. 670 இலட்சத்தினால் சிறிதளவு அதிகரித்தமைக்கு குறிப்பாக ஆண்டின் தொடக்கப் பகுதியில் நிலவிய சாதகமான பன்னாட்டு கோதுமை விலைகளும், சலுகை ஒழுங்குகளின் கீழ் கோதுமைத் தானியம் கிடைக்கத்தக்கதாயிருந்தமையுமே காரணமாகும். இலங்கை சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கான வெளிநின்ற முற்பணங்கள் அக்கூட்டுத்தாபனம் தனியார் மயமாக்கப்பட்டதன் விளைவாக ரூ. 3,840 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை கூட்டுறவு நிறுவனங்களுக்கான மொத்த வங்கிக் கொடுகடன் 1993 இன் ரூ. 19,030 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 25,410 இலட்சத்திற்கு அதிகரித்தது.

தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக திரண்ட சென்மதி நிலுவை நிலைமையில் காணப்பட்ட மிகையின் தாக்கத்தின்கீழ் இவ்வாண்டில் வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இன் 87.9 சதவீதம் (ரூ. 212,380 இலட்சம்) கொண்ட பெருமளவு வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 37.7 சதவீதம் (ரூ. 171,020 இலட்சம்) கொண்ட மேலுமொரு உயர்வினைப் பதிவு செய்தன. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூ. 142,880 இலட்சத்தினால் உயர்வடைந்த வேளையில் வர்த்தக வங்கிகளின் அத்தகைய சொத்துக்கள் ரூ. 28,140 இலட்சத்தினால் விரிவடைந்தன.

மத்திய வங்கியின் வெளிநாட்டு ஒதுக்குகளின் அமைப்பில் வெளிநாட்டுப் பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் ரூ. 143,740 இலட்சத்தினால் உயர்வடைந்த வேளையில் வெளிநாட்டிலுள்ள காசு மற்றும் நிலுவைகள் ரூ. 49,850 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. பொறுப்புக்கள் பக்கத்தில், பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 41,390 இலட்சத்தினால் அதிகரித்தமைக்கு, பொருளாதார மீளமைப்பினை நோக்கமாகக் கொண்ட தற்பொழுது நடைமுறையிலுள்ள கொள்கைச் சீராக்கங்களுக்கு ஆதரவாக பன்னாட்டு நாணய நிதியத்துடனான அதிகரிக்கப்பட்ட அமைப்புச்சீராக்க வசதி உடன்படிக்கையின் மூன்றாவது ஆண்டின் கீழான முதலாவது தொகுதியின் பெறுகைகளே முக்கிய காரணமாகும்.

வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரித்தமைக்கு வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளுடனான வைப்புக்களும் வெளிநாட்டிலுள்ள வங்கிகளின் வைப்பு நிலுவைகளும் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 24.8 சதவீத (ரூ. 63,500 இலட்சம்) உயர்வினைப் பதிவு செய்து 1994 இறுதியில் ரூ. 319,170 இலட்சத்தினை அடைந்தன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள் 13.7 சதவீதத்தினால் (ரூ. 35,360 இலட்சம்) உயர்வடைந்தன. பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டு நாணய வைப்புக்கள் 1993 இல் ஏற்பட்ட 29.5 சதவீத (ரூ. 53,220 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15.4 சதவீதத்தினால் (ரூ. 36,020 இலட்சம்) அதிகரித்தமை காரணமாக ஏற்பட்டது. இதன்படி வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இறுதியின்

ரூ. 3,250 இலட்சங்கொண்ட எதிர்க்கணிய மட்டத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 24,890 இலட்சத்திற்கு உயர்வுற்று வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் ஒருதலைகீழான மாற்றத்தினை எடுத்துக்காட்டியது.

## வர்த்தக வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

இவ்வாண்டில் வர்த்தக வங்கித் தொழில் நடவடிக்கைகள் அதிகரித்த வைப்புக்கள் மற்றும் திருத்திய மூலதனத்தளம் என்பனவற்றுடன் விரிவடைந்தன. வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் நிலைமையில் காணப்பட்ட முன்னேற்றம் 1994 இல் அவதானிக்கப்பட்ட மிக முக்கியமானதொரு பண்பாகும். ஆய்விற்குரிய ஆண்டில் தனியாருக்குச் சொந்தமான வர்த்தக வங்கிகளின் பங்கு தொடர்ந்தும் வலுவடைந்ததுடன் நாட்டின் வங்கித் தொழில்முறையில் மேலும் ஆழமான போட்டித் தன்மையும் காணப்பட்டது. வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்களில் அரச வங்கிகளினது சொத்துக்களின் பங்கு 1990 இன் 67 சதவீதத்திலிருந்து 1993 இல் 64 சதவீதத்திற்கும் 1994 இல் மேலும் 62 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. அதே போன்று, வர்த்தக வங்கிகளின் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் இரு அரச வங்கிகளினதும் வைப்புக்களின் பங்கு 1990 இல் 68 சதவீதத்திலிருந்து 1993 இல் 61 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து 1994 இல் 60 சதவீதத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது.

வைப்புப் பொறுப்புக்களில் ஏற்பட்ட உறுதியான அதிகரிப்பினது செல்வாக்கின் கீழ் வர்த்தக வங்கித்தொழில் முறை 1994 இல் திரவத்தன்மையுடையதாக விளங்கியது. வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 23.4 சதவீதம் (ரூ. 125,040 இலட்சம்) கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 18.5 சதவீதத்தால் (ரூ. 122,040 இலட்சம்) அதிகரித்தன. திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் முக்கியமாக வெளிநாட்டு நிலுவைகள், கையிலுள்ள பணம், திறைசேரி உண்டியல்களிலான முதலீடு என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பினூடாக ஏற்பட்டது. இவ்வாண்டில் வைப்புப் பொறுப்புக்களுடன் ஒப்பிடுகையில் திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட மெதுவான அதிகரிப்பினைப் பிரதிபலிக்கின்றவிதத்தில் கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1993 இறுதியில் 190.8 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் 187.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 40.6 சதவீதத்திலிருந்து 40.2 சதவீதத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

### சொத்துக்கள் பொறுப்புக்களின் அமைப்பு

இவ்வாண்டுக்காலத்தில் வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்/ பொறுப்புக்கள் (எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் 32 சதவீதம் (ரூ. 593,970 இலட்சம்) கொண்ட மிக உயர்ந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்தினால் (ரூ. 371,620 இலட்சம்) விரிவடைந்தன. எனினும் வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்களில் சில அமைப்பு ரீதியிலான மாற்றங்கள்

## அட்டவணை 1.67

## வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1993 – 1994

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1993 | 1994 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதி ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 18,172 | 23,365 | 20,562 | 25,389 |
| வெளிநாட்டு நிலுவைகள் | 19,653 | 22,353 | 20,529 | 26,804 |
| திறைசேரி உண்டியல்கள் | 11,230 | 13,957 | 14,274 | 15,143 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் | 10,712 | 10,904 | 10,541 | 10,773 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் | 59,766 | 70,578 | 65,905 | 78,109 |
| மொத்த முதலீடுகள் (அ) | 3,188 | 8,531 | 5,176 | 10,861 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் (ஆ) | 109,667 | 42,160 | 114,641 | 132,447 |
| கேள்வி வைப்புக்கள் (இ) | 31,810 | 37,377 | 34,543 | 41,678 |
| தவணை, சேமிப்பு வைப்புக்கள் (ஈ) | 114,058 | 138,600 | 127,919 | 152,601 |
| மொத்த வைப்புக்கள் | 145,868 | 175,977 | 162,462 | 194,279 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 57.1 | 62.5 | 59.5 | 60.9 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் | 12.5 | 13.3 | 12.7 | 13.1 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் | 13.5 | 12.7 | 12.6 | 13.8 |
| மொத்த வைப்புக்களுக்கு திறைசேரி உண்டியல்களின் விகிதம் | 7.7 | 7.9 | 8.8 | 7.8 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் | 7.3 | 6.2 | 6.5 | 5.5 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் | 187.9 | 188.8 | 190.8 | 187.4 |
| மொத்த வைப்புகளுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம் | 41.0 | 40.1 | 40.6 | 40.2 |
| மொத்த வைப்புக்களுக்கு முதலீட்டின் விகிதம் | 2.2 | 4.8 | 3.2 | 5.6 |
| மொத்த வைப்புகளுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் | 75.2 | 24.0 | 70.6 | 68.2 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், மத்திய வங்கிப் பிணைகளும், தனியார் பிணைகளும், திறைசேரி உண்டியல்கள் நீங்கலாக

(ஆ) கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் நீங்கலாக

(இ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்கள் நீங்கலாக.

(ஈ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ் அரச வங்கிகளால் 1993 ஆம் ஆண்டிலும் 1994 ஆம் ஆண்டிலும் நீண்டகால தவணை வைப்புக்களாகத் திரட்டப்பட்ட தொகையான ரூ. 37,190 இலட்சத்தையும் ரூ. 31,740 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

## அட்டவணை 1.68

### வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1992 – 1994

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | 1992/1993 இறுதி | | 1993/1994 இறுதி | |
|---|---|---|---|---|
| | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| 1. **அரசதுறை** | - | **7,584.3** | **604.3** | - |
| அரச பிணைகளின் உடமைகள் | - | 3,391.3 | - | 1,410.6 |
| வைப்புக்கள் | - | 2,770.5 | 2,985.8 | - |
| இறக்குமதி உண்டியல்கள் | - | 904.8 | - | 397.6 |
| குறுந்தவணைக் கொடுகடன் | - | 659.4 | - | 604.8 |
| மேலதிகப் பற்றுக்கள் | 141.7 | - | 31.5 | - |
| 2. **மத்திய வங்கி** | - | **5,644.4** | - | **9,850.2** |
| கடன்பாடுகள் | 240.2 | - | - | 1,789.2 |
| ஒதுக்குகள் | - | 3,662.2 | - | 4,468.0 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் | - | 1,612.0 | - | 3,234.0 |
| கையிலுள்ள காசு | - | 610.4 | - | 359.0 |
| 3. **அரச கூட்டுத்தாபனங்கள்** | **9,870.8** | -- | **5,107.4** | - |
| வைப்புக்கள் | 2,896.0 | - | 2,495.9 | - |
| முற்பணங்கள் | 6,974.8 | - | 2,611.5 | - |
| 4. **கூட்டுறவுகள்** | **690.7** | - | - | **142.8** |
| வைப்புக்கள் | 572.8 | - | 494.9 | - |
| முற்பணங்கள் | 117.9 | - | - | 637.7 |
| 5. **ஏனைய உள்நாட்டு தனியார்துறை** | **8,299.4** | - | - | **1,687.0** |
| வைப்புக்கள்* | 28,099.9 | - | 22,229.9 | - |
| உள்நாட்டு உண்டியல்கள் | 22.2 | - | - | 2.7 |
| இறக்குமதி உண்டியல்கள் | - | 1,601.2 | 332.5 | - |
| மேலதிகப் பற்றுக்கள் | - | 5,747.5 | - | 7,066.8 |
| கடன்கள் | - | 11,528.9 | - | 13,658.4 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு | - | 945.1 | - | 3,521.5 |
| 6. **வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** | **480.5** | - | **2,024.8** | - |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை | - | 644.5 | - | 1,179.4 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் | 1,125.0 | - | 3,204.2 | - |
| 7. **வெளிநாட்டுத் துறை** | - | **2,286.8** | - | **2,723.5** |
| கடன்பாடுகள் | 11.9 | - | 16.7 | - |
| வைப்புக்கள் | 106.9 | - | 3,610.5 | - |
| வெளிநாட்டு நிலுவைகள் – ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட | - | 2,405.6 | - | 6,350.7 |
| 8. **ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | - | **3,825.9** | **6,667.0** | - |
| மூலதனமும் ஒதுக்குகளும் | 11,983.0 | - | 6,427.5 | - |
| நிலையான ஏனைய சொத்துக்கள் | - | 32,940.9 | 2,753.4 | - |
| ஏனைய பொறுப்புக்கள் | 17,132.0 | - | - | 2,513.9 |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் | 19,341.4 | | 14,403.5 | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

* சிறப்புச் சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை அல்லது தேறிய பயன்பாட்டினை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

காணப்பட்டன. மொத்தச் சொத்துக்களில் திரவச் சொத்துக்களின் பங்கு 1993 இன் 27.0 சதவீதத்திலிருந்து 1994 இல் 27.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அரச பிணைகளிலான வெளிநாட்டுச் சொத்துக்களும் முதலீடுகளும் மற்றும் ஏனைய கருவிகளின் முதலீடுகள் என்பனவற்றின் பங்குகள் 8.4 சதவீதத்திலிருந்தும் 8.0 சதவீதத்திலிருந்தும் முறையே 9.5 சதவீதத்திற்கும் 9.3 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. நிலையான சொத்துக்களின் பங்கு 1993 இன் 21 சதவீதத்திலிருந்து 1994 இல் 17.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்த வேளையில் மொத்தக் கடன்கள் முற்பணங்களின் பங்கு 51 சதவீதத்தில் மாற்றமின்றியிருந்தது. பொறுப்புக்கள் பக்கத்தில், கேள்வி வைப்புக்களின் பங்கு 14.2 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு அதிகரித்தவேளையில் தவணை சேமிப்பு வைப்புக்கள் 51.1 சதவீதத்திலிருந்து 53 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. மொத்தப் பொறுப்புக்களில் செலுத்தப்பட்ட மூலதனத்தின் பங்கு 1 சதவீதப்புள்ளியால் 10 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் ஏனைய பொறுப்புக்களின் பங்கு 21.1 சதவீதத்திலிருந்து 17.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

வைப்புக்கள், மூலதனத்தளம் மற்றும் உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான அதிகரிப்புகளே கடன்பாடுகள் என்பனவற்றில் ஏற்பட்ட வர்த்தக வங்கிகளின் மூலவளத்தளம் விரிவடைய முக்கிய உதவிக் காரணிகளாக விளங்கியதாகப் பொறுப்புக்கள் மீதான பகுப்பாய்வு வெளிப்படுத்துகிறது. இவ்வாண்டுக்காலத்தில் ரூ. 312,520 இலட்சங்கொண்ட மொத்த வைப்புக்கள் கட்டியெழுப்பப்பட்டமைக்கு கேள்வி வைப்புக்கள் 20.6 சதவீதத்தினாலும் (ரூ. 71,160 இலட்சம்) தவணை சேமிப்பு வைப்புக்கள் 19.3 சதவீதத்தினாலும் (ரூ. 241,370 இலட்சம்) அதிகரித்தமையே காரணமாகும். அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் செலுத்தப்பட்ட மூலதனம், ஒதுக்கு நிதியம், பங்கிடப்படாத இலாபம் என்பனவற்றை உள்ளடக்கிய மூலதனத்தளம் 29.4 சதவீதத்தினால் (ரூ. 64,280 இலட்சம்) அதிகரித்தது. இதற்குப் பசில் உடன்படிக்கையின்கீழ் இடர் நிறையேற்றப்பட்ட மூலதன நிறைவு விகிதத்திற்கான தேவைப்பாட்டிற்கு இணங்கும் பொருட்டு வங்கிகள் தமது மூலதனத் தளத்தை அதிகரித்தமையே ஓரளவிற்குக் காரணமாகும். வங்கிகள் இவ்விகிதத்தை 1994 இலிருந்து பேணுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டன. உள்நாட்டு வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள் 15.7 சதவீதத்தினால் (ரூ. 14,340 இலட்சம்) அதிகரித்தவேளையில் வெளிநாட்டுக் கடன்பாடுகள் 0.8 சதவீதத்தினால் (ரூ. 167 இலட்சம்) சிறிதளவு அதிகரித்தன. ஆய்விற்குரிய ஆண்டில் வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் 3.8 சதவீதத்தினால் (ரூ. 19,690 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன.

விரிவடைந்த மூலவளத்தளம் இவ்வாண்டில் மொத்தச் சொத்துப் பட்டியலை விரிவடையச் செய்தது. இதன்படி, மொத்தக்கடன்கள் மற்றும் முற்பணங்கள் 1993 இன் 11.1 சதவீதம் (ரூ. 125,470 இலட்சம்) கொண்ட விரிவுடன் ஒப்பிடுகையில் 14.4 சதவீதத்தினால் (ரூ. 180,390 இலட்சம்) அதிகரித்தன. திறைசேரி உண்டியல்களிலான முதலீடுகள் 6 சதவீதத்தினால் (ரூ. 8,690 இலட்சம்) உயர்வடைந்த வேளையில் 1994 இறுதியில் அரச, அரச உத்தரவாதப் பிணைகள், மத்திய வங்கிப் பிணைகள் மற்றும் தனியார் பிணைகளை உள்ளடக்கிய ஏனைய முதலீடுகள் 110 சதவீதத்தினால் (ரூ. 56,850 இலட்சம்) அதிகரித்தன. கையிலுள்ள வெளிநாட்டு நாணயம் மற்றும் வெளிநாட்டு வங்கிகளிலிருந்து வரவேண்டிய நிலுவைகள் என்பன இவ்வாண்டுக்காலத்தில் 30.6 சதவீதத்தினால் (ரூ. 62,760 இலட்சம்) அதிகரித்தன.

திரவச் சொத்துக்கள் 18.5 சதவீதத்தினால் விரிவடைந்தமைக்கு வெளிநாட்டு நிலுவைகள் 30. 6 சதவீதத்தினாலும் (ரூ. 62,760 இலட்சம்) திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடுகள் 6.0 சதவீதத்தினாலும் (ரூ. 8,690 இலட்சம்) கையிலுள்ள பணம் மற்றும் மத்திய வங்கியுடனான வைப்புக்கள் 23.4 சதவீதத்தினாலும் (ரூ. 48,270 இலட்சம்) அதிகரித்தமையே முக்கிய காரணமாகும்.

## நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்

1994 இல் அரச கூட்டுத்தாபனங்கள், அரசு, வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள், வர்த்தக வங்கிகளின் மூலதனம் மற்றும் ஒதுக்குத்தளம் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய பொறுப்புக்கள் என்பன வர்த்தக வங்கிகளுக்கு மூலவளத் தளத்தை வழங்கிய வேளையில் மத்திய வங்கி, வெளிநாட்டுத்துறை, உள்நாட்டுத்தனியார்துறை, கூட்டுறவு நிறுவனங்கள் என்பன மூலவளங்களை ஈர்த்துக்கொண்டன.

மூலப்பக்கத்தில், முக்கிய அரச தொழில் முயற்சிகளின் திருந்திய நிதியியல் செயலாற்றத்தினை உறுதிப்படுத்துகின்ற விதத்தில் அரச கூட்டுத்தாபனங்கள் வங்கியில் ரூ. 24,960 இலட்சங்கொண்ட அதிகரித்த வைப்புக்களை செய்வதன் மூலமும், முற்பணங்களை குறைத்ததன் மூலமும் வர்த்தக வங்கித் தொழில் முறைக்கு ரூ. 51,070 இலட்சம் பெறுமதி கொண்ட நிதியினை வழங்கின. 1994 இல் அரச கூட்டுத்தாபனங்களுக்கான முற்பணங்கள் ரூ. 26,120 இலட்சத்தினால் குறைவடைந்தமைக்கு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வெளிநின்ற கடன்கள் 69.6 சதவீதத்தினால் (ரூ. 24,010 இலட்சம்) குறைவடைந்தமையே முக்கிய காரணமாகும்.

1994 இல் அரசதுறை, வர்த்தக வங்கிகளுக்கான நிதியின் நிரம்பலராக மாறி 1993 இன் ரூ. 75,840 இலட்சங்கொண்ட தேறிய பயன்பாட்டிற்கு எதிராக 1994 இல் ரூ. 6,040 இலட்சத்தினை வழங்கி நிதியத்தின் தேறிய வழங்குநராக மாறியது. இதற்கு அரச வைப்புக்கள் ரூ. 29,860 இலட்சத்தினால் அதிகரித்தமையே முக்கிய காரணமாகும். அதேவேளை இறக்குமதி உண்டியல்கள் மீதான முற்பணங்கள் மற்றும் குறுங்காலக் கொடுகடன் என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட ரூ. 10,020 இலட்சத்திற்குப் புறம்பாக அரச பிணைகளிலுள்ள வங்கித் தொழில்துறை முதலீடுகள் ரூ. 14,110 இலட்சத்தினால் அதிகரித்தன.

1994 இல் வர்த்தக வங்கிகளின் காசுப் பாய்ச்சலுக்கு வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் முன்னைய ஆண்டில் வழங்கப்பட்ட ரூ. 4,810 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 20,250 இலட்சத்தை வழங்கின. அத்துடன் அதிகரித்த மூலதன மற்றும் மூலவள அடிப்படையினூடாக ரூ. 64,280 இலட்சம் வங்கித்தொழில் முறைக்குச் செலுத்தப்பட்டது. இதற்கு 1994 மாச்சின் பின்னர் 8 சதவீதம் கொண்ட ஆகக்குறைந்த இடர் நேர்விளை மூலதன போதுமை விகிதத்திற்கான தேவைப்பாட்டினை நிறைவேற்ற வர்த்தக வங்கிகள் முயற்சி எடுத்தமையே ஓரளவிற்குக் காரணமாகும்.

1994 இல் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நடவடிக்கைகள் தேறிய அடிப்படையில் ரூ. 98,500 இலட்சத்தினை வர்த்தக வங்கிகளிடமிருந்து

வெளியேற்றியதன் மூலம் வங்கி அவற்றின் மூலவளங்களில் பெரும்பங்கினை ஈர்த்துக்கொண்டது. நியதி ஒதுக்குத் தேவைகள் உயர்வாக விளங்கியமையால் மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் ஒதுக்குகள் ரூ. 44,680 இலட்சத்தினால் அதிகரித்து வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வைப்புத் தளத்துடன் ஒத்திருந்தன. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் கையிருப்புக் குறைவடைந்தமையினால் நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1994 இல் வங்கி தொடர்ந்தும் தனது சொந்தப் பிணைகளை வழங்கியது. இக்கொள்கை நடவடிக்கையானது 1994 இல் வர்த்தக வங்கிகள் மத்திய வங்கியில் ரூ. 32,340 இலட்சங்கொண்ட தொகையினை முதலிடச் செய்தது. மேலும் ஒதுக்குப்பண விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் மத்திய வங்கியினால் குறுங்கால மீள் நிதியிடல் வசதிகள் நிறுத்தப்பட்டமையும் நடுத்தர நீண்டகால மீள் நிதியிடல் கொடுகடன்கள் கட்டுப்படுத்தப்பட்டமையும் மத்திய வங்கியிடமிருந்தான வர்த்தக வங்கிகளின் கடன்பாடுகள் ரூ. 17,890 இலட்சத்தால் குறைவடைவதற்குப் பங்களித்தன. எனினும் ஆண்டின் இறுதிப்பாகத்தில் அரசின் இறைத்தொழிற்பாடுகள் மோசமடைந்தமை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களையும் உள்ளடக்கிய அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணைகளின் உடைமைகளை ரூ. 11,450 இலட்சத்தால் உயர்வடையச் செய்தது.

1994 இல் நிலவிய குறைந்த வட்டி வீதங்களின் மத்தியிலும் உள்நாட்டுத் தனியார்துறையிலிருந்தான வைப்புக்களின் மூலம் வர்த்தக வங்கிகள் ரூ. 222,300 இலட்சத்தைத் திரட்டிய வேளையில் கடன்கள், முற்பணங்கள் மூலமாக உள்நாட்டுத் தனியார்துறைக்கு ரூ. 203,950 இலட்சம் கொண்ட காசு வெளிப்பாய்ச்சலை பதிவு செய்தன. இதே வேளையில் வர்த்தக வங்கிகளினால் தனியார்துறைப் பிணையங்களிலும் முறிகளிலும் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் ரூ. 35,220 இலட்சத்தினால் அதிகரித்தன. 1994 இல் தனியார்துறையினரின் மூலவளப் பயன்பாடு வங்கித் தொழில்முறையில் அது உள்ளிட்ட தொகையினை ரூ. 16,870 இலட்சத்தால் விஞ்சியது.

முன்னைய ஆண்டினைப் போன்றே வெளிநாட்டுத் துறையானது நிதியங்களின் தேறிய பயன்பாட்டாளராக விளங்கியதோடு 1994 இல் வர்த்தக வங்கிகளின் மூல வளங்களில் ரூ. 27,240 இலட்சத்தினை ஈர்த்தது. வைப்புக்கள் மற்றும் கடன்களினூடாக வெளிநாட்டுத் துறையினால் வழங்கப்பட்ட மூலவளங்கள் ரூ. 36,270 இலட்சத்தினால் அதிகரித்தவேளையில் வர்த்தகவங்கிகளின் வெளிநாட்டு நிலுவைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் மூலம் வெளிநாட்டுத் துறைகளில் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் ரூ. 63,510 இலட்சத்தினால் அதிகரித்தன. இதே வேளையில் கூட்டுறவுத்துறை முன்னைய ஆண்டின் ரூ. 6,910 இலட்சங்கொண்ட உள்ளிடலுக்கு மாறாக 1994 இல் தேறிய அடிப்படையில் ரூ. 1,430 இலட்சத்தினைப் பயன்படுத்தியது.

இதே வேளையில், மொத்த வைப்புக்களின் வளர்ச்சியானது (19.6 சதவீதம் அல்லது ரூ. 312,520 இலட்சம்) மொத்தக் கடன்களையும் முற்பணங்களையும் (14.4 சதவீதம் அல்லது ரூ. 180,390 இலட்சம்) தொடர்ந்தும் விஞ்சியபடியினால் இவ்வாண்டில் வர்த்தக வங்கித் தொழில்துறை வைப்பு மிகையொன்றினைக் கொண்டிருந்தது. மொத்த வைப்புக்களுக்கான மொத்தக் கடன்களினதும் முற்பணங்களினதும் விகிதம் 1993 இறுதியின் 78.6 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில்

75.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டின் அதே போக்கினைத் தொடர்ந்து தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கடன் 1994 இல் 21 சதவீதத்தினால் (ரூ. 239,170 இலட்சம்) வளர்ச்சியடைந்தது.

**வர்த்தக வங்கிக் கடன்கள் முற்பணங்களின் பகிர்ந்தளிப்பு***

தனியார்துறை, அரச தொழில் முயற்சிகள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் என்பனவற்றிற்கான வர்த்தக வங்கியின் வெளிநின்ற கடன்களும் முற்பணங்களும் 1993 இன் இணையான காலப்பகுதியின் 15.7 சதவீத வளர்ச்சியுடன் (ரூ. 168,230 இலட்சம்) ஒப்பிடுகையில் 15.3 சதவீத (ரூ. 189,780 இலட்சம்) வளர்ச்சியைப் பதிவு செய்தன. இக்காலப்பகுதியில் வர்த்தக வங்கிகள் பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளுக்கும் தமது கடன் வழங்கலை அதிகரித்தன. கடன்களினதும் முற்பணங்களினதும் பாரிய பாகமொன்று வர்த்தக நோக்கங்களுக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்ட குறுகியகால தன்மையினதாக விளங்கியது.

மொத்தக் கடன்களினதும் முற்பணங்களினதும் கணிசமான பாகமொன்று (44 சதவீதம்) ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் உள்நாட்டு வர்த்தக நோக்கங்களை உள்ளடக்கிய வர்த்தக நடவடிக்கைகளை நிதியிடுதலுக்கு பயன்படுத்தப்பட்டது. இந்த வகையில் கடன்கள் முற்பணங்களில் 73 சதவீதம் குறுகிய கால முற்பணங்களின் வடிவில் காணப்பட்டன. வர்த்தகத்துறையில் வெளிநின்ற கடன் தொகை 1993 இன் 29 சதவீத (ரூ. 134,430 இலட்சம்) வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1994 இல் 3 சதவீதத்தினால் (ரூ. 21,770 இலட்சம்) மட்டுமே அதிகரித்தது.

1994 செத்தெம்பரில் முடிவடைந்த பன்னிரண்டு மாத காலப்பகுதியின் குறிப்பிடத்தக்க பண்பு என்னவெனில் கைத்தொழில்துறைக்கான கடன்கள் 1993இன் நேரிணையான காலப்பகுதியின் 8 சதவீத (ரூ. 15,360 இலட்சம்) வீழ்ச்சிக்கு மாறாக 14 சதவீதத்தினால் (ரூ. 23,430 இலட்சம்) அதிகரித்தமையாகும். இத்துறையில் வெளிநின்ற கடன்தொகையின் பங்கு மொத்தக் கடன்கள் முற்பணங்களில் 14 சதவீதமாகும். கைத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை குறுகிய கால வகையினுள் காணப்பட்டதுடன் இது கைத்தொழில் துறையின் மொத்த வெளிநின்ற கடன்களின் 70 சதவீதத்திற்கும் வகைகூறியது. இதேவேளையில் கைத்தொழில் நோக்கங்களுக்கான நடுத்தரகாலக் கடன்களின் வெளிநின்ற தொகை 1993 செத்தெம்பர் இறுதியின் 15 சதவீதத்திலிருந்து 1994 செத்தெம்பர் இறுதியில் 18 சதவீதத்திற்கு அதிகரித்தது. 1994 செத்தெம்பர் இறுதியில் வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திக்கான வர்த்தக வங்கிக் கடன்களின் வெளிநின்ற தொகை மொத்த வங்கிக் கடன்களின் 14 சதவீதத்திற்கு வகைகூறியதோடு ரூ. 194,350 இலட்சமாக விளங்கி 1993 செத்தெம்பர் இறுதியின் பெறுமதியினைவிட 38 சதவீத (ரூ. 53,540 இலட்சம்) அதிகரிப்பைப் பதிவு செய்தது. வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்திக்கான கடன்களின் பெரிய பகுதி (59 சதவீதம்) நீண்டகால கடன்வகையில் காணப்பட்டது.

1994 இல் வேளாண்மைத் துறையின் கடன் பயன்பாடு 1993 இன் 20 சதவீத வீழ்ச்சிக்கு எதிராக (ரூ. 23,160 இலட்சம்) 10 சதவீதத்தினால் (ரூ. 8,830 இலட்சம்) அதிகரித்தது. மொத்தக் கடன்கள் முற்பணங்களின் வெளிநின்ற தொகையில்

---

* இப்பிரிவிற்கான பகுப்பாய்வுகள் 1994 இன் முதல் மூன்று காலாண்டுகளினது தரவுகளின் அடிப்படையிலானதாகும்.

## அட்டவணை 1.69

### நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1993 – 1994

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | குறுங்காலம் (1 ஆண்டிற்கு குறைவான) | | நடுத்தரக்காலம் (1 தொக்கம் 5 ஆண்டுகள் வரை) | | நீண்டகாலம் (5 ஆண்டுகளுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (1) தொகை ரூ.ப.இ. | (2) (7) இன் % ஆக (1) | (3) தொகை ரூ.ப.இ. | (4) (7) இன் % ஆக (3) | (5) தொகை ரூ.ப.இ. | (6) (7) இன் % ஆக (5) | (7) தொகை ரூ.ப.இ. | (8) மொத்தத்தன் சத வீதமாக (7) |
| **1. வர்த்தகம்** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 43,851.9 | 72.3 | 10,248.3 | 16.9 | 6,511.4 | 10.7 | 60,610.6 | 47.3 |
| 1994 மாச்சு | 41,693.5 | 73.9 | 10,042.0 | 17.8 | 4,682.7 | 8.3 | 56,418.2 | 42.3 |
| 1994 யூன் | 44,238.9 | 74.0 | 11,054.6 | 18.5 | 4,509.1 | 7.5 | 59,802.6 | 44.1 |
| 1994 செத்தெம்பர் | 45,452.8 | 72.6 | 11,835.1 | 18.9 | 5,292.5 | 8.5 | 62,580.4 | 43.9 |
| **2. நிதியியல்** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 4,186.2 | 72.4 | 1,049.0 | 18.1 | 548.2 | 9.5 | 5,783.4 | 4.5 |
| 1994 மாச்சு | 3,798.4 | 55.6 | 2,657.4 | 38.9 | 381.8 | 5.6 | 6,837.6 | 5.1 |
| 1994 யூன் | 3,458.0 | 58.6 | 2,056.8 | 34.8 | 390.9 | 6.6 | 5,905.7 | 4.4 |
| 1994 செத்தெம்பர் | 3,422.0 | 54.5 | 2,244.6 | 35.7 | 617.2 | 9.8 | 6,283.8 | 4.4 |
| **3. வேளாண்மை** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 5,308.6 | 59.3 | 1,847.3 | 20.6 | 1,793.6 | 20.0 | 8,949.5 | 7.0 |
| 1994 மாச்சு | 5,390.2 | 63.8 | 1,788.2 | 21.2 | 1,263.9 | 15.0 | 8,442.3 | 6.3 |
| 1994 யூன் | 6,427.7 | 66.7 | 1,951.7 | 20.2 | 1,261.4 | 13.1 | 9,640.8 | 7.1 |
| 1994 செத்தெம்பர் | 6,991.2 | 69.4 | 1,913.2 | 19.0 | 1,174.6 | 11.7 | 10,079.0 | 7.1 |
| **4. கைத்தொழில்**** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 12,067.1 | 65.4 | 2,583.4 | 14.0 | 3,799.8 | 20.6 | 18,450.3 | 14.4 |
| 1994 மாச்சு | 12,233.5 | 67.7 | 2,503.0 | 13.8 | 3,340.5 | 18.5 | 18,077.0 | 13.6 |
| 1994 யூன் | 13,018.2 | 72.1 | 2,818.4 | 15.6 | 2,219.8 | 12.3 | 18,056.4 | 13.3 |
| 1994 செத்தெம்பர் | 13,551.9 | 69.5 | 3,468.5 | 17.8 | 2,488.3 | 12.8 | 19,508.7 | 13.7 |
| **5. சுற்றுலா** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 963.2 | 44.8 | 504.3 | 23.5 | 682.9 | 31.8 | 2,150.4 | 1.7 |
| 1994 மாச்சு | 970.9 | 50.9 | 419.3 | 22.0 | 516.6 | 27.1 | 1,906.8 | 1.4 |
| 1994 யூன் | 1,084.5 | 55.3 | 362.6 | 18.5 | 515.3 | 26.3 | 1,962.4 | 1.4 |
| 1994 செத்தெம்பர் | 998.3 | 50.2 | 466.8 | 23.5 | 524.2 | 26.4 | 1,989.3 | 1.4 |
| **6. வீடமைப்பு** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 3,111.2 | 21.8 | 3,792.2 | 26.6 | 7,379.8 | 51.7 | 14,283.2 | 11.1 |
| 1994 மாச்சு | 3,068.3 | 17.9 | 3,854.2 | 22.4 | 10,260.0 | 59.7 | 17,182.5 | 12.9 |
| 1994 யூன் | 3,299.7 | 18.3 | 4,216.0 | 23.4 | 10,514.1 | 58.3 | 18,029.8 | 13.3 |
| 1994 செத்தெம்பர் | 3,622.2 | 18.6 | 4,429.1 | 22.8 | 11,383.3 | 58.6 | 19,434.6 | 13.6 |
| **7. நுகர்வு** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 4,205.3 | 64.2 | 1,366.4 | 20.9 | 980.7 | 15.0 | 6,552.4 | 5.1 |
| 1994 மாச்சு | 10,348.5 | 78.7 | 1,391.4 | 10.6 | 1,409.6 | 10.7 | 13,149.5 | 9.9 |
| 1994 யூன் | 7,587.7 | 67.1 | 1,480.2 | 13.1 | 2,235.0 | 19.8 | 11,302.9 | 8.3 |
| 1994 செத்தெம்பர் | 7,676.9 | 70.0 | 1,610.7 | 14.7 | 1,677.6 | 15.3 | 10,965.2 | 7.7 |
| **8. ஏனைய கடன்கள்** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 5,816.4 | 50.7 | 3,606.3 | 31.4 | 2,057.7 | 17.9 | 11,480.4 | 9.0 |
| 1994 மாச்சு | 5,751.1 | 50.8 | 3,384.3 | 29.9 | 2,176.9 | 19.2 | 11,312.3 | 8.5 |
| 1994 யூன் | 7,059.0 | 64.9 | 2,520.9 | 23.2 | 1,292.8 | 11.9 | 10,872.7 | 8.0 |
| 1994 செத்தெம்பர் | 7,458.8 | 63.2 | 3,062.4 | 25.9 | 1,284.3 | 10.9 | 11,805.5 | 8.3 |
| **9. மொத்தம்** | | | | | | | | |
| 1993 திசெம்பர் | 79,508.9 | 62.0 | 24,997.2 | 19.5 | 23,754.1 | 18.5 | 128,260.2 | 100.0 |
| 1994 மாச்சு | 83,254.4 | 62.4 | 26,039.8 | 19.5 | 24,032.0 | 18.0 | 133,326.2 | 100.0 |
| 1994 யூன் | 86,173.7 | 63.6 | 26,461.2 | 19.5 | 22,938.4 | 16.9 | 135,573.3 | 100.0 |
| 1994 செத்தெம்பர் | 89,174.1 | 62.5 | 29,030.4 | 20.4 | 24,442.0 | 17.1 | 142,646.5 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

** பொறியியல், கட்டட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்.

## அட்டவணை 1.70

### பிணைகளின்படி முற்பணங்கள் * 1993 திசெம்பர் – 1994 செத்தெம்பர்

| விடயம் | 1993 திசெம்பர் 31 | | 1994 மாச்சு 31 | | 1994 யூன் 30 | | 1994 செத்தெம்பர் 30 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப. இ. ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப.இ.ரூ) | மொத்தத்தின் % |
| 1. ஆவண உண்டியல்கள் ... | 7,584.7 | 5.9 | 6,931.6 | 5.2 | 5,760.0 | 4.2 | 7,830.7 | 5.5 |
| 2. அரச பிணைகள் ... | 3,662.6 | 2.9 | 5,457.6 | 4.1 | 6,805.0 | 5.0 | 6,426.0 | 4.5 |
| 3. கூட்டுப் பங்கு நிலையங்களின் பங்குகள், முறிகள், தொகுதிக் கடன்கள், ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய பல்வகை விடயங்கள் ... | 3,650.4 | 2.8 | 3,955.6 | 3.0 | 6,117.9 | 4.5 | 4,634.0 | 3.2 |
| 4. நிலையான, சேமிப்பு, மற்றும் காசு வைப்புக்களும் வைப்புச் சான்றிதழ்களும் ... | 14,071.5 | 11.0 | 12,547.7 | 9.4 | 12,017.4 | 8.9 | 13,363.9 | 9.4 |
| 5. வர்த்தக இருப்புக்கள் ... | 12,386.7 | 9.7 | 9,050.2 | 6.8 | 11,264.4 | 8.3 | 12,634.0 | 8.9 |
| 6. அசைவற்ற சொத்து, பொறித் தொகுதி, பொறி ... | 27,687.7 | 21.6 | 34,370.3 | 25.8 | 33,182.0 | 24.5 | 35,016.6 | 24.5 |
| 7. தனியாள் உத்தரவாதங்கள், வாக்குறுதிப் பத்திரங்கள் ... | 17,829.8 | 13.9 | 19,422.5 | 14.6 | 21,348.3 | 15.7 | 23,405.4 | 16.4 |
| 8. நம்பிக்கைப் பற்றுச்சீட்டுக்கள் ... | 8,442.2 | 6.6 | 7,465.7 | 5.6 | 5,767.4 | 4.3 | 5,484.8 | 3.8 |
| 9. தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் ... | 1,880.3 | 1.5 | 2,067.9 | 1.6 | 1,808.4 | 1.3 | 1,775.6 | 1.2 |
| 10. உழவுப் பொறிகளும் – உந்து ஊர்திகளும் ... | 2,183.0 | 1.7 | 2,287.2 | 1.7 | 2,220.6 | 1.6 | 2,155.2 | 1.5 |
| 11. ஏனைய பிணைகள் ... | 22,243.5 | 17.3 | 20,048.1 | 15.0 | 21,207.2 | 15.6 | 18,698.1 | 13.1 |
| 12. பிணைகளற்றவை ... | 6,637.9 | 5.2 | 9,721.6 | 7.3 | 8,074.7 | 6.0 | 11,222.2 | 7.9 |
| மொத்தம் ... | 128,260.2 | 100.0 | 133,326.2 | 100.0 | 135,573.1 | 100.0 | 142,646.5 | 100.0 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

× சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகளை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களும் நீங்கலாக.

வேளாண்மைக் கடனின் பங்கு 1994 செத்தெம்பர் இறுதியில் 7 சதவீதமாக விளங்கியது. இதேவேளையில் நிதித்துறைக்கான கடன் ரூபா 62,840 இலட்சமாக விளங்கி 1994 செத்தெம்பர் இறுதியில் வெளிநின்ற மொத்தக் கடன்களில் 4 சதவீதத்திற்கு வகை கூறியது.

நுகர்வு சார்ந்த கடன்களுக்கான அதிகரித்த கேள்வியைக் குறித்துக் காட்டும் வகையில் நீண்டகால நுகர்வுப் பொருட்கள் மற்றும் தனியாள் தேவைகளுக்கான பொருட்கள் என்பனவற்றையும் உள்ளடக்கிய நுகர்வு நோக்கங்களுக்கான கடன்கள் முன்னைய ஆண்டின் 33 சதவீத (ரூ. 14,570 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 87 சதவீதத்தினால் (ரூ. 51,130 இலட்சம்) அதிகரித்தன. இந்நோக்கத்திற்கான கடன் 1993 செத்தெம்பர் இறுதியின் மொத்த வெளிநின்ற கடன்களில் 5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 செத்தெம்பர் இறுதியில் 8 சதவீதத்திற்கு வகை கூறியது.

1994 செத்தெம்பர் இறுதியில் வர்த்தக வங்கிக் கடன்கள் மற்றும் முற்பணங்களில் 36 சதவீதமானவை 21 – 25 வீச்சிலான வட்டிவீதங்களைக் கொண்டிருந்தன. ஒப்பிடுகையில் 1993 செத்தெம்பர் இறுதியின் வெளிநின்ற கடன்கள் முற்பணங்களில் 45 சதவீதம் இவ்வட்டிவீத வகையில் காணப்பட்டது. இதேவேளையில் 23 சதவீதமான கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டைப்போலவே 18 – 20 சதவீத வட்டிவீத வீச்சில் காணப்பட்டன. முன்னைய ஆண்டின் 17 சதவீதத்துடன ஒப்பிடுகையில், 26 – 30 சதவீத வட்டிவீத வீச்சில் அமைந்த கடன்களினதும் முற்பணங்களினதும் பங்கு 19 சதவீதமாக விளங்கியது. பிணைகளின்படியான முற்பணங்களின் பகுப்பாய்வின்படி அசையாச் சொத்துக்கள், தனியாள் உத்தரவாதங்கள், வைப்புக் கணக்குகள் ஆவண உண்டியல்கள், வர்த்தக கையிருப்புக்கள் என்பனவற்றிற்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்களில் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

## மத்திய வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

நாணயத்தளம் (ஒதுக்குப்பணம் அல்லது உயர்வலு நாணயம்) 1993 இறுதியின் ரூ. 564,670 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 680,550 இலட்சத்திற்கு அதிகரித்தது. மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் மெதுவான வளர்ச்சியினைப் பிரதிபலிக்கும் வகையில் நாணயத்தளத்தின் விரிவாக்கம் 1993 இன் 25.9 சதவீதத்திலிருந்து 1994 இல் 20.5 சதவீதத்திற்கு மிதமடைந்தது.

மத்திய வங்கியின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் 1994 இறுதியில் ரூ. 600,130 இலட்சத்தை அடைந்து 31.2 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. வெளிநாட்டிலிருந்தான அதிகரித்த பணவனுப்பல்களும் பன்னாட்டு ஒதுக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளிலிருந்தான வட்டி வருமானமுமே இதற்கான முதன்மைக் காரணியாகும். மத்திய வங்கி அதனது தேறிய உள்நாட்டுச் சொத்துக்களை 1993 இன் இறுதியின் ரூ. 107,420 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 80,420 இலட்சத்திற்கு மேலும் குறைத்துக் கொண்டது. பொறுப்புக்கள் பக்கத்தில்

சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 71,320 இலட்சத்தினால் (19.8 சதவீதம்) அதிகரித்தவேளையில் வர்த்தக வங்கி வைப்புக்கள் ரூ. 43,660 இலட்சத்தினால் (21.3 சதவீதம்) அதிகரித்தன.

## சொத்துக்கள், பொறுப்புக்களின் அமைப்பு

1994 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,559,580 இலட்சமாக விளங்கி 16.7 சதவீத (ரூ. 223,240 இலட்சம்) அதிகரிப்பைக் கொண்டிருந்தன. முன்னைய ஆண்டின் அதிகரிப்பு 32 சதவீதம் (ரூ. 323,800 இலட்சம்) ஆகும்.

சொத்துக்கள் பக்கத்தில் அதிகரிப்பானது, பெரும்பாலும் வங்கியின் வெளிநாட்டு சொத்துக்களின் அதிகரிப்பிலேயே காணப்பட்டது. காசு மற்றும் வெளிநாட்டிலுள்ள வங்கி நிலுவைகள், வெளிநாட்டுப் பிணைகள் மற்றும் திறைசேரி உண்டியல்கள், சிறப்பு எடுப்பனவு உரிமை உடைமை என்பவற்றை உள்ளடக்கிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 1993 இறுதியின் ரூ. 766,940 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 956,710 இல்ட்சத்திற்கு அதிகரித்தன. வெளிநாட்டுப் பிணைகளும் திறைசேரி உண்டியல்களும் ரூ. 243,740 இலட்சத்தினால் (41.8 சதவீதம்) அதிகரித்து ஆண்டு இறுதியில் ரூ. 826,480 இலட்சமாக விளங்கின. ரூ. 130,070 இலட்சமாக விளங்கிய காசும் வெளிநாட்டு நிலுவைகளும் ரூ. 53,944 இலட்ச (29.3 சதவீதம்) வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடமைகள் ரூ. 24 இலட்சத்தினால் (12.4 சதவீதம்) ரூ. 165 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன.

அரசுக்கான கடன்களும் முற்பணங்களும், வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள், அரச உத்தரவாதப் பிணைகள் மற்றும் ஏனைய சொத்துக்கள் என்பனவற்றை உள்ளடக்கிய உள்நாட்டுச் சொத்துக்கள் 1994 இல் ரூ. 33,460 இலட்சத்தினால் அதிகரித்தன. மத்திய வங்கியின் பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்களின் விற்பனையின் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவந்த திறந்த சந்தை நடவடிக்கையானது ஆண்டின் முதல் பதினொரு மாதங்களில் அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணைகளின் உடைமையினைக் குறைவடையச் செய்தது. அரசின் அரசிறை நடவடிக்கைகள் மோசமடைந்தமையானது 1994 திசெம்பரில் ரூ. 30,000 இலட்சம் வரையான திறைசேரி உண்டியல்களின் வழங்கல்களுக்கு இட்டுச் சென்றது. எனினும் சந்தைத் திரவத்தன்மையின் பருவகால வீழ்ச்சியானது இம்மாதத்தில் திறைசேரி உண்டியல்களின் மீதான தனியார்துறையின் முதலீட்டை குறைவடையச் செய்தது. இதன் விளைவாக மத்திய வங்கி வசமுள்ள அரச மற்றும் அரச உத்தரவாதப் பிணைகளின் உடைமைகள் 1994 திசெம்பரில் ரூ. 11,450 இலட்சத்தினால் அதிகரித்து 1994 இறுதியில் ரூ. 50,990 இலட்சத்தினை எய்தின.

அரசின் வைப்புக்கள் நீங்கலாக மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்களின் பேரிலான அரசுக்கான கடன்கள் 1994 இல் ரூ. 19,980 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. மேலும் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட (நீண்டகால, நடுத்தரகால, குறுகியகால) கடன்கள் 1993 இன் ரூ. 49,030 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 33,760 இலட்சத்திற்கு குறைவடைந்தன. குறுகிய

கால கடன்கள் வகையில் 1993 இறுதியின் ரூ. 7,530 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 720 இலட்சத்துக்கான பாரிய வீழ்ச்சியொன்று பதிவு செய்யப்பட்டது. குறுகிய கால மீள் நிதியிடல் கடன்கள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டமை நடுத்தரகால நீண்டகால கடன் நிதியத்தின் குறைப்பு என்பனவற்றின் விளைவாக மத்திய வங்கியின் மீள் நிதியிடல் திட்டங்கள் மீதான மொத்தக் கொடுகடன்கள் 1994 இல் ரூ. 2,710 இலட்சம் கொண்ட கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகள் நீங்கலாக ரூ. 12,560 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், மத்திய வங்கியின் வெளிநின்ற பிணைகளின் பெறுமதி திறந்த சந்தை நடவடிக்கைகளின் காரணமாக 1993 இன் ரூ. 21,550 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 37,400 இலட்சத்திற்கு (73.0 சதவீதம்) அதிகரித்தது. பன்னாட்டு அமைப்புக்கள், வெளிநாட்டு அரசுகள் மற்றும் வெளிநாட்டு வங்கித்தொழில் நிறுவனங்கள் என்பனவற்றின் வைப்புப் பொறுப்புக்கள் 1993 இன் ரூ. 309,690 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 356,580 இலட்சத்திற்கு அதிகரித்தன (15 சதவீதம்). பன்னாட்டு நாணய நிதியத்தின் அதிகரிக்கப்பட்ட மூன்றாவது ஆண்டு அமைப்புச் சீராக்க வசதிகளின் கீழான பகிர்ந்தளிப்புக்களின் பேரிலான அதிகரித்த பொறுப்புக்கள் மற்றும் பன்னாட்டு நாணய நிதியக்கணக்குகளின் ஆண்டு மீள்மதிப்பீட்டுச் சீராக்கங்கள் என்பனவே இதற்கான முதன்மைக் காரணமாக அமைந்தது. இதே வேளையில் உள்நாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 176,340 இலட்சத்தினால் அதிகரித்தன. 1994 இல் நியதி ஒதுக்குத் தேவைகளின்கீழ் மத்திய வங்கியில் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 21 சதவீதத்தினால் (ரூ. 43,660 இலட்சம்) அதிகரித்தவேளையில் சுற்றோட்டத்திலுள்ள நாணயம் ரூ. 71,320 இலட்சத்தினால் (19.8 சதவீதம்) அதிகரித்தன. ஏனைய பொறுப்புக்கள் 1993 இறுதியின் ரூ. 403,990 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 438,850 இலட்சத்திற்கு அதிகரித்தன.

## நாணயக் கொள்கை

மத்திய வங்கிப் பட்டியலில் திறைசேரி உண்டியல்கள் போதுமானளவு காணப்படாமையினால், தீவிரமான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற் கொள்வதில் பின்னடைவு காணப்பட்டபோதிலும் நாணயக் கூட்டுக்களின் உறுதியான உயர்வளர்ச்சியின் பின்னணியில் 1994 இல் கட்டுப்பாடான நாணயக் கொள்கையினைப் பின்பற்றும்படி மத்திய வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டது. மிகைத் திரவத் தன்மையினை ஈர்ப்பதற்கு மத்திய வங்கி தனது சொந்தப் பிணைகளின் வழங்கல்களிலேயே தங்கியிருக்க வேண்டியிருந்தது. ஒதுக்குப்பண விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வங்கி குறுகியகால மீள்நிதியிடல் கடன் வசதிகளையும் முடிவுக்குக் கொண்டுவந்ததோடு இடருக்குள்ளான நிதிக் கம்பனிகள் தவிர்ந்த ஏனையவற்றுக்கு நடுத்தரகால, குறுகியகால கடன் நிதியத்தின் கீழான கடன் வசதிகளின் வழங்கலையும் தவிர்த்துக் கொண்டது. மேலதிகமாக, கொடுகடன் விரிவாக்கத்தினைக் குறைக்கும் நோக்கில் 1993 ஓகத்தில் வைப்புப் பொறுப்புக்கள் மீது விதிக்கப்பட்ட 15 சதவீத அதியுயர் நியதி ஒதுக்குத் தேவை விகிதம் 1994 முழுவதிலும் பேணப்பட்டது.

திறைசேரி உண்டியல்கள் மூலம் திறந்த சந்தை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ள வாய்ப்புக்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள சூழலில் மேலதிகத்

திரவத் தன்மையினை ஈர்ப்பதற்காக மத்திய வங்கி 3 – 6 மாதகால முதிர்ச்சியைக்கொண்ட தனது சொந்தப் பிணைகளை வழங்கியது. இதன் விளைவாக மத்திய வங்கிப் பிணைகளின் பேரிலான வெளிநின்ற பொறுப்புக்கள் 1993 இறுதியின் ரூ. 21,550 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 37,400 இலட்சத்திற்கு அதிகரித்தன. மத்திய வங்கிப் பிணைகளின் மீதான சராசரி வருவாய் 12.06 – 18.37 சதவீத வீச்சில் காணப்பட்டது.

தொடர்ச்சியான திறந்த சந்தை நடவடிக்கையானது மத்திய வங்கிக்கு அதனது திறைசேரி உண்டியல் உடைமைகளை 1993 இறுதியின் ரூ. 39,490 இலட்சத்திலிருந்து 1994 செத்தெம்பர் இறுதியில் ரூ. 310 இலட்சத்திற்குக் குறைத்துக்கொள்ள இயலச் செய்தது. எனினும் அரசின் இறைத் தொழிற்பாடுகள் மோசமடைந்தமையின் காரணமாக 1994 திசெம்பரில் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 50,930 இலட்சத்திற்கு அதிகரித்தன.

ஒதுக்குப் பணத்தின் வளர்ச்சியினைக் கட்டுப்படுத்தும் மேலதிக வழிமுறையொன்றாக மத்திய வங்கி அதனது குறுகியகால மீள்நிதியிடல் வசதிகளை முடிவுக்குக் கொண்டு வந்தது. இந்த நடவடிக்கையின்போது புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான மீள்நிதியிடல் வசதிகளும் ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதிகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. நடுத்தரகால, நீண்டகால கொடுகடன் நிதியங்களின் கீழ் புதிய கடன் வழங்கல் வசதிகளும் மட்டுப்படுத்தப்பட்டன.

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டத்தின் கீழான மீள் நிதியிடல் வசதிகள் 1994 மாச்சு 31 இலிருந்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. எனினும் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வேளாண்மைக் கடன்கள் தொடர்பாக புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டத்தில் பங்கேற்கும் கடன்வழங்கும் நிறுவனங்களுக்கு அரசினால் வட்டி உதவிக் கொடுப்பனவு வழங்குவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட கப்பலேற்றலுக்கு முன்னான கடன் தொடர்பான ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதிகள் 1994 மே 31 ஆம் நாளிலிருந்து முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன. இந்த மாற்றங்களின் விளைவாக மத்திய வங்கியால் வழங்கப்பட்ட குறுகியகால மீள்நிதியிடல் 1993 திசெம்பர் இறுதியின் ரூ. 7,530 இலட்சத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் ரூ. 720 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

இடருக்குள்ளான நிதிக் கம்பனிகளிலிருந்தான கோரிக்கைகளுக்குக் கட்டுப்படுத்தப்பட்ட அளவில் தொடர்ந்து இடமளிக்கப்பட்டபோதிலும் மத்திய வங்கி நடுத்தர கால, நீண்டகால கொடுகடன் நிதியத்தின் கீழான புதிய கடன் வழங்கலைத் தவிர்த்துக் கொண்டது. 1994 இல் இந்நோக்கத்திற்காக ரூ. 2,630 இலட்சம் கொண்ட தொகையொன்று வழங்கப்பட்டது. இதன் விளைவாக நடுத்தரகால, நீண்டகால கொடுகடன் நிதியங்களின் கீழ் இடருக்குள்ளான நிதிக் கம்பனிகளுக்கு வழங்கப்பட்ட மீள்நிதியிடல் வசதிகளின் வெளிநின்ற மட்டம் 1993 இறுதியின் ரூ. 20,450 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 23,040 இலட்சத்திற்கு அதிகரித்தது. கூட்டுமொத்தமாக இவ்வனைத்து வழிமுறைகளும் குறுகியகால

வசதிகள் மற்றும் நடுத்தரகால நீண்டகால கொடுகடன் நிதியம் ஆகிய இரண்டின் கீழுமான மொத்த வெளிநின்ற மீள்நிதியிடலை 1993 இறுதியின் ரூ. 51,940 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 39,390 இலட்சத்திற்குக் குறைவடையச் செய்தன. ரூ. 2,710 இலட்சம் கடன் இழப்புக்களுக்கான ஏற்பாடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு நீங்கலாக இது ரூ. 12,560 இலட்சங்கொண்ட வீழ்ச்சியாகும்.

மத்திய வங்கி உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்கில் வைப்புப் பொறுப்புக்கள் மீது அதி உயர் மட்டமான 15 சதவீதத்தில் நியதி ஒதுக்கு விகிதத்தினை பேணியது. எனினும் ஒதுக்குப்பண வளர்ச்சியின் மீதான அழுத்தத்தைக் குறைப்பதற்காக வேண்டி வர்த்தக வங்கிகளினது வெளிநாட்டு நாணயச் சொத்துக்களை அதிகரிப்பதற்கு ஊக்குவிக்கும் நோக்கில் வெளிநாட்டில் வைப்பிலிடப்பட்ட வெளிநாட்டு நாணய வைப்புகள் மீதான நியதி ஒதுக்கு விகிதம் 1994 பெப்புருவரி 18 ஆம் நாளிலிருந்து செயற்படும் வகையில் 5 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. உயர்வான நியதி ஒதுக்கு விகிதமானது பணப்பெருக்கியை 1993 திசெம்பர் இறுதியின் 2.86 சதவீதத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் 2.84 சதவீதத்திற்குக் குறைவடையச் செய்வதற்கு வசதி செய்து கொடுத்தது.

## வட்டி வீதங்கள்

### பொதுவான போக்குகள்


இவ்வாண்டில் குறுகியகால வட்டி வீதங்கள் பரவலான வீச்சில் தளம்பலுற்றன. மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியலின் கையிருப்பு மிகக் குறைவாக விளங்கியமையின் பின்னணியில் பொருளாதாரத்தின் தொடர்ச்சியான உயர் திரவத்தன்மையானது 1994 இன் முதல் இரண்டு மாதங்களில் குறுகிய கால வட்டிவீதங்களை கடுமையாக வீழ்ச்சியடையச் செய்தது. தொடர்ந்து வந்த மாதங்களில் திறைசேரி உண்டியல்களினதும் மத்திய வங்கிப் பிணைகளினதும் வழங்கலினூடாக திரவத்தன்மை கட்டுப்படுத்தப்பட்டமையினால் 1994 மே வரையில் குறுகியகால வட்டிவீதங்கள் மேல் நோக்கி நகர்ந்தன. வெளிநாட்டு உட்பாய்ச்சல் அதிகரித்தமையினைத் தொடர்ந்து திரவத்தன்மை அதிகரித்தமையின் காரணமாக ஏற்பட்ட வீழ்ச்சியானது ஒற்றோபர் வரை தொடர்ந்து காணப்பட்டது. வெளிநாட்டு உட்பாய்ச்சல்கள் மெதுவடைந்தமையினதும் அரசின் கடன்பாடுகள் அதிகரித்தமையினதும் காரணமாக ஆண்டின் இறுதி மாதங்கள் இரண்டிலும் குறுகியகால வட்டிவீதங்கள் கடுமையாக அதிகரித்தன. எனினும் நடுத்தரகால நீண்டகால வீதங்கள் 1993 இல் நிலவிய மட்டங்களைவிட தாழ்ந்த மட்டங்களில் காணப்பட்டன.

### குறுங்கால வீதங்கள்

வெளிநாட்டு உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க வேறுபாடு, அரசின் இறைத்தொழிற்பாடுகள், மத்திய வங்கியின் பட்டியலிலிருந்து திறைசேரி உண்டியல்கள் வெகுவாகக் குறைவடைந்தமை என்பன இவ்வாண்டில் வட்டி வீதங்களில் கணிசமான அளவு மாற்றத்தினை ஏற்படுத்தின.

# வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

1993 இல் வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களில் காணப்பட்ட உத்வேகம் 1994 இன் முற்பகுதியிலும் தொடர்ந்து காணப்பட்டு உள்நாட்டுப் பணச் சந்தையில் கணிசமான திரவத்தன்மையை உருவாக்கியது. மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல்களது உடைமைகள் மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையால் மேலதிகத் திரவத்தன்மையை ஈர்ப்பதில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுவதற்கான ஆற்றல் மிகவும் கட்டுப்படுத்தப்பட்டதாகவிருந்தது. எனவே ரூ. 6,350 இலட்சங்கொண்ட மத்திய வங்கியின் சொந்தப் பிணைகளின் தேறிய வழங்கல்கள் மற்றும் 1994 பெப்புருவரி இறுதியில் மத்திய வங்கி வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் உடமைகள் ரூ. 39,080 இலட்சத்தால் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் மத்தியிலும் சந்தையில் நிலவிய மேலதிகத் திரவத் தன்மையானது திறைசேரி உண்டியல்களின் சராசரி விளைவில் வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதனால் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு ஆண்டின் தொடக்கத்தில் நிலவிய 18.09 சதவீதத்திலிருந்து 1994 பெப்புருவரி இறுதியில் 14.43 சதவீதத்திற்குக் குறைவடைந்த வேளையில் 6 மாத திறைசேரி உண்டியல்வீதம் 18.47 சதவீதத்திலிருந்து 14.88 சதவீதத்திற்கும் 12 மாத வீதம் 19.38 சதவீதத்திலிருந்து 15.63 சதவீதத்திற்கும் வீழ்ச்சியடைந்தன. இரண்டுமாதகால இடைவெளிக்குள் திறைசேரி உண்டியல்களின் சராசரி விளைவு ஏறத்தாழ 3.75 சதவீதப் புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தமையினை இவை பிரதிபலித்தன.

வட்டிவீதங்களில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி மாச்சு நடுப்பகுதிவரையும் தொடர்ந்திருந்தது. எனினும் ரூ. 14,000 இலட்சங்கொண்ட புதிய திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டமையும் ரூ. 6,860 இலட்சம் பெறுமதியான மத்திய வங்கிப் பிணைகள் வழங்கப்பட்டமையும் வீழ்ச்சியடையும் இப்போக்கினைத் தடுக்க உதவின. ஏப்பிறலிலும் மேயிலும் மேலும் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களும் மத்திய வங்கிப்பிணைகளும் வட்டிவீதங்களில் மேல் நோக்கிய போக்கினைப் பேணுவதற்கு உதவின. இதன் விளைவாக யூன் இறுதியில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான சராசரி விளைவு வீதம் 15.39 சதவீதத்திற்கு உயர்வடைந்த வேளையில் 6 மாத, 12 மாத உண்டியல்கள் மீதான விளைவு முறையே 15.62 சதவீதத்திற்கும் 15.87 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன.

யூலையில் காணப்பட்ட அதிகரித்த திரவத்தன்மை நிலைமைகள் அதனைத் தொடர்ந்துவந்த மாதங்களில் வட்டி வீதங்களில் கீழ் நோக்கிய அசைவினை ஏற்படுத்தின. மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களின் கையிருப்புக் குறைவடைந்தமையும் மத்திய வங்கியின் முதிர்ச்சியடைந்த குறுங்காலப் பிணைகள் புதுப்பிக்கப்பட்டமையும் 1994 ஒற்றோபரில் 3 மாத திறைசேரி உண்டியல்களின் விளைவு வீதம் 11.58 சதவீதத்திற்கும் 12 மாத உண்டியலின் விளைவு வீதம் 12.20 சதவீதத்திற்கும் குறைவடையக் காரணமாயிற்று.

வெளிநாட்டு மூலதன உட்பாய்ச்சல்களின் மெதுவான போக்கினையும்1994 திசெம்பரில் அரசு அதன் காசுத்தேவைகளைச் சமாளிப்பதற்கு ரூ. 30,000 இலட்சம் கொண்ட திறைசேரி உண்டியல்களுக்குப் புதிய கேள்வியினை ஏற்படுத்தியமையினையும் தொடர்ந்து இறுதி இரண்டு மாதங்களிலும் இப்போக்கில் கடுமையான மாற்றம் காணப்பட்டது. அதேவேளை மத்திய வங்கி பணக்கூட்டுக்களின் உயர்ந்த வீதத்திலான வளர்ச்சியினைத் தணிப்பதற்கு ரூ. 25,100 இலட்சங்கொண்ட அதன் சொந்தப்

பிணைகளை வழங்குவதன் மூலம் தனது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளைத் தீவிரப்படுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது. இக்காரணிகள் 1994 திசெம்பரில் வட்டிவீதத்தில் மிகவும் கூடிய அதிகரிப்பினை ஏற்படுத்தின. திசெம்பர் இறுதியில் 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு 18.73 சதவீதத்திற்கு உயர்வடைந்தவேளையில் 6 மாத, 12 மாத வீதங்கள் முறையே 19.29 சதவீதத்திற்கும் 19.43 சதவீதத்திற்கும் உயர்வடைந்தன. இவ்வாறு ஒற்றோபர் இறுதிக்கும் திசெம்பர் இறுதிக்குமிடையிலான இரு மாதங்களிலும் 3 மாத, 6 மாத, 12 மாத உண்டியல்கள் மீதான வட்டிவீதங்கள் 7.15 – 7.58 சதவீதப் புள்ளிகளால் உயர்வடைந்தன. எனினும் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவில் கணிசமான அதிகரிப்புக் காணப்பட்டபோதிலும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ஒற்றோபர் இறுதியின் ரூ. 14,330 இலட்சத்திலிருந்து திசெம்பர் இறுதியில் ரூ. 50,930 இலட்சத்திற்கு அதிகரித்து ஒதுக்குப் பண விரிவாக்கத்திற்கு உலை வைத்தன. 1994 இல் திறைசேரி உண்டியல் சந்தையில் காணப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி என்னவெனில் பல தடவைகளில் முதலாந்தர திறைசேரி உண்டியல் ஏலங்கள் மிகையாகச் செலுத்தப்பட்டமையாகும்.

அதேவேளை வங்கிகளுக்கிடையேயான அழைப்புப்பணச் சந்தை வீதங்களின் மேலதிகத் தளம்பல்களை ஓரளவு தடுப்பதற்காக 1993 ஒற்றோபரில் மத்திய வங்கியினால் அறிமுகம் செய்யப்பட்ட மீள் கொள்வனவுச்சந்தை பொதுவாக வட்டிவீதங்களில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சிகளைத்தடுப்பதில் வெற்றிகண்டது. எனினும் சில சந்தர்ப்பங்களில் மத்திய வங்கி வசமிருந்த உண்டியல்களின் பட்டியல் தீர்ந்த வேளைகளில் அழைப்புப் பணவீதங்களில் குறிப்பிடத்தக்களவு வீழ்ச்சிகள் அவதானிக்கப்பட்டன. 1993 திசெம்பர் இறுதியில் 16.50 – 18.50 சதவீத வீச்சில் காணப்பட்ட அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் மாச்சு இறுதியில் வீழ்ச்சியடைந்தன. எனினும் அவை 05.00 – 15.00 சதவீதமான பரந்த வீச்சினுள் காணப்பட்டன. சந்தை அபிவிருத்திகளுடன் இசைந்த விதத்தில் மத்திய வங்கியின் ஒருநாள் மீள்கொள்வனவு விளைவு வீதம் 1993 இறுதியின் 16.5 சதவீதத்திலிருந்து மாச்சு இறுதியில் 12.00 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறைக்கப்பட்டது. செத்தெம்பரின் நடுப்பகுதிவரை ஒருநாள் மீள்கொள்வனவு வீதம் சிறு வேறுபாடுகளுடன் இம்மட்டத்தில் பேணப்பட்டது. இவ்வேளையில் அழைப்புப் பண வீதங்கள் மிகவும் குறைந்த மட்டங்களில் காணப்பட்டமையால் ஒற்றோபர் நடுப்பகுதியில் ஒரு நாள் மீள் கொள்வனவு வீதம் 7.00 சதவீதத்திற்குப் படிப்படியாக மேலும் குறைவடைந்தது. செத்தெம்பர் நடுப்பகுதியில் அழைப்பு பணச் சந்தை வீதங்கள் 04.00 – 08.00 சதவீத வீச்சில் காணப்பட்டனவெனினும் ஒற்றோபர் இறுதியில் 12.25 – 13.50 சதவீத வீச்சிற்குப் படிப்படியாக உயர்வடைந்தன. அழைப்புப் பணச்சந்தையில் வட்டிவீதங்கள் நவெம்பர் இறுதியில் 13.00 – 17.00 சதவீத வீச்சிற்கும் திசெம்பர் இறுதியில் 20.00 – 23.00 சதவீத வீச்சிற்கும் உயர்வடைந்தமையில் ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் சந்தைத் திரவத்தன்மை குறைவடைந்திருந்தமை பிரதிபலிக்கப்பட்டது. மத்திய வங்கியின் ஒரு நாள் மீள் கொள்வனவு வீதமும் உயர்த்தப்பட்டு நவெம்பர் இறுதியில் 13.75 சதவீதத்தினையும் திசெம்பர் இறுதியில் 20.00 சதவீதத்தினையும் அடைந்தது.

மத்திய வங்கிப் பிணைகள் மீதான விளைவு வீதங்கள் சந்தைப் போக்குகளுடன் இசைவாக அமைந்தன. சனவரியில் வழங்கப்பட்ட 6 மாதப்பிணைகள் மீதான

விளைவு 18.37 சதவீதமாகும். மேயில் இது 14.79 சதவீதத்திற்குப் படிப்படியாகக் குறைவடைந்தது. 3 மாதப் பிணைகள் மட்டும் வழங்கப்பட்ட ஆண்டின் இறுதியான சில மாதங்களில் வட்டிவீதமானது ஒற்றோபர் தொடக்கத்தின் 13.00 சதவீதத்திலிருந்து நவெம்பர் இறுதியில் 14.70 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

தேசிய சேமிப்பு வங்கியினால் சேமிப்பு வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டு முழுவதும் 14.00 சதவீதமாக மாறாதிருந்தன. 16.00 – 17.00 சதவீத வீச்சில் காணப்பட்ட நிலையான வைப்புக்கள் மீதான வீதங்கள் அவை திசெம்பரில் 14.00 சதவீதத்திற்குக் குறைக்கப்படும்வரை இம்மட்டத்திலேயே பேணப்பட்டன. 1993 இறுதிப்பகுதியில் வீழ்ச்சியடைந்து சென்ற வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் 1994 இல் தொடர்ந்தும் வீழ்ச்சியுற்றன. வர்த்தக வங்கிகளின் தவணை வைப்புக்கள் 1993 இறுதியின் 10.00 – 19.00 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1994 இறுதியில் 8.00 – 18.25 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்டவேளையில் சேமிப்பு வைப்புக்கள் மீதானவை 1993 இன் 6.0 – 15.0 சதவீதத்திற்கெதிராக 5.5 – 13.0 சதவீத வீச்சில் காணப்பட்டன. இவ்வபிவிருத்திகளை எடுத்துக்காட்டும் வகையில் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் 1993 திசெம்பர் இறுதியின் 13.6 சதவீதத்திலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் 12.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. இதன் விளைவாக, வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன் வழங்கல் வீதமும் 1993 இறுதியின் 20.4 சதவீதத்திலிருந்து 1994 ஒற்றோபர் இறுதியில் 16.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததெனினும் ஆண்டின் இறுதியில் திறைசேரி உண்டியல் விளைவு வீதங்களில் ஏற்பட்ட மேல் நோக்கிய போக்கிற்கு ஏற்ப 17.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

**நீண்டகால வீதங்கள்**

குறுங்கால வீதங்களில் காணப்பட்ட பொதுவான கீழ்நோக்கிய போக்கினைப் பின்பற்றி 1994 இல் நீண்டகால வீதங்கள் பொதுவாக 1993 இனைவிடக் குறைவாகக் காணப்பட்டன. 3 – 5 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைத் கொண்ட அரச பிணைகளின் வட்டிவீதங்கள் 1993 இன் 17.0 – 16.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14.0 – 16.0 சதவீதமாக விளங்கின. 1994 இல் இருபத்தொரு அரச பிணைகளின் வழங்கல்கள் இடம்பெற்றன. 6, 7 வருடங்கள் வரையான முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட நீண்டகால ரூபாப் பிணைகளும் 14.00 – 15.75 சதவீத வீச்சிலான வட்டிவீதங்களில் இக்காலப்பகுதியில் வழங்கப்பட்டன.

சனவரி – மே காலப்பகுதியில் நான்கு வருட முதிர்ச்சியைக்கொண்ட பிணைகள் 15 சதவீத வட்டி வீதத்தில் மிதக்கவிடப்பட்டவேளையில் 14 சதவீத 14.75 சதவீத வட்டியில் 5 மற்றும் 6 வருட முதிர்ச்சிக் காலத்தைக்கொண்ட பிணைகள் வழங்கப்பட்டன. ஆண்டின் பிற்பகுதியில் 14 சதவீதத்தில் நான்கு வருடப் பிணைகள் வழங்கப்பட்டன. ஆறுவருடப் பிணைகள் 1994 யூனில் வழங்கப்பட்ட 15.75 சதவீதத்திற்கெதிராக 1994 ஒற்றோபரில் 14.5 சதவீதமான குறைந்த வீதத்தில் வழங்கப்பட்டன.

அதேவேளை சில வீதங்கள் மாறாது ஒரே மட்டத்தில் நிலவியபோதிலும் நீண்டகால கொடுகடன் நிறுவனங்களின் கடன் வழங்கும் வீதங்கள் 1 – 2 சதவீதப்

புள்ளிகளால் வீழ்ச்சியடைந்தன. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் வீதம் 18-24 சதவீதத்திலிருந்து 18 – 22 சதவீத வீச்சிற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. வீடமைப்பு நோக்கங்களுக்கான தேசிய சேமிப்பு வங்கியின் கடன் வழங்கல் வீதம் 19.0 – 22.0 இலிருந்து 18.0 – 21.0 சதவீதத்திற்கு 1 சதவீதப் புள்ளியினால் வீழ்ச்சியடைந்தவேளையில் வீடமைப்பு உத்தரவாத குறைந்த வருமான புகலிட நிகழ்ச்சித் திட்டத்தின் கீழான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபையின் கடன் வழங்கல் வீதம் 20.5 சதவீதமாகத் தொடர்ந்து விளங்கியது. கடன்களின் அளவின் அடிப்படையில் வட்டிவீதங்களை விதித்த அரச ஈட்டு முதலீட்டு வங்கி அதன் வட்டி வீதத்தை 20.5 – 22.0 சதவீதவீச்சில் பேணியது. வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் சிறிய மற்றும் நடுத்தர அளவுக் கைத்தொழில்கள் (சிநகை 1) திட்டத்தின் கீழான மீள் நிதியிடல் வீதம் 1993 இறுதியின் 13.7 சதவீதத்திலிருந்து 1994 முடிவில் 13.6 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

### கிளை விரிவாக்கம்

1994 இல் இலங்கையில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 23 ஆக மாறாது காணப்பட்டபோதும் அவற்றின் கிளை வலையமைப்பு தொடர்ந்தும் விரிவடைந்தது. உள்நாட்டு வர்த்தக வங்கிகள் 27 புதிய கிளைகளைத் திறந்த வேளையில் இவ்வாண்டுக்காலத்தில் வெளிநாட்டு வங்கிகள் இரண்டு புதிய கிளைகளை நிறுவின. இதன்விளைவாக வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1993 இன் 845 இலிருந்து 1994 இல் 875 இற்கு அதிகரித்தது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் மொத்த எண்ணிக்கையும் 17 ஆக மாற்றமின்றிக் காணப்பட்டபோதும் பி.கி.அ. வங்கிகளின் கிளை வலையமைப்பு 1993 இன் 163 இலிருந்து 1994 இல் 169 இற்கு விரிவடைந்தது. அதேவேளை தேசிய சேமிப்பு வங்கி அதன் கிளை வலையமைப்பினை முன்னைய ஆண்டு இறுதியின் 85 இலிருந்து 1994 இறுதியில் 90 இற்கு அதிகரித்தது. இம்மாற்றங்களுடன் வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1993 இன் 1,093 இலிருந்து 1994 இல் 1,134 இற்கு உயர்வடைந்தது. இதன் விளைவாக, வங்கித்தொழில் செறிவு அதாவது ஒவ்வொரு 10,000 குடித்தொகைக்கும் வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை 1993 இன் 0.6210 இலிருந்து 1994 இல் 0.6349 இற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில், மக்கள் வங்கி மூன்று புதிய கிளைகளை குருநாகல், நுகேகொடை, கல்கிசை, ஆகிய இடங்களில் திறந்ததுடன் அதன் காரைதீவுக் கிளையை மீளத்திறந்ததுடன் மூலம் அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கையை 323 இற்கு அதிகரித்தது. இலங்கை வங்கி மெற்றோபொலிற்றன் கிளையினால் முன்னர் கையாளப்பட்ட அரச கணக்குகளைப் பேணுவதற்காக, தப்ரபேன் கிளை என்ற பெயரில் யோர்க் வீதியில் புதிய கிளையொன்றினைத் திறந்த வேளையில் வாரியப்பொல, பதவி-பராக்கிரமபுர ஆகிய இடங்களிலுள்ள அதன் வேளாண்மைப்பணி நிலையக் கிளையைத் தரமுயர்த்தியதன் மூலம் அதன் முதன்மைக் கிளைகளின் எண்ணிக்கை 1994 இறுதியில் 259 இலிருந்து 262 இற்கு உயர்வடைந்தது. அத்துடன் இலங்கை வங்கி மூன்று விரிவாக்க அலுவலகங்களை கொழும்பு 2 இலுள்ள

### அட்டவணை 1.71

### வங்கிக் கிளைகளின் பரம்பல் 1992 - 1994

| வகை | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை ... | 39 | 40 | 40 |
| 1.1 வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை ... | 23 | 23 | 23 |
| 1.1.1 உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 6 | 6 | 6 |
| 1.1.2 வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை ... | 17 | 17 | 17 |
| 1.2 பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) ... | 16 | 17 | 17 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை (ஆ) ... | 1,051 | 1,093 | 1,134 |
| 2.1 வர்த்தக வங்கி கிளைகளின் எண்ணிக்கை ... | 811 | 845 | 875 |
| 2.1.1 உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (இ) ... | 782 | 812 | 839 |
| 2.1,1.1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை ... | 34 | 29 | 27 |
| 2.1.2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | 29 | 33 | 36 |
| 2.2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை ... | 156 | 163 | 169 |
| 2.3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | 84 | 85 | 90 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

(அ) 1985 இன் 15 ஆம் இலக்க பிரேதச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

(இ) விரிவாக்க அலுவலங்கங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் வெளிநாட்டுக் கிளைகள் உட்பட.

அபிவிருத்தி லொத்தர் நிலையம், மொரட்டுவ பல்கலைக்கழகம், குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் ஆகிய இடங்களில் நிறுவியது. பொலனறுவைக் கச்சேரிக்கிளை பொலனறுவை நகரக்கிளையுடன் ஒருங்கிணைக்கப்பட்டது. இம்மாற்றங்களுடன் இலங்கை வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1994 திசெம்பர் இறுதியில் 337 இற்கு விரிவடைந்தது.

வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி இவ்வாண்டில் மூன்று புதிய கிளைகளை மொனராகலை, கிரிபத்கொட, கொழும்பு - 8 இலுள்ள டி. எஸ். சேனநாயக்கா மாவத்தை ஆகிய இடங்களில் திறந்ததன் மூலம் அதன் கிளைகளினது வலையமைப்பினை 54 இற்கு விரிவாக்கியது. வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கி மூன்று புதிய கிளைகளை மினுவாங்கொட, பாணந்துறை, கெய்சர்வீதி கொழும்பு 11 ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் அவற்றின் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 34 இற்கு அதிகரித்தது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி அதன் மொத்தக் கிளைகளின் வலையமைப்பினை மூன்று புதிய கிளைகளினால் அதிகரித்துக்கொண்டது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கி எட்டுப்புதிய கிளைகளை வெலிமட, கொச்சிக்கடை, புறக்கோட்டை, பெலியத்தை, மாலபே, மத்துகம, வறக்காப்பொல, கொழும்பு தெற்கு ஆகிய இடங்களில் திறந்ததன் மூலம் அதன் கிளைகளினது வலையமைப்பு குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தது. அதேவேளை வரையறுக்கப்பட்ட செலான்வங்கி, இரத்தொலுகம,கனேமுல்ல, வெலிவேறியா,

கொட்டகல, பொகந்தலாவ ஆகிய இடங்களில் தொழிற்பட்ட அதன் துணைக்கிளைகள் ஐந்தினை தரமுயர்த்தியது.

கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கின் கார்ப்பரேசன் பொரளையில் புதிய கிளையொன்றை நிறுவியது. ஏ. என். இசட் கிறீன்லேன் வங்கி பி. எல். சி. கண்டியில் புதிய கிளையை நிறுவிய வேளையில் வரையறுக்கப்பட்ட கபீப்வங்கி ஏ. ஜீ. சூறிச் வங்கி கொள்ளுப்பிட்டியிலுள்ள அதன் பணமாற்றுநர் பிரிவினை இவ்வாண்டில் தரமுயர்த்தி முதன்மைக்கிளையாக்கியது.

பதுளை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி மீககிவுல, லுனுகல, கல்துமுல்ல கிரந்துருகோட்டை ஆகிய இடங்களில் நான்கு புதிய கிளைகளைத் திறந்தவேளையில் கம்பகா, கேகாலை பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் முறையே மினுவாங்கொட, எட்டியாந்தோட்டையிலும் கிளைகளை நிறுவின. இதன் விளைவாக பி. கி. அ. வங்கிகளினது கிளை வலையமைப்பு (தலைமை அலுவலக கிளைகள் உட்பட) 1993 இறுதியின் 163 இலிருந்து 1994 இறுதியில் 169 இற்கு உயர்வடைந்தது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் தேசிய சேமிப்பு வங்கி கம்புறுப்பிட்டிய, கொட்டாஞ்சேனை, வவுனியா, திருகோணமலை மற்றம் பலாங்கொட ஆகிய இடங்களில் ஐந்து புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் அதன் கிளைகளினது மொத்த எண்ணிக்கை 90 ஆக உயர்ந்தது.

## முகவர் வங்கித்தொழில்

1994 இல் மக்க்ள் கடன் முன்னோடித் திட்டத்தினூடாக இரு அரச வங்கிகளும் தொடர்ந்தும் முகவர் வங்கித்தொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் முறையே 119 மற்றும் ஏழு மக்கள் கடன் முன்னோடித் திட்டங்களை இவ்வாண்டில் நியமித்ததன் மூலம் இவ்விரு அரச வங்கிகளினாலும் சேர்த்துக் கொள்ளப்பட்ட மக்கள் கடன் முன்னோடித் திட்டங்களின் மொத்த எண்ணிக்கை 1993 இறுதியின் 10,250 இலிருந்து 1994 திசெம்பர் இறுதியில் 10,376 இற்கு உயர்வடைந்தது. இத்திட்டத்தின்கீழ் மக்கள் வங்கி இவ்வாண்டில் கொடுகடன் வசதிகளை ரூ. 50 இலட்சத்தினால் விரிவாக்கியது. எனினும் இத்திட்டத்தின்கீழ் மொத்த வெளிநின்ற கொடுகடன் தொகை 1993 இறுதியின் ரூ. 2,020 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 720 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை இலங்கை வங்கி 1994 இல் ரூ. 40 இலட்சத்தினை வழங்கியதுடன் இத்திட்டத்தின் கீழ் வெளிநின்ற மொத்தக் கொடுகடன் 1994 இறுதியில் ரூ. 2,290 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டில் வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி சம்பத் தொழில் வழங்குனர்கள் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த வெளிநின்ற தொகை ரூ. 115 இலட்சமாக விளங்கியதுடன் 1994 இறுதியில் சம்பத் தொழில் வழங்குனர்களாக 76 பேர் தொழிலாற்றினர்.

## பணிகள் வசதிகள்

வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட பணி வசதிகள் 1994 இல் மேலும் விரிவடைந்தன. இக்காலப்பகுதியில் வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட முக்கிய பணிவசதிகளான மின்னியல் பண மாற்றல் வசதிகள் தன்னியக்கக் கூற்றுப்பொறிகள்,

கடன் அட்டைகள் வெளிநாட்டுச் செலாவணி வங்கித்தொழில் வசதிகள் புதிய வைப்புக்கள் மற்றும் கடன் திட்டங்கள் என்பன காணப்பட்டன.

வர்த்தக நிதி, வெளிநாட்டுச் செலாவணித் தொழிற்பாடுகள், நம்பிக்கையான பாதுகாப்புப் பணிகள் மற்றும் மாற்றல் கொடுப்பனவுகள் என்பனவற்றிற்கு வசதியளிக்கும் சுவிப்ட் எனப்படும் உலகளாவிய வங்கிகளுக்கிடையிலான நிதியியல் தொலைத் தொடர்பு அமைப்பு 1994 இல் இலங்கையில் தொடங்கப்பட்டது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளில் பெரும்பாலானவை சுவிப்ட் முறையின் அங்கத்தவர்களாகிவிட்டன. சவூதி அமெரிக்க வங்கியின் கூட்டுடன் இன்னொரு மின்னியல் பணமாற்றல் வசதி வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்பட்டது.

வர்த்தக வங்கிகளின் தன்னியக்கக் கூற்றுப்பொறிகளின் வலையமைப்பானது காசு மீளப்பெறுகைகள் கணக்குகளுக்கிடையிலான நிதிய மாற்றங்கள் நிலுவை விசாரணைகள், காசு/காசோலை வைப்பிலிடல், செய்திப்பரிமாற்றம், கொடுப்பனவு நிறுத்தக்கட்டளை, காசோலைப் புத்தகக்கோரிக்கை என்பனவற்றிற்கு வசதிசெய்து கொடுக்கப்படும் வகையில் 1994 இல் மேலும் முன்னேற்றப்பட்டது. வரையறுக்கப்பட்ட செலான்வங்கி இவ்வாண்டுக் காலத்தில் 'சிமாட்' எனப்படும் தன்னியக்கக்கூற்று அட்டையை சந்தையில் அறிமுகப்படுத்தியது. எட்டு வங்கிகளினால் தொழிற்படுத்தப்பட்ட தன்னியக்கக் கூற்றுப் பொறிகளின் மொத்த எண்ணிக்கை இவ்வாண்டுக்காலத்தில் 32 இனால் வளர்ச்சியடைந்து 1994 இறுதியில் 109 ஆக விளங்கியது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி 'கொம்ரெல்' எனப்படும் இன்னுமொரு நிதியியல் வசதியை அறிமுகப்படுத்தியது. இது நிலுவைகளை அறிந்து கொள்வதற்கும் பலதரப்பட்ட வைப்புக்கருவிகள் மற்றும் கடன் திட்டங்களின் மீதான வட்டிவீதங்களைப் பெற்றுக் கொள்வதற்கும் வெளிநாட்டுச் செலாவணி வீதங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் இலக்கமிடப்பட்ட தொலைபேசியைப் பயன்படுத்தி வங்கிக்கு தூதுக் குறிப்புக்களை அனுப்பவும் வாடிக்கையாளர்களுக்கு வசதி செய்து கொடுக்கின்றது.

ஆய்விற்குரிய காலப்பகுதியில் உள்நாட்டு வங்கிகள் பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கும் புதிய கடன் வசதிகளை அறிமுகப்படுத்தின. தொழிற்படும் மூலதனத் தேவைகளுக்காக தனியார்துறை தேயிலை உற்பத்தியாளர்களுக்கு மேலதிகப் பற்று வசதிகளை வழங்குவதனை மக்கள் வங்கி தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின் கீழான வசதிகள் 22 சதவீத வட்டியைக் கொண்டிருக்கும். மக்கள் வங்கி கைத்தொழில் துறைக்காக இன்னுமொருபுதிய கொடுகடன் திட்டத்தினை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் சிறிய நடுத்தரகால கைத்தொழில் செயற்றிட்டங்களுக்காக ரூ. 1,000 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கியும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் கைத்தொழில் செயற்றிட்டத்திற்கு நிதியிடும் நோக்கத்திற்காக தனியார் நிதி அபிவிருத்தி செயற்றிட்டம், அபிவிருத்தி நிதிக்கடன் திட்டம் ஆகிய இரு திட்டங்களை அறிமுகப்படுத்தின.

அரசல்லா அமைப்புக்களினால் விதந்துரைக்கப்பட்ட வருவாய் உருவாக்க நடவடிக்கை எதற்கும் கொடுகடன் வசதிகளை வழங்கும்பொருட்டு இலங்கை

வங்கி சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய கொடுகடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியும் வைக்கற்புல் தொப்பித் தயாரிப்பு செயற்றிட்டம் மற்றும் கயிற்றுத்தும்பு உற்பத்தி அபிவிருத்திச் செயற்றிட்டம் என்பனவற்றிற்காக சனசக்தி நம்பிக்கைப் பொறுப்பு நிதிய கடன்களை வழங்கியது.

கிராமியத்துறைக்கு வசதிகளை விரிவாக்கும் நோக்குடன் வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி, இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்திச் செயற்றிட்டத்தின்கீழ், பதுளை மாவட்டத்தில் வறுமை ஒழிப்பு கடன் வழங்கல் செயற்றிட்டம், மீனவர் சமூக அபிவிருத்தி மற்றும் கொடுகடன் திட்டம் என மூன்று கொடுகடன்வசதிகளைத் தொடங்கியது. வேளாண்மைப் பணிகள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட வேளாண்மையாளர் அமைப்புக்களுக்கு அவைகளின் உறுப்பினர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட உணவுப் பயிர்களை பயிரிடுவதற்கான கடன்களை வழங்கும் விதத்தில் இலங்கை வங்கி இவ்வமைப்புக்களுக்கு பயிர்ச்செய்கைக் கடன்களை வழங்கியது. அத்துடன் இலங்கை வங்கி 1994 இல் சிறப்பு நுகர்வோர் கொடுகடன் திட்டமொன்றினை முன்னோடித்திட்டமொன்றாக அநுராதபுர மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழான ஆகக்கூடிய கடன்தொகை ரூ. 5,000 ஆகும். அதேவேளை இலங்கை வங்கி, வேளாண்மைக் கடன்களைச் செலுத்தத்தவறியவர்களுக்கு நிவாரண வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.

இலங்கை வங்கி சுய கடன் தீராற்றல் கொடுகடன் திட்டம் என்ற பெயரில் தொழில் முயற்சியாளர்களின் சிறிய அளவு வருமான உருவாக்க உற்பத்தி நடவடிக்கைகளுக்கு, குடும்ப அலகொன்றுக்கு ஆகக்கூடிய உச்சஎல்லை ரூ. 10,000 என்ற உச்சவரம்பிற்குட்பட்ட விதத்தில் புதிய கொடுகடன் திட்டமொன்றினைக் தொடக்கியுள்ளது.

வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியும் சுயதொழில் வாய்ப்புத் தொழில் செயற்றிட்டத்திற்காகக் கண்டியில் புதிய கடன் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் 22 சதவீத வட்டியில் ரூ. 15,000 கொண்ட ஆகக்கூடிய தொகை 36 மாத காலத்திற்கு வழங்கப்பட்டது. வரையறுக்கப்பட்ட செலான் வங்கியும் பேரண்டத் தொழில் முயற்சியாளர் கடன் திட்டம் என்ற பெயரில் சுயதொழில் முயற்சிகளுக்கு வசதியளிக்கும் பொருட்டு புதிய கடன் வசதியைத் தொடங்கியது. இதன் கீழான கடன்கள் 13 சதவீதமான வட்டியையும் ஆகக்கூடிய கடன் தொகையாக ரூ. 80 இலட்சத்தையும் கொண்டிருக்கும். வரையறுக்கப்பட்ட செலான் வங்கி வதிவிட வீடுகளின் கட்டுமானம் மற்றும் புதுப்பித்தலுக்காக "இரண்மாலிகா கடன் திட்டம்" என்ற பெயரில் ஆகக்கூடிய ரூபா பத்து இலட்சம் கொண்ட கடன் திட்டத்தை தொடக்கியது. இத்துடன், வரையறுக்கப்பட்ட செலான் வங்கி நீண்டகால வைப்புக்களின் உடைமையாளர்களுக்கு வீடமைப்புக் கடன் திட்டமொன்றினையும் அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் கீழ் வைப்புடமையாளர்கள் வைப்புக்களின் முகப்புப் பெறுமதி முழுவதையும் கடனாகப் பெறுவதற்கு உரித்துடையவராவர்.

வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி "சிங்கிதி றண் சுரக்கும்" என்ற பெயரில் வெளிநாட்டு நாணய வைப்புத்திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின்கீழ் வெளிநாட்டில் தொழில்புரியும் ஆளொருவர் அவரின்/அவளின்

சிறு வயதுக் குழந்தைக்காக கணக்கொன்றினைத் திறக்க முடியும். கணக்கிற்கான ஆகக் குறைந்த வைப்பு ஐ. அ. டொலர் 25 ஆகும். இக்கணக்கிற்கான வட்டிக்கொடுப்பனவு வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்கிற்கான தற்போது நிலவும் வட்டிவீதத்தினை விட 1 சதவீதப் புள்ளியினால் உயர்வானதாக இருக்கும். அதேவேளை வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி நான்கு மற்றும் ஐந்து ஆண்டு முதிர்ச்சிக்காலத்தினைக் கொண்ட வைப்புச் சான்றிதழ்களை வழங்கத் தொடங்கியது.

வரையறுக்கப்பட்ட செலான் வங்கி "செலான் திட்டம்" என்ற பெயரில் புதிய முதலீட்டுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. இது 18 – 50 ஆண்டு வயதுத் தொகுதிக்குட்பட்டவர்களுக்காக வரையறுக்கப்பட்ட ஓய்வூதிய திட்டமாகும். அதேவேளை பல வர்த்தக வங்கிகள் கூட்டுறவு வாடிக்கையாளர்களினால் வழங்கப்படும் வர்த்தகப் பத்திரங்களின் வங்கியாளராகவும் செயற்பட்டன.

## இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகம்

1994 இல் இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகம் கொடுகடன் தகவல்களைச் சேகரித்தல், கடன்பாட்டாளர்களின் தரவுத் தளத்தினை அபிவிருத்தி செய்தல், கடன்பாட்டாளர்கள் மீதான கொடுகடன் அறிக்கைகளை வழங்குதல் ஆகிய அதன் முதன்மைப் பணிகளை தொடர்ந்தும் தொழிற்படுத்தியது.

கடன் வழங்கும் நிறுவனங்களினால் பேணப்பட்டுவந்த கடன் கணக்குகளுக்கான அறிவிப்பு வரையறை ஒழுங்கற்ற கடன் கணக்குகளுக்கு ரூ. 100,000 ஆகவும் ஒழுங்கான கடன் கணக்குகளுக்கு ரூ. 500,000 ஆகவும் மாறாது காணப்பட்டது. இந்த வரையறைகள் பெரும்பாலான கடன் வழங்கும் நிறுவனங்களினால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருந்தன. 1994 சனவரியில் பணியகம் கடன் கணக்குகளின் புதுப்பித்தல் செயல் முறையை மேம்படுத்தியதுடன் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பல வங்கிகளினதும் வங்கிக் கிளைகளினதும் பெரும் பிரிவுகளிலுள்ள ஒழுங்கற்ற கடன் கணக்குகளை மாதாந்த அடிப்படையில் புதுப்பித்தலையும் தொடங்கியது. இது தீவு முழுவதற்குமான கடன் கணக்குகளில் கிட்டத்தட்ட 95 சதவீதத்திற்கு வகைகூறியது. ஒழுங்கான கடன் கணக்குகளை புதுப்பிக்கும் கால இடைவெளி ஆறு மாதங்களிலிருந்து மூன்று மாதங்களுக்கு குறைக்கப்பட்டது. வெளியூர் வங்கிகளினதும் நிதிக் கம்பனிகளினதும் ஒழுங்கற்ற கடன் கணக்குகள் தொடர்ந்தும் அரையாண்டு அடிப்படையில் புதுப்பிக்கப்பட்டன.

1994 இறுதியில் பணியகத்தின் தரவுத்தளம் 21,371 ஒழுங்கற்ற கடன் கணக்குகளையும் 31,373 ஒழுங்கான கடன் கணக்குகளையும் உள்ளடக்கியருந்தது. 1994 இல் கடன் வழங்கும் நிறுவனங்களினால் பணியகத்தின் பணிகளைப் பயன்படுத்துவதில் அதிகரித்த நாட்டமொன்று கவனிக்கப்பட்டது. 1992 இன் 49,577 இற்கும் 1993 இன் 58,657 இற்கும் எதிராக 1994 இல் பணியகம் 71,623 கோரிக்கைகளுக்குப் பதிலளித்தது.

பணியகத்தின் பங்குமூலதனத்தில் எத்தகைய மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை. 1994 இறுதியில் ஒவ்வொன்றும் ரூ. 100 கொண்ட 250,000 பங்குகளாக பிரிக்கப்பட்ட ரூ. 25,000,000 கொண்ட வழங்கப்பட்ட பங்கு

மூலதனம் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை (51 சதவீத உடைமை) மற்றும் 23 வர்த்தக வங்கிகளையும் (அவர்களிடையே 30 சதவீத உடைமை) இலங்கை அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனம், அரசஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, 24 பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள் (அவர்களிடையே 19 சதவீத உடைமை) ஆகியவற்றைக் கொண்ட மூன்றாவது குழு என்பனவற்றையும் உள்ளடக்கிய 52 பங்குதாரர்களினால் வைத்திருக்கப்பட்டது.

## கிராமிய வங்கித் தொழிலும் கொடுகடனும்

### (அ) கிராமியக் கொடுகடன் கொள்கை

இலங்கையின் கிராமிய கொடுகடன் கொள்கையில் குறிப்பிடத்தக்க மாற்றம் இடம் பெற்றமையை 1994 ஆம் ஆண்டு எடுத்துக்காட்டியது. கடன் வழங்கும் வங்கிகளுக்கு இதுவரை கிடைக்கத்தக்கதாக இருந்த மலிவான, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்நிதியிடல் 1994 ஏப்பிறல் 1 ஆம் நாளிலிருந்து மீள் நிதிக்காக, அரசிலிருந்தான வட்டி உதவித் தொகையினைக் கொண்ட வங்கிநிதியிடல் கடன் நிகழ்ச்சித் திட்டத்தினால் பதிலீடு செய்யப்பட்டமையின் மூலம் புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம் நவீனமயமாக்கப்பட்டது. திருத்தப்பட்ட திட்டத்தின்கீழ் கடன்வழங்கும் வங்கிகள் வேளாண்மையாளர்களுக்கு தமது சொந்த நிதியிலிருந்து கடனை வழங்கியதுடன் தற்போது நிலவும் ஆண்டிற்கு 16 சதவீத வட்டியில் கடன் வழங்கல் வீதங்களையும் பேணும்பொருட்டு வட்டி உதவு தொகையாக 75 சதவீதம் திறைசேரியினால் செலுத்தப்பட்டது. மத்திய வங்கியின் மீள்நிதியிடல் நிறுத்தப்பட்டமை அத்தகைய மீள் நிதியின் பணவீக்க தன்மையினைக் கருத்திற் கொள்கையில் மிகச்சரியான நடவடிக்கையாக இருந்ததுடன் வங்கிகளின் திருந்திய திரவத்தன்மை நோக்கில் அத்தகைய வெளியிலிருந்தான நிதியிடலுக்கான தேவை பொருத்தமானதாக அமைந்தது. இதன்படி புதிய திட்டம் 1994 சிறு போகத்தில் நடைமுறைக்கு வந்தது. புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் மீண்டும் கிடைக்கத்தக்க வசதி, மத்திய வங்கியின் கொடுகடன் உத்தரவாதத்தன்மை போன்ற அதன் மற்றைய பண்புகளைப் பொறுத்தவரையில் மாற்றமின்றியிருந்தது.

ஆய்விற்குரிய ஆண்டில் கிராமிய கொடுகடன் கொள்கையில் அவதானிக்கப்பட்ட முக்கிய பண்புயாதெனில், கடன் வழங்கிய வங்கிகளுக்கு அவற்றின் கடன்களை மீளச் செலுத்தத்தவறிய வேளாண்மையாளருக்கு 1994 ஒற்றோபரில் அரசினால் அறிவிக்கப்பட்ட நிவாரண வசதிகளேயாகும். 1994/95 பெரும்போகத்திலிருந்தும் நடைமுறைக்குவந்த இந்நிவாரணத் திட்டத்தின்கீழ் கடன் செலுத்தத்தவறிய வேளாண்மையாளர்கள் செலுத்தத்தவறிய முதலில் 25 சதவீதத்தினை கொடுப்பனவு செய்வதன் மூலம் அவர்களின் கடன் கணக்குகளை தீர்த்துவிடுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். இத்திட்டத்தில் சேருவதற்கு வேளாண்மையாளர்கள் ஒருமுறை விருப்புத் தெரிவித்துவிடின் மிகுதி 75 சதவீதமான தொகையும் அத்துடன் ஒன்று சேர்ந்த வட்டியும், மத்திய வங்கியினதும் அரசினதும் இணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின்படி வங்கிகளினால் பதிவழிக்கப்படும். அத்தகைய வேளாண்மையாளர்கள் சாதாரண கடன் பெறுநர்களைப் போன்று முழுமையான கொடுகடன் வசதிகளைப் பெற உரித்துடையவராவர். 25 சதவீதமான ஆரம்ப கொடுப்பனவினைச் செய்ய

விரும்பாதவர்களுக்கு அரசாங்கத்தின் அறிவுறுத்தலின்படி, விதை மற்றும் வளமாக்கிச் செலவுகளை உள்ளடக்கும் வரையறுக்கப்பட்ட கொடுகடன் வசதியொன்று இரு அரச வங்கிகளினாலும் வழங்கப்பட்டது. அத்தகைய வேளாண்மையாளர்களுக்கு 1994/95 பெரும்போகத்தில் கொடுகடன் வசதிகள் 2 ஏக்கருக்கும் குறைவாக பயிரிடப்படுமிடத்து ரூ. 4,000 இற்கும் 2 ஏக்கர் பரப்பிற்கு கூடுதலாக இருக்குமிடத்து ரூ. 8,000 இற்கும் வரையறுக்கப்பட்டது.

### (ஆ) புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம்

### (பு.அ.உ.கி. கொ. திட்டம்)

1994 இல் பு. அ. உ. கி. கொ. திட்டத்தின்கீழ் வங்கிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனின் மொத்தத் தொகை ரூ. 9,760 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் பகிர்ந்தளிப்பினைவிட 6.2 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. எனினும் பு. அ. உ. கி. கொ. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 1993 இன் 63,864 இலிருந்து 1994 இல் 58,836 இற்கு வீழ்ச்சியடைந்தது. எனவே 1994 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடனின் உயர்ந்த அளவிற்கு, 1993 நவெம்பரில் நடைமுறைக்கு வந்த பயிர்ச் செய்கைக் கடன்களின் நிதியிடல் அளவுகளில் செய்யப்பட்ட மேல் நோக்கிய திருத்தங்களே காரணமாக இருக்கக்கூடும். 1994 இல் பு. அ. உ. கி. கொ. திட்டத்தின்கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகையில் ரூ. 6,330 இலட்சம், மத்திய வங்கி மீள்நிதியிடல் வசதியின்கீழ் 1993/94 பெரும்போக காலத்தில் வங்கிகளினால் வழங்கப்பட்ட வேளையில் ரூ. 3,430 இலட்சங்கொண்ட தொகை 1994 சிறுபோகத்தில் வங்கிகள் தமது சொந்த நிதியைப் பயன்படுத்தி அவற்றினால் வழங்கப்பட்டது. பிந்திய பகிர்ந்தளிப்புக்கள் அரசினால் வழங்கப்பட்ட ஆண்டிற்கு 7.5 சதவீதம் கொண்ட வட்டி உதவுதொகைக்கு உரித்துடையனவாகும். பு. அ. உ. கி. கொ. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பெரும்பங்கு நெற்பயிர்ச் செய்கைக்கானதாக அமைந்ததுடன் இது 1994 இல் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கொடுகடனில் 69 சதவீதத்திற்கும் வகைகூறியது. மிகுதி 31 சதவீதமும் துணை உணவுப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்பட்டது.

பெரும்போகப் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட பயிர்ச் செய்கைக் கடன்களின் மொத்த எண்ணிக்கை 1992/1993 இன் 43,929 கடன்களிலிருந்து 1993/94 இல் 38,868 இற்கு கடுமையாக வீழ்ச்சியடைந்தபோதும் 1993/1994 பெரும்போகத்தில் பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் கடன் தொகை ரூ. 6,330 இலட்சத்திற்கு 5 சதவீதத்தினால் உயர்வடைந்தது. நெற்செய்கை மற்றும் துணை உணவுப் பயிர்ச்செய்கை இரண்டிற்குமாக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் குறைப்புக் காணப்பட்டது. நெற் செய்கைக்கான கொடுகடன் 1992/93 பெரும்போகத்தின் ரூ. 4,180 இலட்சத்திலிருந்து 1993/94 பெரும்போகத்தில் ரூ. 4,530 இலட்சத்திற்கு அதிகரித்தவிடத்து துணை உணவுப் பயிர்ச் செய்கைக்கான கொடுகடன் வழங்கல் 1992/93 இல் ரூ. 1,850 இலட்சத்திலிருந்து 1993/94 இல் ரூ. 1,800 இலட்சத்திற்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. 1993/1994 பெரும்போகத்தில் துணை உணவுப் பயிர்கள் பயிரிடப்பட்ட மொத்த நிலப் பரப்பும் 35,880 எக்டேயர்களுக்கு 2.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. பெரும்போக காலத்தில் நிலவிய வெள்ளமும் கடனுக்கான கேள்வியை கடுமையாகக் கட்டுப்படுத்தியது.

1994 சிறுபோகத்தில் வங்கிகளினால் பகிர்ந்தளிக்கப்பட்ட கடனின் மொத்தத் தொகை ரூ. 3,430 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 8.5 சதவீத

அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1994 சிறு போகத்தில் மத்திய வங்கியின் மீள்நிதியிடல் வசதிகள் புறக்கீடு செய்யப்பட்டபோதும் இது காணப்பட்டது. வழங்கப்பட்ட கடனின் மொத்த எண்ணிக்கையும் 1993 இன் 19,935 இலிருந்து 1994 இல் 19,968 இற்கு சிறிதளவால் அதிகரித்தது. இதற்கு நெற்செய்கைக்காக வழங்கப்பட்ட கடன்களின் தொகை மற்றும் அளவு இரண்டும் அதிகரித்தமையே முழுக்காரணமாகும். நெற் செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட கொடுகடன் 1993 இன் ரூ. 1,850 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 2,200 இலட்சமாக விளங்கியவேளையில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்த எண்ணிக்கை 1993 இன் 11,539 உடன் ஒப்பிடுகையில் 1994 இல் 13,058 ஆக விளங்கியது. 1994 இல் துணைப் பயிர்களின் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டகொடுகடன் வீழ்ச்சியைப் பதிவு செய்தது. துணை உணவுப் பயிர்களின் செய்கைக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட கடன் 1993 இன் ரூ. 1,310 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 1,240 இலட்சமாக விளங்கியவேளையில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1993 இன் 8,396 இலிருந்து 1994 இல் 6,910 இற்கு வீழ்ச்சியடைந்தது.

சில பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளில் காணப்பட்ட நிதிப்பற்றாக்குறையைக் கருத்திற்கொண்டு 1994 இல் ரூ. 1,000 இலட்சங்கொண்ட சிறப்பு மீள் நிதியிடல் வசதி இலங்கை வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு வழங்கப்பட்டது. இச்சிறப்பு வசதியின் கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் ஆண்டிற்கு 16 சதவீதத்தில் வேளாண்மையாளர்களுக்கு வழங்கிய தமது வேளாண்மைக் கடன்களுக்காக ஆண்டிற்கு 20 சதவீதத்தில் இரு அரச வங்கிகளிலிருந்தும் மீள் நிதியிடல் வசதியைப் பெற்றுக்கொள்ள முடியும். அத்தகைய விடயங்களில் பி. கி. அ. வங்கிகள் தமது நிதிகளின் உயர்ந்த செலவினை ஈடுசெய்வதற்காக அரசிடமிருந்து ஆண்டிற்கு 11.5 சதவீதங்கொண்ட வட்டி உதவுதொகைக்கு உரித்துடையனவாக உள்ளன. இவ்வசதியின்கீழ் 1994 சிறுபோகத்தில் பி. கி. அ. வங்கிகள் ரூ. 600 இலட்சத்தினைப் பயன்படுத்தின.

1994 இல் பு. அ. உ. கி. கொ. திட்டத்தின்கீழ் கடனை மீளச் செலுத்தத் தவறியவர்களின் சார்பில் கொடுகடன் உத்தரவாதத் திட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ. 370 இலட்சமாக விளங்கியதுடன் 1994 திசெம்பர் இறுதியில் இழப்பீடாகச் செலுத்தப்பட்ட மொத்தத் தொகை ரூ. 1,380 இலட்சமாகியது. இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் பு. அ. உ. கி. கொ. திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களால் வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களில் 50 சதவீதத்திற்கு வகைகூறின.

## (இ) வேளாண்மைக் காப்புறுதிச் சபை

1994 இல் வேளாண்மைக் காப்புறுதிச் சபை ஏறத்தாழ 39,500 எக்டேயர் நெற் காணியைக் காப்புறுதி செய்ததுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதம் அதிகமானதாகவும் இருந்தது. காப்புறுதி செய்யப்பட்ட நிலப்பரப்பு தொடர்பாக சேகரிக்கப்பட்ட கட்டுப்பணம் 1994 இல் ரூ. 170 இலட்சமாக விளங்கி 1993 இனைவிட 18 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை எடுத்துக்காட்டியது. வேளாண்மைக் காப்புறுதிச் சபையினது தொழிற்பாடுகளில் மிகக் குறிப்பிடத்தக்க

புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன்
(31.12.1994 இல்

| போகம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| 1990/91 பெரும் போகம் | 165.3 | 20.4 | 185.7 | 228.4 | 52.2 | 280.6 | 13.0 | 3.9 | 16.9 |
| 1991 சிறு போகம் | 66.3 | 88.8 | 155.1 | 103.9 | 57.4 | 161.3 | 3.1 | 12.9 | 16.0 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1991 | 231.6 | 109.2 | 340.8 | 332.3 | 109.6 | 441.9 | 16.1 | 16.8 | 32.9 |
| 1991/92 பெரும்போகம் | 185.4 | 28.7 | 214.1 | 179.7 | 65.0 | 244.7 | 18.0 | 5.4 | 23.4 |
| 1992 சிறுபோகம் | 38.6 | 31.8 | 70.4 | 57.0 | 24.8 | 81.7 | 0.9 | 3.9 | 4.8 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1992 | 224.0 | 60.5 | 284.5 | 236.7 | 89.8 | 326.4 | 18.9 | 9.4 | 28.3 |
| 1992/93 பெரும்போகம் | 155.2 | 32.4 | 187.6 | 159.4 | 56.7 | 216.1 | 15.6 | 15.2 | 30.8 |
| 1993 சிறு போகம் | 61.4 | 47.7 | 109.1 | 78.7 | 28.0 | 106.7 | 1.1 | 4.4 | 5.5 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1993 | 216.6 | 80.1 | 296.7 | 238.1 | 84.7 | 322.8 | 16.7 | 19.6 | 36.3 |
| 1993/94 பெரும்போகம் | 157.4 | 34.5 | 191.9 | 150.2 | 50.0 | 200.2 | 20.5 | 21.0 | 41.5 |
| 1994 சிறு போகம்* | 66.9 | 39.9 | 106.8 | 69.2 | 23.6 | 92.8 | 6.7 | 32.9 | 39.6 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1994 | 224.3 | 74.4 | 298.7 | 219.4 | 73.6 | 293.0 | 27.2 | 53.9 | 81.1 |

* மீள் நிதியிடல் திட்டம் 1994 ஏப்பிறலில் புறக்கீடு செய்யப்பட்டு வட்டி உதவுதொகைத் திட்டத்தினால் பதிலிடப்பட்டது.

அட்டவணை 1.72

## திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள் உள்ளவாறு)

(ப.இ. ரூபாய்களில்)

| பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | | | செலான் வங்கி நிதிக் கூட்டுத்தாபனம் | | | பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.கி. கொ. தி. கீழ் மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | |
| 105.0 | 27.6 | 132.6 | 0.2 | 0.1 | 0.3 | – | – | – | – | – | – | 511.9 | 104.2 | 616.1 |
| 49.1 | 53.9 | 103.0 | – | 0.5 | 0.5 | – | – | – | – | – | – | 222.4 | 213.5 | 435.9 |
| 154.1 | 81.5 | 235.6 | 0.2 | 0.6 | 0.8 | – | – | – | – | – | – | 734.3 | 317.7 | 1,052.0 |
| 100.3 | 49.3 | 149.6 | – | – | – | – | – | – | 0.4 | 0.7 | 0.5 | 483.8 | 148.5 | 632.2 |
| 37.6 | 37.7 | 75.3 | – | 0.3 | 0.3 | – | – | – | – | – | – | 134.0 | 98.5 | 232.5 |
| 137.9 | 87.0 | 224.9 | – | 0.3 | 0.3 | – | – | – | 0.4 | 0.7 | 0.5 | 617.8 | 247.1 | 864.9 |
| 86.5 | 80.6 | 167.1 | 1.6 | 0.2 | 1.8 | – | – | – | – | – | – | 418.3 | 185.2 | 603.4 |
| 42.8 | 50.7 | 93.5 | 1.2 | 1.1 | 2.3 | – | – | – | – | – | – | 185.2 | 131.9 | 317.1 |
| 129.3 | 131.3 | 260.6 | 2.8 | 1.3 | 4.1 | – | – | – | – | – | – | 603.5 | 317.0 | 920.5 |
| 121.9 | 73.4 | 195.3 | 2.9 | 0.5 | 3.4 | – | 0.9 | 0.9 | – | – | – | 452.9 | 180.3 | 633.2 |
| 62.4 | 38.2 | 100.6 | 1.7 | 1.8 | 3.5 | – | – | – | – | – | – | 206.9 | 136.4 | 343.3 |
| 184.3 | 111.6 | 295.9 | 4.6 | 2.3 | 6.9 | – | 0.9 | 0.9 | – | – | – | 659.8 | 316.7 | 976.5 |

மூலங்கள் : இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.73

### வைப்புக்களும் முற்பணங்களும் - கிராமியத்துறை*

(தொகை ரூ.'000)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கம் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 |
| 1 மொத்தச் சேமிப்புக்கள் ** ... | 5,196,746 | 6,359,432 | 366,578 | வி.கி. | 1,099,420 | 1,481,281 | 1,415,452 | 1,552,531 |
| 1.1 சேமிப்புக்கள் ... | 4,665,514 | 5,551,550 | 315,010 | வி.கி. | 979,040 | 1,253,687 | 1,033,605 | 1,132,823 |
| 1.2 சிறப்புச் சேமிப்புக்கள் ... | – | – | 8,818 | வி.கி. | – | – | 254,014 | 301,569 |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 531,232 | 807,882 | 42,750 | வி.கி. | 120,380 | 227,594 | 127,833 | 118,139 |
| 2 வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் *** ... | 538,881 | 536,455 | 233,270 | 257,892 | 966,438 | 1,118,229 | 1,086,011 | 1,204,885 |
| 2.1 வேளாண்மை ... | 67,495 | 79,748 | 88,281 | 107,903 | 422,231 | 379,470 | 296,188 | வி.கி. |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... | 33,611 | 18,479 | 1,922 | 2,233 | 31,880 | 24,503 | 25,562 | வி.கி. |
| 2.3 மீன்பிடி ... | – | – | 10 | 12 | 22,026 | 29,347 | – | வி.கி. |
| 2.4 சிறு கைத்தொழில் ... | 32,908 | 21,024 | 2,047 | 2,379 | 99,528 | 102,010 | 38,975 | வி.கி. |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கல் ... | 264,208 | 261,188 | 10,851 | 12,607 | – | – | 76,361 | வி.கி. |
| 2.6 செயற்றிட்ட/வர்த்தகம் ... | 62,813 | 73,909 | 86,273 | 87,771 | 178,250 | 215,875 | – | வி.கி. |
| 2.7 ஏனையவை ... | 77,846 | 82,107 | 43,886 | 44,987 | 212,523 | 367,024 | 648,925 | வி.கி. |

மூலங்கள் : மக்கள் வங்கி
இலங்கை வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன. கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள்.

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலைமைகள் நீக்கலாக.

** திசெம்பர் 31இல் சேமிப்புக்களின் மொத்தப் பெறுமதி.

*** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி.

பண்புயாதெனில் இழப்பீட்டுக் கொடுப்பனவில் ஏற்பட்ட பாரிய அதிகரிப்பேயாகும். இது 1993 இன் ரூ. 60 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1994 இல் ரூ. 270 இலட்சமாக விளங்கியது. இந்நான்கு மடங்கு அதிகரிப்பிற்கு வடமத்திய, கிழக்கு மாகாணங்களில் 1993/94 பெரும்போகப் பயிர்ச்செய்கைக் காலத்தில் வெள்ளத்தின் காரணமாக பயிர்களுக்கு பெருமளவு சேதமேற்பட்டமையின் விளைவாக கடன் செலுத்தத் தவறியமைக்காக வேளாண்மைக் காப்புறுதிச் சபை 100 சதவீத இழப்பீட்டினைச் செலுத்தியமையே காரணமாகும். பெரும்போகத்திற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் 1994 இல் ரூ. 200 இலட்சத்திற்கு உயர்வடைந்ததுடன் இது, 1993 இல் வேளாண்மைக் காப்புறுதி சபையினால் செலுத்தப்பட்ட தொகையைவிட இருமடங்காகவும் இருந்தது.

## (ஈ) கிராமியத் துறைக்கான கொடுகடன் வசதிகள்

கிராமியத்துறைக்கான கொடுகடன் முக்கியமாகப் பிரேதசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள், கூட்டுறவு கிராமிய அபிவிருத்தி வங்கிகள், வேளாண்மைப்பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்கள், சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சபைகள் என்பனவற்றினூடாக வழிப்படுத்தப்பட்டது. 1994 இல் இந்நிறுவனங்களூடாக வழங்கப்பட்ட கடன்களின் மொத்தத் தொகை ரூ. 3.1 பில்லியனாக விளங்கி 1993 இன் ரூ. 2.8 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 10 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளாலும் சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சபைகளாலும் வழங்கப்பட்ட கடன்கள் 16 சதவீதத்தாலும் 11 சதவீதத்தாலும் அதிகரித்து முறையே ரூ. 1.1 பில்லியனாகவும் ரூ. 1.0 பில்லியனாகவும் விளங்கின. எனினும் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளினூடாக வழங்கப்பட்ட கொடுகடன் 1994 இல் ரூ. 5,360 இலட்சத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

## (உ) கிராமிய சேமிப்புக்களைத் திரட்டல்

கிராமியத்துறையின் சேமிப்புக்கள் முக்கியமாக கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சபைகள் என்பனவற்றினால் திரட்டப்பட்டன. கிராமியத் துறையிலிருந்து திரட்டப்பட்ட மொத்தச் சேமிப்புக்கள் 1993 இறுதியின் ரூ. 7.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1994 இறுதியில் ரூ. 9.4 பில்லியனாக அமைந்து 22 சதவீத அதிகரிப்பைக் காட்டின. கிராமிய சேமிப்புக்களில் பெருமளவான தொகையாகிய ரூ. 6.4 பில்லியனை கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் திரட்டிய வேளையில் சிக்கன கொடுகடன் கூட்டுறவுச் சபைகளும் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளும் தனித்தனி ரூ. 1. 5 பில்லியனைத் திரட்டி அடுத்த இடங்களை வகித்தன.

## ஏனைய நிதியியல் நிறுவனங்கள்

### சேமிப்பு நிறுவனங்கள்

பொருளாதாரத்தின் உறுதியான வளர்ச்சி, மற்றும் ஒப்பீட்டு அடிப்படையில் உயர்ந்த வட்டிவீதங்கள் வழங்கப்பட்டமை என்பனவற்றின் காரணமாக தேசிய சேமிப்பு வங்கி, சேமிப்பு வைப்புக்களைத் திரட்டுவதில் மேலும் வளர்ச்சிகளைப் பதிவு செய்தது. தேசிய சேமிப்பு வங்கியின் மொத்த வைப்புத்தளம் முன்னைய ஆண்டின் ரூ. 92,800 இலட்சம் அல்லது 28 சதவீதங்கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக 1994 இறுதியில் ரூ. 533,260 இலட்சத்திற்கு ரூ. 111,690 இலட்சத்தினால் அல்லது 27 சதவீதத்தினால் உயர்வடைந்தது. வேறுபட்ட முதிர்ச்சிகளைக் கொண்ட நிலையான வைப்புக்கள் 1993 இன் 25 சதவீத (ரூ. 51,310 இலட்சம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 75,750 இலட்சம் (29 சதவீதம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. அதேவேளை சேமிப்பு வைப்புக்கள் ரூ. 35,950 இலட்சத்தினால் (22 சதவீதம்) அதிகரித்தன. திறைசேரி உண்டியல் விளைவு வீதங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்கள் என்பனவற்றில் செய்யப்பட்ட குறைப்புக்கு இசைவாக நிலையான வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டிவீதங்கள் 1994 திசெம்பர் 1 ஆம் நாள் தொடக்கம் குறைக்கப்பட்டன. ஓராண்டு முதிர்ச்சியைக்கொண்ட வைப்புக்கள் மீதான வட்டிவீதங்கள் 16.0 சதவீதத்திலிருந்து 14.0 சதவீதத்திற்கு குறைக்கப்பட்டன. ஓராண்டு வைப்புக்கள் மீது மாதாந்தம் வட்டி செலுத்தப்படுமிடத்து அவ்வட்டிவீதமும் 15.3 சதவீதத்திலிருந்து 13.2 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. சேமிப்பு வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வட்டி 1994 இல் மாற்றமுறாது ஆண்டிற்கு 14 சதவீதத்தில் காணப்பட்டது.

தேசிய சேமிப்பு வங்கியின் தொழிற்பாடுகளில் காணப்பட்ட இன்னுமொரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி தலைமை அலுவலகத்தில் கணக்கு வைத்திருப்பவர்களுக்கான தன்னியக்கக் கூற்றுப்பொறியினை அறிமுகம் செய்தமையாகும். இவ்வாண்டுக்காலத்தில் தேசிய சேமிப்பு வங்கி ரூபாப் பிணைகளின் மீதான அதன் முதலீடுகளை விரிவாக்கிக் கொண்டது. இப்பிணைகளில் இவ்வாண்டில் செய்யப்பட்ட மொத்த முதலீடு ரூ. 196,080 இலட்சமாகும். திறைசேரி உண்டியல்களிலான முதலீடு ரூ. 200,960 இலட்சத்திலிருந்து ரூ. 133,960 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை கடன் வழங்கல் நடவடிக்கைகள் இவ்வாண்டில் மேலும் விரிவடைந்தன. பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தத் தொகை ரூ. 27,340 இலட்சமாக இருந்ததுடன் கடன்களின் 74 சதவீதமானவை நிலையான வைப்புக்களின் பிணைகளுக்கெதிராகவே வழங்கப்பட்டன.

ஊழியர் நம்பிக்கை நிதியம் அதன் ஒதுக்குகள் வளர்ச்சியடைந்தமை காரணமாக மேலும் விரிவடைந்தன. உறுப்பினர்களின் மொத்த உதவு தொகை முன்னைய ஆண்டின் ரூ. 11,830 இலட்சத்துக்கெதிராக ரூ. 14,180 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. அதேவேளை வெளிநின்ற உறுப்பினர் நிலுவைகள் 1993 இறுதியின் ரூ. 78,830 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 99,690 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மூலவளங்களில் பெருந்தொகையானவை அரச பிணைகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளன. அரச பிணைகளின் மொத்த முதலீடுகள் ரூ. 58,690 இலட்சத்திலிருந்து இவ்வாண்டில் ரூ. 65,390 இலட்சத்திற்கு ரூ. 6,700 இலட்சத்தால் அதிகரித்தன. ஏனைய முக்கிய முதலீடுகள் கூட்டுறவுப் பங்குடமையிலும் (ரூ. 11,740 இலட்சம்) தொகுதிக் கடன்களிலும் (ரூ. 13,650 இலட்சம்) காணப்பட்டன.

**நீண்டகாலக் கடன் வழங்கும் நிறுவனங்கள்**

கடன் வழங்கும் நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்தமையைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வரையறுக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 19,280 இலட்சத்திற்கெதிராக ரூ. 27,480 இலட்சமாக விளங்கியது. எனினும் 1994 இல் கடன் வழங்கலுக்காக வரையறுக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் 1993 இன் ரூ. 45,480 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 42,150 இலட்சமாக அமைந்தமைக்கு வெளி நாட்டு மூலங்களிலிருந்தான கடன் வசதிகள் குறைவடைந்தமையே காரணமாகும். நிதியத்தின் முக்கிய மூலங்களாக கடன்களின் மீளளிப்புக்கள் (ரூ. 23,850 இலட்சம்) பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கிகளிலிருந்தான கடன்பாடுகள் (ரூ. 5,000 இலட்சம்) குத்தகைத் தீர்ப்பனவுகள் (ரூ. 4,000 இலட்சம்) என்பன காணப்பட்டன. இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டின் ஒப்புதலளிக்கப்பட்ட 551 உடன் ஒப்பிடுகையில் 678 இற்கு உயர்வடைந்தது. கடன்களின் எண்ணிக்கையில் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களின் பெரும் அதிகரிப்பு வேளாண்மைத் துறையில் காணப்பட்டதுடன் இங்கு கடன்களின் எண்ணிக்கை 88 இனால் உயர்வடைந்தது. பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் மொத்தப்பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 19,280 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 27,480 இலட்சமாக விளங்கியது. ஆண்டின் இறுதியில் கடன்களின் வெளிநின்ற மொத்தப்பெறுமதி ரூ. 72,230 இலட்சமாக இருந்தது. அதேவேளை இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் 20 கம்பனிகளுக்கு ரூ. 5,890 இலட்சம் தொகையான ஒப்புரவு நிதி வசதிகளை வழங்கியது. இவற்றில் ஒன்பது கைத்தொழில் வகையில் காணப்பட்டதுடன் ரூ. 4,230 இலட்சம் நிதியையும் பெற்றன.

கைத்தொழில்துறைக்கு வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 22,950 இலட்சமாகக் காணப்பட்டதுடன் ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் பெரும்பங்கு உணவு, குடிபானம் புகையிலைத் துறைக்கானதாக இருந்தது. சுற்றுலா (ரூ. 6,790 இலட்சம்) வேளாண்மை (ரூ. 3,070 இலட்சம்) போக்குவரத்துப் பணிகள் (ரூ. 5,160 இலட்சம்) என்பன குறிப்பிடத்தக்க கடன் தொகையைப் பெற்ற ஏனைய துறைகளாகும். கடந்த காலங்களைப் போன்றே வெளிநின்ற கடன்களில் பெரும்பாலானவை (63 சதவீதம்) நடுத்தரகால வகையினவாகும்.

ஆண்டுக்காலத்தில், தேசிய அபிவிருத்தி வங்கியின் மூலவளத்தளம் மற்றும் கடன் வழங்கல் நடவடிக்கைகள் இரண்டும் மேலும் விரிவடைந்தன. தே. அ. வங்கிக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளங்கள் ரூ. 54,330

## நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும்

| நோக்கம் | இ. அ. நி. கூ. | | தே. சே. வ. | | அ. ஈ. மு. வ. | |
|---|---|---|---|---|---|---|
| | 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 |
| 1. வேளாண்மை ... | 110 | 308 | – | – | – | 12 |
| i பெருந்தோட்டம் ... | 110 | 308 | – | – | – | – |
| ii உள்நாடு ... | – | – | – | – | – | – |
| iii கால் நடையும் பாற் பண்ணையும் ... | – | – | – | – | – | – |
| iv மீன்பிடி ... | – | – | – | – | – | – |
| v வேளாண்மை நோக்கங்களுக் கான நிலங்களின் கொள்வனவு | – | – | – | – | – | 12 |
| 2. கைத்தொழில் ... | 2,298 | 2,718 | – | – | – | – |
| i பெருந்தோட்டப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் | – | – | – | – | – | – |
| ii வேளாண்மைப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் | – | – | – | – | – | – |
| iii பொறியியலும் கட்டட வர்த்தகமும் ... | 86 | 201 | – | – | – | – |
| iv சுரங்கமகழ்தல் ... | 11 | 16 | – | – | – | – |
| v உணவு, குடிபானங்கள் புகையிலை ... | 329 | 463 | – | – | – | – |
| vi புடவைகள் அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் | 330 | 311 | – | – | – | – |
| vii இறப்பரும் பிளாத்திக்கு உற்பத்திகளும் ... | 239 | 326 | – | – | – | – |
| viii உலோகங்கள் இரசாயனங்கள் பொறியியல் ... | 502 | 431 | – | – | – | – |
| ix ஏனைய தயாரிப்புகள் ... | 801 | 970 | – | – | – | – |
| 3. சுற்றுலா ... | 448 | 694 | – | – | – | – |
| 4. வர்த்தகம் (பணிகளிலுள்ள கைத்தொழில்கள்) ... | – | – | – | – | – | – |
| 5. நிதி ... | 110 | 181 | 580 | 470 | – | – |
| i நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் ... | 110 | 181 | 580 | 470 | – | – |
| ii முதலீட்டுக் கடன்கள் ... | – | – | – | – | – | – |
| iii ஏனையவை ... | – | – | – | – | – | – |
| 6. வீடமைப்பு ... | – | – | 156 | 236 | 884 | 670 |
| i வீடுகளின் கொள்வனவு ... | – | – | 12 | 58 | 170 | 182 |
| ii கட்டடவாக்கம் ... | – | – | 144 | 178 | 714 | 488 |
| 7. கடன் மீட்பு ... | – | – | – | – | 15 | 11 |
| 8. ஏனைய கடன்கள ... | 197 | 657 | 1,510 | 2,028 | 138 | 31 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப்பட்டவை) | 3,163 | 4,558 | 2,246 | 2,734 | 1,037 | 724 |
| வழங்கப்பட்ட கடன்கள் (1) .. | 1,928 | 2,748 | 2,245 | 2,734 | 674 | 635 |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கடன்களில் வழங்கப்பட்ட கடனின் % .. | 61 | 60 | 100 | 100 | 65 | 88 |

குறிப்பு (1) முன்னைய ஆண்டுகளில் ஒப்புதலளிக்கப்பட்டு ஆய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

(2) மீள் நிதியிடல் கடன்களையும் ஒப்புரவு முதலீடுகளையும் உள்ளடக்கும்.

## வழுங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வீ அ. நி. கூ. | | தே.அ. வ. (2) | | தே. வீ. அ. மே. | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடன்களின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 | 1993 | 1994 |
| – | – | 148 | 324 | – | – | 258 | 644 | 2.2 | 4.4 |
| – | – | – | – | – | – | 110 | 308 | 0.9 | 2.1 |
| – | – | 148 | 324 | – | – | 148 | 324 | 1.3 | 2.2 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | 12 | – | – |
| – | – | 2,566 | 2,510 | – | – | 4,864 | 5,228 | 42.0 | 35.9 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | – | – | – | – | 86 | 201 | 0.7 | 1.4 |
| – | – | – | – | | | 11 | 16 | 0.1 | 0.1 |
| – | – | 603 | 564 | – | – | 932 | 1,027 | 8.0 | 7.1 |
| – | – | 778 | 496 | – | – | 1,108 | 807 | 9.6 | 5.5 |
| – | – | – | 64 | – | – | 239 | 390 | 2.1 | 2.7 |
| – | – | 645 | 933 | – | – | 1,147 | 1,364 | 9.9 | 9.4 |
| – | – | 540 | 453 | – | – | 1,341 | 1,423 | 11.6 | 9.8 |
| – | – | 95 | 505 | – | – | 543 | 1,199 | 4.7 | 8.2 |
| – | – | 1,005 | 1,312 | – | – | 1,005 | 1,312 | 8.7 | 9.0 |
| – | – | 299 | 70 | – | – | 989 | 721 | 8.5 | 5.0 |
| – | – | 26 | 70 | – | – | 716 | 721 | 6.2 | 5.0 |
| – | – | – | – | – | – | – | – | – | – |
| – | – | 273 | – | – | – | 273 | – | 2.4 | – |
| 192 | 291 | – | – | 755 | 547 | 1,987 | 1,744 | 17.1 | 12.0 |
| 27 | 151 | – | – | 290 | 248 | 499 | 639 | 4.3 | 4.4 |
| 165 | 140 | – | – | 465 | 299 | 1,488 | 1,105 | 12.8 | 7.6 |
| 82 | – | – | – | | – | 97 | 11 | 0.8 | 0.1 |
| – | – | – | 979 | | – | 1,845 | 3,695 | 15.9 | 25.4 |
| 274 | 291 | 4,113 | 5,700 | 755 | 547 | 11,588 | 14,554 | 100.0 | 100.0 |
| 249 | 255 | 4,100 | 5,418 | 534 | 454 | 9,730 | 12,244 | | |
| 91 | 88 | 100 | 95 | 71 | 83 | 84 | 84 | | |

மூலங்கள் : இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இ. அ. நி. கூ.)
தேசிய சேமிப்பு வங்கி (தே. சே. வ.)
அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ.)
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வீ. அ. நி. கூ.)
தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ.)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை (தே. வீ. அ. மே)

இலட்சத்திற்கு ரூ. 5,040 இலட்சத்தினால் உயர்வடைந்தன. அதிகரிப்பு முக்கியமாக வாடிக்கையாளர்களிடமிருந்தான கடன் மீளப்பெறுகைகளூடாகவே கிடைத்தது. இது முன்னைய ஆண்டின் ரூ. 21,430 இலட்சத்திலிருந்து ரூ. 33,560 இலட்சத்திற்கு அதிகரித்தது. நிதியின் ஏனைய முக்கிய மூலங்களாக தொடர்ச்சியான கடன்கள் பயன்படுத்தப்பட்டமை (ரூ. 7,330 இலட்சம்) ஒதுக்கங்களின் பயன்பாடு (ரூ. 6,860 இலட்சம்) என்பன காணப்பட்டன.

தே. அ. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் 1993 இன் ரூ. 41,140 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 54,180 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. கடன்களின் எண்ணிக்கை 262 இலிருந்து 352 இற்கு அதிகரித்தது. அத்துடன் ஒப்புரவு நிதியிடல் மூலமாக ரூ. 2,810 இலட்சங்கொண்ட தொகை 22 செயற்றிட்டங்களுக்கு வழங்கப்பட்டது. பெருந் தொகையான கடன் ஒப்புதல்கள் கைத்தொழில்துறை தொடர்பானவையாக இருந்ததுடன் அவை ரூ. 23,370 இலட்சத்தினைப் பெற்றன. ஏனைய துறைகளுக்கு ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் பணிகளை வழங்கும் கைத்தொழில்கள் (ரூ. 13,070 இலட்சம்) சொத்து அபிவிருத்தி (ரூ. 8,740 இலட்சம்) வேளாண்மை (ரூ. 3,240 இலட்சம்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தது. கைத்தொழில் வகையில் 1994 இல் கொடுகடனைப்பெற்ற முக்கிய துணைத்துறைகளாக உணவு, குடிபானம், புகையிலை (ரூ. 5,640 இலட்சம்) இரசாயன மற்றும் பிளாத்திக்கு உற்பத்திகள் (ரூ. 7,290 இலட்சம்) புடவைகள் அணியும் ஆடைகள், தோல் உற்பத்திகள் (ரூ. 4,020 இலட்சம்) என்பன விளங்கின.

இலங்கையில் வீடமைப்பு நிதியிடலில் ஈடுபட்டுள்ள முக்கிய நிறுவனமான அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1994 இல் மிதமான விரிவாக்கத்தினைப் பதிவு செய்துள்ளது. கடன் வழங்கலுக்காக அ. ஈ. மு. வங்கிக்கு கிடைக்கத்தக்கதாகவிருந்த மொத்த மூலவளங்கள் 1993 இன் ரூ. 10,290 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 13,360 இலட்சத்திற்கு அதிகரித்தன. முன்னைய ஆண்டுகளைப் போன்றே, வாடிக்கையாளர்களின் கடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 7,890 இலட்சமாக விளங்கி கடன் வழங்கலுக்கு கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களில் பெரும்பங்கிற்கு வகைகூறியது.

வீடமைப்புக் கட்டடவாக்கம், வீடுகளின் கொள்வனவு, கட்டடத்திற்கான நிலம் ஆகியனவற்றிற்கான மொத்தக்கடன் பகிர்ந்தளிப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 6,740 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 6,340 இலட்சமாக விளங்கியது. ஒப்புதலளிக்கப்பட்ட கடன்களில் 77 சதவீதமானவை ரூ. 100,000 - 1,000,000 வரையான வீச்சில் காணப்பட்டன. வீடமைப்பிற்கான அ. ஈ. மு. வங்கியின் கடன் வழங்கல் வீதம் 20.5 - 22.0 சதவீத வீச்சிற்கிடையில் காணப்பட்டது. ரூ. 500,000 இற்கு மேற்பட்ட கடன்களுக்குப் பொருந்தத்தக்க வீதம் 22.0 சதவீதமாகவும் ரூ. 500,000 இற்கு உட்பட்ட கடன்களுக்கான வீதம் 20.5 சதவீதமாகவும் காணப்பட்டது.

## நிதிக் கூட்டு நிலையங்கள்

நிதிக் கூட்டு நிலையங்களினது தொழிற்பாட்டில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க விரிவாக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 1994 இல் நிதிக் கூட்டு நிலையங்களின்

## அட்டவணை 1.75

### பதிவு செய்யப்பட்ட நிதிக்கூட்டு நிலையங்களின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடும்

(ரூபா பத்து இலட்சங்களில்)

| விடயம் | 1993 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | 1994 மாச்சு 31 இல் உள்ளவாறு | 1994 யூன் 30 இல் உள்ளவாறு | 1994 செத்தெம்பர் 30 இல் உள்ளவாறு | 1994 திசெம்பர் 31 இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| **மூலங்கள்** | | | | | |
| 1. மூலதனக் கணக்கு | 1,335.1 | 1,556.1 | 1,758.3 | 1,833.3 | 2,183.6 |
| 2. வைப்புக்கள் | 5,492.6 | 5,901.7 | 6,271.9 | 6,525.3 | 6,788.4 |
| 3. கடன்பாடுகள் | 1,157.7 | 1,198.9 | 1,245.7 | 1,235.1 | 1,335.1 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் | 1,035.7 | 1,117.6 | 1,591.4 | 1,478.9 | 1,566.4 |
| மொத்தம் | 9,021.1 | 9,834.3 | 10,867.3 | 11,072.6 | 11,873.5 |
| **பயன்பாடு** | | | | | |
| 1. வாடகைக் கொள்வனவு வியாபாரம் | 2,140.7 | 2,140.8 | 2,157.0 | 2,172.4 | 2,218.6 |
| 2. வெளிநிற்கும் கடன்கள் | 3,138.8 | 3,516.8 | 3,714.6 | 3,893.2 | 4,273.3 |
| 3. முதலீடுகள் | 1,383.4 | 1,537.8 | 1,691.2 | 1,717.3 | 1,864.8 |
| 4. ஏனைய சொத்துக்கள் | 2,358.2 | 2,638.9 | 3,304.5 | 3,289.7 | 3,516.8 |
| மொத்தம் | 9,021.1 | 9,834.3 | 10,867.3 | 11,072.6 | 11,873.5 |
| மத்திய வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூட்டு நிலையங்கள் | 24 | 24 | 24 | 24 | 24 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி

மொத்தச் சொத்துக்கள் முன்னைய ஆண்டுகளின் 12.4 சதவீதம் (ரூ. 12,790 இலட்சம்) கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக 31.6 சதவீதத்தினால் (ரூ. 28,530 இலட்சம்) அதிகரித்தன. மத்திய வங்கியுடன் பதிவுசெய்யப்பட்டுள்ள நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை தொடர்ந்தும் 24 ஆக விளங்கியது.

குத்தகை நிதியிடல் ரூ. 33,840 இலட்சத்திற்கு ரூ. 10,180 இலட்சத்தினால் அதிகரித்தமையின் காரணமாக வெளிநின்ற மொத்தக் கடன்கள் ரூ. 11,840 இலட்சம் கொண்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பினைக் காட்டின. இவ்வாண்டில், தவணைக் கொள்வனவு நடவடிக்கைகளும் முன்னைய ஆண்டின் ரூ. 6,780 இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு மாறாக ரூ. 780 இலட்சத்தினால் விரிவடைந்தன. அதேவேளை ஏனைய கூட்டு நிலையங்களிலும் அரச பிணைகளிலும் செய்யப்பட்ட முதலீடுகளை உள்ளடக்கிய முதலீடுகள் ரூ. 4,820 இலட்சத்தினால் உயர்வடைந்தன. பொறுப்புக்கள் பக்கத்தில், நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த வைப்புக்கள் 1993 இல் 2.6 சதவீதத்தினால் (ரூ. 1,490 இலட்சம்) வீழ்ச்சியடைந்த பின்னர் 1994 ஆம் ஆண்டின் இறுதியில் ரூ. 67,880 இலட்சத்திற்கு 23.6 சதவீதமான (ரூ. 12,950 இலட்சம்) விரைவான வீதத்தில் வளர்ச்சியடைந்தன. உயர்ந்த வைப்புப் பொறுப்புக்களின் மீது

அதிகரித்த ஒதுக்குகள் தேவைப்படுத்தப்பட்டமையின் காரணமாக ஒதுக்குகளை உள்ளடக்கிய மூலதன நிதியம் ரூ. 13,350 இலட்சத்திலிருந்து ரூ. 21,840 இலட்சத்திற்கு உயர்ந்தது. அதேவேளை கையிலுள்ள பணம் மற்றும் நிதியியல் நிறுவனங்களிலுள்ள வைப்புக்கள் என்பனவற்றின் பேரிலான அதிகரித்த திரவச் சொத்துக்களின் காரணமாக மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்கள் 1993 இறுதியின் 19 சதவீதத்திலிருந்து 1994 இறுதியில் 21.5 சதவீதத்திற்கு உயர்ந்தன. எனினும், மொத்த வைப்புக்களின் விகிதாசாரமாக மொத்த முதலீட்டில் அரச பத்திரங்கள் 11.7 சதவீதத்தில் தொடர்ந்து காணப்பட்டன.

நடுத்தர, நீண்டகால கொடுகடன் நிதியத்தின்கீழ், தவறிய நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்புப் பொறுப்புக்களை ஈடுசெய்வதற்கான நிவாரணக் கொடுப்பனவுகள் தொடர்ந்தும் வழங்கப்பட்டன. இவ்வாண்டில் இரு நிதிக் கூட்டு நிலையங்களுக்கு எல்லாமாக ரூ. 2,630 இலட்சம் கொண்ட தொகை வழங்கப்பட்ட வேளையில் ரூ. 40 இலட்சம் மீள் கொடுப்பனவாகப் பெறப்பட்டது. இதன்படி, மத்திய வங்கியினால் வழங்கப்பட்டு வெளிநின்ற மீள் நிதியிடல் வசதிகள் ரூ. 20,450 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 23,040 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

## சிறப்பியல்புவாய்ந்த நிதியியல் நிறுவனங்கள்

### வணிக வங்கித் தொழில்

வணிக வங்கித் தொழிலில் 1994 ஆம் ஆண்டு இன்னொரு வலுவான செயலாற்றம் மிக்க ஆண்டாக பதிவு செய்யப்பட்டுள்ளது. வணிக வங்கித் தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக வரையறுக்கப்பட்ட ஏசியா மூலதன கூட்டு நிலையமென்ற இன்னொன்று ஏற்படுத்தப்பட்டதுடன் 1994 இறுதியில் தொழிற்பட்ட வணிக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 5 இற்கு உயர்வடைந்தது.

**அட்டவணை 1.76**

**வணிக வங்கிகளின் நடவைக்கைகள்களின் முன்னேற்றம் (1993 - 1994)**

(ரூபா பத்து இலட்சம்)

| | 1993 | 1994 * |
|---|---|---|
| 1. குத்தகையின் மீது பெறப்பட்ட வருவாய் | 168.5 | 289.9 |
| 2. வர்த்தக உண்டியல்களின் கழிவின் மீது வட்டி | 168.4 | 275.5 |
| 3. நிதி மற்றும் சந்தைப்படுத்தல் ஆலோசனை | 13.3 | 7.2 |
| 4. காப்புப் பொறுப்பேற்புத் தரகுகள் | 10.6 | 18.3 |
| 5. காப்புறுதி தரகுகள் | 3.1 | 1.5 |
| 6. விளிம்பு வர்த்தகத்தின் மீதான வட்டி | 11.9 | 52.9 |
| 7. பங்குகளின் முதலீட்டின் மீதான இலாபம் | 35.9 | 175.9 |
| 8. திறைசேரி உண்டியல்களின் மீதான வட்டி | 11.9 | 85.4 |
| 9. ஏனையவை | 106.8 | 243.9 |
| மொத்தம் | 529.6 | 1,150.5 |

* தற்காலிகமானவை

மூலங்கள் : வரையறுக்கப்பட்ட இலங்கை வணிக வங்கி,
வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கி,
வரையறுக்கப்பட்ட செலான் வணிக வங்கி,
வரையறுக்கப்பட்ட வணிக் ஒருங்கிணைப்பு,
வரையறுக்கப்பட்ட ஏசியா கப்பிட்டல்

வணிக வங்கிகளின் மொத்த வருவாய் 1993 இன் 69 சதவீதம் கொண்ட வளர்ச்சிக்கு எதிராக ரூ. 11,510 இலட்சத்திற்கு 117 சதவீதத்தினால் அதிகரித்தது. இதற்கு குத்தகை (ரூ. 1,210 இலட்சம்) வர்த்தக உண்டியல்களின் மீள் கழிவிடல் (ரூ. 1,070 இலட்சம்) பங்குவர்த்தகத்திலிருந்தான இலாபம் (ரூ. 1,400 இலட்சம்) என்பனவற்றிலிருந்தான அதிகரித்த வருமானமே முக்கிய காரணமாகும்.

## குத்தகைக் கூட்டுநிலையங்கள்

குத்தகை நடவடிக்கைகளில் முழுமையாக ஈடுபட்டிருந்த கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை தொடர்ந்தும் மூன்றாகவே காணப்பட்டது. அவையாவன; வரையறுக்கப்பட்ட லங்கா ஓறிக்ஸ் குத்தகைக் கூட்டுநிலையம், வரையறுக்கப்பட்ட கொமர்சல் குத்தகைக் கூட்டு நிலையம், வரையறுக்கப்பட்ட மேர்கன்டைல் குத்தகைக் கூட்டு நிலையம். இக்கூட்டு நிலையங்களின் மொத்தச் சொத்துக்கள் 1993 இறுதியின் ரூ. 21,620 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 29,560 இலட்சத்திற்கு உயர்வடைந்த வேளையில் வழங்கப்பட்ட குத்தகை நிதி 1993 இன் ரூ. 11,340 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 19,180 இலட்சத்திற்கு ரூ. 7,840 இலட்சத்தினால் உயர்வுற்றது.

கருவிகளின் வகைப்படியான குத்தகை நிதி நியதிகளில், நிதியத்தின் முக்கிய பயன்பாட்டாளர்களாக வர்த்தக ஊர்திகள் (ரூ. 10,560 இலட்சம்) பயணிகள் ஊர்திகள் (ரூ. 3,470 இலட்சம்) பொறிகளும் பொறித்தொகுதிகளும் (ரூ. 3,150 இலட்சம்) ஆகிய வகைகள் காணப்பட்டன. துறைவகைப்படி, வழங்கப்பட்ட குத்தகைகள் நிதித் தொழில் (ரூ. 4,080 இலட்சம்) வர்த்தகம் (ரூ. 9,150 இலட்சம்) பணிகள் (ரூ. 2,560 இலட்சம்) என்பனவற்றிற்கு வழிப்படுத்தப்பட்டன.

## துணிகர தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்கள்

துணிகர மூலதன வழங்குநர்களாக தொழிற்படுகின்ற கூட்டுநிலையங்களின் எண்ணிக்கை 1993 இன் ஆறிலிருந்து 1994 இல் ஏழிற்கு அதிகரித்தது. வழங்கப்பட்ட பங்கு மூலதனம் மற்றும் நீண்டகால கடன்கள் என்பனவற்றின் மூலமாக துணிகர தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்களுக்குகிடைக்கத்தக்கதாக இருந்த மொத்த மூலவளத்தளம் 1994 இறுதியில் ரூ. 6,660 இலட்சத்திற்கு 27 சதவீதத்தினால் அதிகரித்தது. ஒப்புரவு செயற்றிட்டத்தில் துணிகர தொழில் முயற்சி மூலதனக் கூட்டு நிலையங்களினால் செய்யப்பட்ட முதலீடு 1994 இல் இரண்டு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்து 1994 இறுதியில் ரூ. 4,170 இலட்ச மட்டத்தை அடைந்தது. இம் மொத்தத்தில், 44 சதவீதம் புதிய தொழிற்பாடுகளை தொடங்குவதற்காகவும் 20 சதவீதம் விரிவாக்கத்திற்காகவும் 9 சதவீதம் கையேற்பு அல்லது கொள்வனவிற்காகவும் மிகுதி 27 சதவீதம் ஏனைய நோக்கங்களுக்கானதாகவும் இருந்தது. உதவப்பட்ட செயற்றிட்டங்களின் துறைவாரியான பகுப்பாய்வானது 66 சதவீதமான நிதி தயாரிப்புத் துறைக்கும், 26 சதவீதமானவை பணிகள் துறைக்கும், 9 சதவீதமானவை வேளாண்மைத்துறைக்கும் வழங்கப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுகிறது.

## காப்புறுதிக் கூட்டு நிலையங்கள்

புதிய ஆயுள் காப்புறுதிக் கூட்டு நிலையமான வரையறுக்கப்பட்ட சனசக்தி ஆயுள் காப்புறுதிக் கூட்டு நிலையம் இவ்வாண்டில் ஏற்படுத்தப்பட்டதுடன் நாட்டில் தொழிற்படுகின்ற காப்புறுதிக் கூட்டு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை ஆறு ஆகியது. ஆயுள் காப்புறுதி மற்றும் பொதுக் காப்புறுதி ஆகிய இரண்டினதும் நடவடிக்கைகள் 1994 இல் மேலும் விரிவடைந்தன.

காப்புறுதிக் கூட்டு நிலையங்களின் ஆயுள் நிதியத்தின் மொத்தப் பெறுமதி 1993 இறுதியின் ரூ. 55,070 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 77,310 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. நடைமுறையிலுள்ள ஆயுள் காப்புறுதிப் பத்திரங்கள் 493,780 இலிருந்து 633,000 இற்கு அதிகரித்தன. வருடாந்த ஆயுள் காப்புறுதிக் கட்டணங்கள் ரூ. 113,130 இலட்சத்திலிருந்து ரூ. 20,310 இலட்சத்திற்கு அதிகரித்தன. அதேவேளை பொதுக் காப்புறுதி நடவடிக்கைகளின் தேறிய காப்புறுதிக் கட்டணங்கள் ரூ. 17,930 இலட்சத்திலிருந்து ரூ. 23,590 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. முன்னைய ஆண்டினைப் போன்றே, உந்து ஊர்தி காப்புறுதியானது பொதுக் காப்புறுதியில் முன்னணித் துறையாக தொடர்ந்தும் விளங்கி இத்துறையின் காப்புறுதிக் கட்டணத்தில் 51 சதவீதத்திற்கு வகைகூறியது. இரண்டாவது பெரும் துறையாக மாறியுள்ள விபத்துக் காப்புறுதி தேறிய காப்புறுதிக் கட்டணத்தில் 26 சதவீதத்தினை வழங்கிய வேளையில் தீக்காப்புறுதி 10 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தது.

## பணச் சந்தை

### பொதுவான போக்குகள்

நிதியியல் நிறுவனங்கள் சந்தையில் புதிய கருவிகளை அறிமுகப்படுத்தியதுடன் தற்போதுள்ள கருவிகளின் பயன்பாட்டையும் அபிவிருத்தி செய்தமையின் காரணமாக பணச்சந்தையின் நடவடிக்கைகள் 1994 இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. கடந்த அண்மைக்காலங்களைப் போன்றே பணச் சந்தையில் வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் முக்கிய செல்வாக்கினை திறைசேரி உண்டியல் சந்தையின் விளைவு வீதங்களின் அசைவுகள் கொண்டிருந்தன. மேலதிகத் திரவத் தன்மையை ஈர்க்கும் பொருட்டு தொடர்ந்து வழங்கப்பட்ட மத்திய வங்கிப் பிணைகள் மீதான விளைவு வீதங்கள் திறைசேரி உண்டியல் மீதான விளைவு வீதங்களுடன் நெருங்கிய தொடர்புபட்டிருந்தன. ஆண்டின் தொடக்கப் பகுதியில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் தொடர்ந்தும் உயர்ந்தளவில் உட்பாய்ந்தமையும் ஆண்டின் இறுதிப்பகுதியில் உட்பாய்ச்சல் சார்பு ரீதியில் வீழ்ச்சியடைந்தமையும் சந்தையின் திரவத்தன்மையின் மீதும் அதன் மூலம் வட்டி வீதங்களின் மீதும் தாக்கத்தைக் கொண்டிருந்தது. 1993 ஒற்றோபரில் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுத் திட்டம் பணச் சந்தையில் குறுங்காலத்தில் ஏற்படும் சடுதியான பெரும் வீழ்ச்சிகளை மிகக்குறைக்க உதவியது.

### வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தை

*1993 இல் காணப்பட்ட வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் விரிவாக்கம் 1994 இலும் தொடர்ந்தது. முன்னைய ஆண்டில் மொத்தப் புரள்வில் காணப்பட்ட 81 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைத் தொடர்ந்து 1994 இல் மொத்தப்புரள்வு 25 சதவீதத்தினால் (ரூ. 4,684,640 இலட்சத்திற்கு) அதிகரித்தது. அழைப்புப் பணச்சந்தை வீதங்கள் 1993 திசெம்பரின் 16.50 – 28.00 சதவீத வீச்சிலிருந்து 1994 யூனில் 2.50 – 17.00 சதவீத வீச்சிற்கும் 1994 செத்தெம்பரில் 0.25 – 14.00 சதவீத வீச்சிற்கும் வீழ்ச்சியடைந்தன. அதன்பின்னர் வீதங்கள் உயரத் தொடங்கி 1994 திசெம்பரில் 14.00 – 28.00 வீச்சினை அடைந்தன.*

## திறைசேரி உண்டியல் சந்தை

### (அ) முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை

*1994 இல் முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதி 1993 இல் வழங்கப்பட்ட ரூ. 158.9 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 168.4 பில்லியனாக விளங்கியது. வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசினால் மேற்கொள்ளப்பட்ட புதிய வழங்கல்கள் 5.5 பில்லியனாக விளங்கிய வேளையில் ரூ. 3.8 பில்லியன் பெறுமதி கொண்ட உண்டியல்கள் முதிர்ச்சியடைந்தன. இதனால் 1994 இல் வழங்கப்பட்ட புதிய திறைசேரி உண்டியல்களின் தேறிய பெறுமதி ரூ. 1.7 பில்லியனாக இருந்தது. இதன் விளைவாக திறைசேரி உண்டியல்களின் மொத்த முகப்புப் பெறுமதி 1993 இறுதியின் ரூ. 97.2 பில்லியனிலிருந்து 1994 இறுதியில் ரூ. 98.9 பில்லியனுக்கு அதிகரித்தது. 1993 இறுதியில் ரூ. 3.9 பில்லியனாக இருந்த மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்கள் செத்தெம்பரில் மிகக் குறைந்த மட்டத்திற்கு வீழ்ச்சியடைந்தன. எனினும் சந்தைத் திரவத்தன்மை குறைக்கப்பட்டமையின் காரணமாகவும் இறுதிக் காலாண்டின் அதிகரித்த வழங்கலினாலும் மத்திய வங்கியின் உடமைகள் 1994 இறுதியில் ரூ. 5.1 பில்லியனுக்கு அதிகரித்தன. இது 1994 இறுதியின் 4.8 சதவீதங்கொண்ட உடமைகளுடன் ஒப்பிடுகையில் மொத்த வெளிநின்ற திறைசேரி உண்டியல்களில் 5.7 சதவீதத்திற்கு வகைகூறியது. 1994 இல் முதலாந்தரச் சந்தையில் வழங்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் மொத்தப் பெறுமதியில் ரூ. 20.1 பில்லியன் (11.9 சதவீதம்) மத்திய வங்கியினாலும் ரூ. 101.9 பில்லியன் (60.6 சதவீதம்) வர்த்தக வங்கிகளினாலும் ரூ. 46.3 பில்லியன் (27.5 சதவீதம்) ஏனையோராலும் கொள்வனவு செய்யப்பட்டன. எனினும் உள்ளகச் சந்தை நடவடிக்கைளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1994 இறுதியில் ஏட்டுப் பெறுமதி அடிப்படையில் வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் பங்கீடு மத்திய வங்கி 5.7 சதவீதமாகவும் வர்த்தக வங்கிகள் 16.8 சதவீதமாகவும் ஏனையவர்கள் 71.5 சதவீதமாகவும் இருந்தமையைக் காட்டுகின்றது.*

## அட்டவணை 1.77

## பணச் சந்தைத் தொழிற்பாடுகள் (1992 - 1994)

(ப. இ. ரூபாய்களில்)

| காலம் | | அழைப்புப் பணச் சந்தை | | முதலாந்தரத் திறைசேரிச் சந்தை | | | | | | இரண்டாந்தரத் திறைசேரிச் சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஏற்றுக்கொள்ளப்பட்ட (கொள்வனவுகள்) தொகை | | | | | | |
| | | மொத்த கடன் வழங்கல்/ கடன்பாடு | கால முடிவில் வெளி நின்றவை (அ) | மொத்த வெளி நின்றவை | வழங்கப் பட்ட தொகை | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | மொத்த விற்பனை | மொத்தக் கொள்வனவு | கால முடிவில் வெளிநின்ற நிலை |
| 1992 | 1ஆம் காலாண்டு | 40,912 | 580 | 73,722.4 | 43,723.3 | 21,652.8 | 4,245.7 | 17,824.8 | 43,723.3 | 32,158 | 12,520 | 2,103 |
| | 2ஆம் காலாண்டு | 58,123 | 1,265 | 76,967.7 | 65,821.3 | 38,341.5 | 8,591.3 | 18,888.5 | 65,821.3 | 41,328 | 10,832 | 1,927 |
| | 3ஆம் காலாண்டு | 45,823 | 1,288 | 82,295.7 | 47,115.7 | 28,346.2 | 8,351.5 | 10,418.0 | 47,115.7 | 24,345 | 11,234 | 3,869 |
| | 4ஆம் காலாண்டு | 62,307 | 1,458 | 87,095.7 | 38,147.9 | 20,851.9 | 12,722.0 | 4,574.0 | 38,147.9 | 21,535 | 15,026 | 3,696 |
| 1993 | 1ஆம் காலாண்டு | 78,122 | 1,059 | 88,095.7 | 35,632.2 | 11,120.2 | 13,749.0 | 10,763.0 | 35,632.2 | 27,670 | 16,565 | 3,285 |
| | 2ஆம் காலாண்டு | 100,584 | 1,571 | 92,495.7 | 50,735.9 | 16,610.9 | 20,467.0 | 13,658.0 | 50,735.9 | 27,026 | 13,000 | 3,962 |
| | 3ஆம் காலாண்டு | 98,377 | 1,004 | 94,495.7 | 42,028.9 | 14,076.3 | 12,896.6 | 15,056.0 | 42,028.9 | 27,377 | 8,150 | 5,742 |
| | 4ஆம் காலாண்டு | 97,907 | 1,192 | 97,195.7 | 30,459.3 | 6,394.0 | 17,622.5 | 6,422.8 | 30,459.3 | 12,690 | 9,136 | 2,777 |
| 1994 | 1ஆம் காலாண்டு | 126,036 | 1,125 | 97,995.7 | 29,301.5 | 3,601.0 | 13,549.5 | 12,151.0 | 29,301.5 | 6,948.4 | 2,505.6 | 1,560 |
| | 2ஆம் காலாண்டு | 88,612 | 2,144 | 98,095.7 | 36,151.6 | 4,147.4 | 22,885.1 | 9,119.0 | 36,151.6 | 5,546.2 | 5,792.2 | 2,688 |
| | 3ஆம் காலாண்டு | 114,341 | 1,811 | 95,395.7 | 45,660.1 | 4,475.0 | 29,702.1 | 11,483.0 | 45,660.1 | 5,484.8 | 2,069.7 | 2,939 |
| | 4ஆம் காலாண்டு | 139,475 | 1,242 | 98,895.7 | 57,255.3 | 7,880.8 | 35,812.5 | 13,562.0 | 57,255.3 | 3,208.3 | 9,097.0 | 1,415 |

(அ) ஒவ்வொரு காலாண்டிலும் இறுதிக் கிழமையில் வெளி நிற்கும் தொகை.

மூலம் : இலங்கை மத்திய வங்கி

## (ஆ) மத்திய வங்கியின் இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை

*1994 இல் மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையிலிருந்தான திறைசேரி உண்டியல்களின் விற்பனையில் (கழிவிடல்) மேலுமொரு வீழ்ச்சி காணப்பட்டது. 1994 இல் மொத்த விற்பனைப் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 94.8 பில்லியனுக் கெதிராக ரூ. 21.2 பில்லியனாக இருந்தது. இக்குறைந்த மட்ட விற்பனைக்கு மத்திய வங்கியின் சொத்துப்பட்டியலில் கிடைக்கத்தக்கதாகவிருந்த உண்டியல்களில் ஏற்பட்ட குறைப்பு, மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட மீள்கொள்வனவு வசதிகளுக்கு பெயர்ந்தமை ஆகிய இரண்டும் காரணங்களாகும். விற்பனையின் மீதான விளைவு வீதங்கள் முதலாந்தரச் சந்தையின் வீதங்களுடன் தொடர்புபட்டுள்ளமையால் அதே மாதிரியான தன்மைகளே தொடர்ந்தன. மத்திய வங்கியினால் விற்பனை செய்யப்பட்ட 3 மாத உண்டியல்கள் மீதான விளைவுவீதம் 1993 இறுதியில் 17.84 சதவீதத்திலிருந்து யூன் இறுதியில் 15.14 சதவீதத்திற்கு உயர்வதற்கு முன்னர் மாச்சு இறுதியில் 12.90 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதன் பின்னர் வீதம் ஒற்றோபர் இறுதியில் 11.33 சதவீத குறைந்த மட்டத்தை அது அடையும்வரை மீண்டுமொரு முறை வீழ்ச்சியடைந்தது. முதலாந்தரச் சந்தையின் விளைவுகளில் ஏற்பட்ட மிகக்கூடியதொரு உயர்வினைப்பின்பற்றி மத்திய வங்கியின் இரண்டாந்தரச் சந்தையிலும் தொடர்பான அதிகரிப்புக்களை ஏற்படுத்தியதுடன் 1994 இன் இறுதிப் பகுதியில் 3 மாத உண்டியல்களின் விற்பனை மீதான விளைவு 18.48 சதவீதமாக விளங்கியது. இதே போன்ற அசைவுகள் இரண்டாந்தரச் சந்தையில் மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட (மீள் கழிவிடல்) வற்றின் மீதான விளைவு வீதங்களிலும் காணப்பட்டன. மூன்றுமாத உண்டியல்களின் மீது 1993 இறுதியில் 20.84 சதவீதமாக இருந்த மீள் கழிவிடல் விளைவு வீதம் ஒற்றோபர் இறுதியில் 14.83 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்ததெனினும் 1994 இறுதியில் 22.98 சதவீதமட்டத்தினை அடைந்தது.*

## (இ) திறைசேரி உண்டியல்களுக்கான மத்திய வங்கி மீள் கொள்வனவுச் சந்தை

*1993 ஒற்றோபரில் மீள் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் மத்திய வங்கியினால் தொடங்கப்பட்ட திறைசேரி உண்டியல் விற்பனைகள் 1994 இல் விரிவடைந்தன. அழைப்புப் பணச்சந்தையின் வட்டிவீதங்களை சமநிலைப்படுத்துவதற்கும் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கானதொரு கருவியாகவும் தொழிற்பட்டு இரு நோக்கங்களையும் நிறைவேற்றும் எனக்கருதப்பட்ட இவ்வசதி 1994 இல் இவ்விரண்டு நோக்கங்களையும் ஓரளவிற்கு அடைந்தது. எனினும் இந்நடவடிக்கை மத்திய வங்கியின் பட்டியலிலுள்ள திறைசேரி உண்டியல்களில் பற்றாக்குறை ஏற்பட்டமையினால் அடிக்கடி கட்டுப்படுத்தப்பட்டது. உயர்ந்த திரவத்தன்மையுள்ள சந்தை நிலைமைகளில் மீள் கொள்வனவுச் சந்தை நடவடிக்கைகள் மிகத்தீவிரமாக இருந்தன.*

*1994 இல் மத்திய வங்கியின் மொத்த மீள் கொள்வனவு விற்பனைகள் ரூ. 230.9 பில்லியனாக விளங்கின. ஒற்றோபரில் தொழிற்படத் தொடங்கியதைத் தொடர்ந்து 1993 இதன் இறுதி மூன்றுமாதங்களின் விற்பனைகள் ரூ. 38.9 பில்லியனாக இருந்தன. ஒரு நாள் மீள் கொள்வனவின் மீதான விளைவு வீதமானது திறைசேரி உண்டியல் சந்தையில் நிலவுகின்ற வீதங்கள் அழைப்புப் பணச்சந்தையிலுள்ள திரவத்தன்மை, மற்றும் பொதுவான பொருளாதார நிலைமைகள்*

என்பனவற்றின் அடிப்படையில் மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்பட்டது. 1993 இறுதியில் 16.50 சதவீதமாக விளங்கிய ஒரு நாள் உண்டியல்களுக்கான மீள் கொள்வனவு வீதம் யூன் இறுதியில் 11.50 சதவீதத்திற்கு படிப்படியாக வீழ்ச்சியடைந்தது. இது யூலையிலும் ஓகத்திலும் மெதுவாக உயர்ந்ததெனினும் செத்தெம்பரில் மீண்டும் 10.00 சதவீதத்திற்கு குறைவடைந்தது. அழைப்புப் பணச் சந்தையில் காணப்பட்ட இறுக்கமான திரவத்தன்மை நிலைமைகளையும், நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கான மத்திய வங்கியின் நடவடிக்கைகளையும் தொடர்ந்து ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் ஒரு நாள் மீள் கொள்வனவு வீதம் பல தடவைகள் உயர்த்தப்பட்டதுடன் திசெம்பர் இறுதியில் 20.00 சதவீத மட்டத்தை அடைந்தது.

## மத்திய வங்கிப் பிணைகள்

மத்திய வங்கியின் பட்டியலில் திறைசேரி உண்டியல்களின் கையிருப்பு மட்டுப்படுத்தப்பட்டிருந்தமையினால் நாணயக் கொள்கை நோக்கங்களுக்காக வங்கி தனது சொந்தப் பிணைகளைத் தொடர்ந்து வழங்கியது. ஆண்டின் முதல் அரைப்பகுதியில் இவ்வழங்கல்கள் ஆறுமாத உண்டியல்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தவேளையில் பின் அரைப்பகுதியின் வழங்கல்கள் மூன்றுமாத உண்டியல்களை முக்கிய கூறாகக் கொண்டிருந்தன. மத்திய வங்கிப் பிணைகளின் விளைவுகள் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகளுடன் மிகவும் நெருங்கியதாக இருந்தன. மத்திய வங்கிப் பிணைகளின்பேரிலான அதன் வெளிநின்ற பொறுப்பு 1993 இறுதியின் ரூ. 21,550 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 37,400 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

## உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தைகள்

மத்திய வங்கி அதன் இடையீட்டு நாணயமான ஐ. அ. டொலரின் உடன்வாங்கும், விற்கும் வீதங்களைத் தொடர்ந்து அறிவித்து வந்தது. வாங்கும், விற்கும் வீதத்திற்கிடையிலான இடைவெளி 1 சதவீதத்தில் பேணப்பட்டது. 1993 இறுதியில் ஒரு டொலருக்கு ரூ. 49.31 ஆக விளங்கிய வாங்கும் வீதம் டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி உயர்வடைந்தமையைத் தொடர்ந்து ஏப்பிறல் இறுதியில் ரூ. 48.79 இற்கு வீழ்ச்சியடைந்தது. விற்கும் வீதம் இக்காலப் பகுதியில் டொலர் ஒன்றுக்கு ரூ. 49.80 இலிருந்து ரூ. 49.28 இற்கு வீழ்ச்சியடைந்தது. அதன் பின்னர் யூனிலும், ஒற்றோபரிலும் பெறுமானத்தில் சிறிதளவு உயர்ச்சி காணப்பட்டபோதிலும் ரூபாவின் பெறுமதி தேய்வடைந்து 1994 திசெம்பர் இறுதியில் வாங்கும் வீதம் ரூ. 49.73 ஆகவும் விற்கும் வீதம் ரூ. 50.23 ஆகவும் விளங்கின. மத்திய வங்கியின் கொள்வனவுகள் ஐ. அ. டொலர் 6,520 இலட்சமாக விளங்கி 1993 இன் ஐ. அ. டொலர் 6,420 இலட்சங்கொண்ட கொள்வனவுகளைவிட 5 சதவீதம் குறைவாக விளங்கியது. மத்திய வங்கியின் விற்பனைகள் 1993 இன் ஐ. அ. டொலர் 200 இலட்சத்திலிருந்து 1994 இல் ஐ. அ. டொலர் 120 இலட்சத்திற்கு 38 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன.

### கரை கடந்த சந்தை

வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவுகளின் (வெநாவபி) சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1993 இல் பதிவுசெய்யப்பட்ட சிறிதளவான வீழ்ச்சிக்கு மாறாக 1994 இல் 15 சதவீதத்தால் வளர்ச்சியுற்றன. இலங்கையில் தொழிற்படும் 23 வெநாவ பிரிவுகளின் சொத்துக்கள்/பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி 1993 இறுதியின் ஐ. அ. டொலர் 11,350 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ஐ. அ. டொலர் 13,040 இலட்சத்திற்கு அதிகரித்தது. சொத்துக்கள் பக்கத்தில் வதிவற்றோருக்கான கடன்களும் முற்பணங்களும் ஐ. அ. டொலர் 5,400 இலட்சத்திற்கு 18.6 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் வதிவோருக்கான கடன்களும் முற்பணங்களும் ஐ. அ. டொலர் 7,250 இலட்சத்திற்கு 14.6 சதவீதத்தால் அதிகரித்தன. வதிவோர் வகையில் முதலீட்டுச் சபைக்கான முற்பணங்கள் 28.7 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் ஏனைய ஒப்புதலளிக்கப்பட்ட உள்நாட்டுத் தொழில் முயற்சிகளுக்கான முற்பணங்கள் 15.9 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. இவ்வாறே பொறுப்புக்கள் பக்கத்திலும் வதிவற்றோரின் வைப்புக்கள் 1994 இல் ஐ. அ. டொலர் 6,650 இலட்சத்திற்கு 10.6 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் வதிவோரின் வைப்புக்கள் ஐ. அ. டொலர் 537 இலட்சத்திற்கு 22 சதவீதத்தால் உயர்வடைந்தன.

### வைப்புச் சான்றிதழ்கள்

1994 இல் வர்த்தக வங்கிகளும் நிதிக்கூட்டு நிலையங்களும் வைப்புச் சான்றிதழ்களைத் தொடர்ந்தும் வழங்கின. 1994 இறுதியில் வர்த்தக வங்கிகளாலும் நிதிக்கூட்டு நிலையங்களாலும் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற பெறுமதி 1993 இறுதியில் வெளிநின்ற ரூ. 50,450 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 65,920 இலட்சமாக விளங்கி 31 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. வர்த்தக வங்கிகளால் செலுத்தப்பட்ட வட்டிவீதங்கள் 1993 இன் 14 – 21 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 9 – 22 சதவீத வீச்சில் வேறுபட்டன. நிதிக்கூட்டு நிலையங்களால் செலுத்தப்பட்ட வீதங்கள் 1993 இல் நிலவிய அதே வீச்சான 16 – 22 சதவீத வீச்சில் காணப்பட்டன.

### புதிய படுகடன் கருவிகள்

திறைசேரி உண்டியல் உத்தரவாதப் பிணைகளான (திஉஉபி) புதிய சொத்து உத்தரவாதப்படுகடன் கருவியொன்று 1994 இல் ஆரம்பிக்கப்பட்டது. இப்பிணைகள் வழங்குனர் வசமிருந்த திறைசேரி உண்டியல்களினால் உத்தரவாதமளிக்கப்பட்டவையாகும். தி.உ.உ. பிணைகளின் முதலாவது வழங்கல் ரூ. 1,920 இலட்சத்திற்கானதாகவும் ஒரு வருட முதிர்ச்சிக்காலத்தைக் கொண்டதாகவும் விளங்கியது.

### மூலதனச் சந்தை

வெளிநாட்டு மூலதனத்தின் தொடர்ச்சியான அக்கறை காரணமாக ஆண்டின் முற்பகுதியில் மூலதனச் சந்தை அதன் செழிப்பான தன்மையினைப் பேணிய

போதிலும் தொடர்ந்து வந்த மாதங்களில் தேசிய தேர்தல்கள், வெளிநாட்டு பொருளாதாரங்களில் வட்டி வீதங்களின் அதிகரித்துச் செல்லும் போக்கு ஆகியவற்றின் பின்னணியில் சந்தை பின்னடைவினைக் கொண்டிருந்தது. 1993 திசெம்பர் இறுதியில் 979.0 இலிருந்து 1994 பெப்புருவரி இறுதியில் 1,375.1 இற்கு 40 சதவீதத்தால் உயர்வடைந்த எல்லாப் பங்குகளினதும் விலைச்சுட்டெண் ஐந்து

**அட்டவணை 1.78**

**பங்குச்சந்தைக் குறிகாட்டிகள் 1991 – 1994**

| | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம் (ப.இ.ரூ.) திசெம்பர் 31 இல் | 81,840 | 66,200 | 123,789 | 143,210 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை (எண்) | 6 | 12 | 12 | 15 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை (ப.இ.) | 12.51 | 78.24 | 49.05 | 139.4 |
| 4. வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) | 326 | 1,370.1 | 1,246.8 | 3,075.0 |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 79 | 88 | 351 | 506 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) | 4,304 | 4,969 | 18,579 | 34,522 |
| 7. விலைக் குறிகாட்டிகள் – கொ.ப.ப. இன் முழுவதும் திசெ. 31 இல் உள்ளவாறு | 837.79 | 605.31 | 978.97 | 986.73 |
| கொ.ப.ப. வின் உணர்விலைச் சுட்டெண் | 1,198.60 | 826.57 | 1,442.44 | 1,438.82 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

மாதங்களுக்குத் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து 1994 யூலை இறுதியில் 976.5 இற்கு 29 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஓகத்து செத்தெம்பர் மாதங்களில் ஒரு சிறு மீட்சி காணப்பட்டபோதிலும் இது சிறிது காலமே நீடித்தது. இறுதிக்காலாண்டில் பங்கு விலைகள் மீண்டும் வீழ்ச்சியுற்றன. எல்லாப் பங்குகளினதும் விலைச்சுட்டெண் ஆண்டின் இறுதியில் 986.7 இல் முடிவுற்றது.

1993 இல் 62 சதவீதத்தால் (374 சுட்டெண் புள்ளிகள்) வளர்ச்சியடைந்த எல்லாப் பங்குகளினதும் விலைச்சுட்டெண் 1994 இல் 1 சதவீதத்திற்கும் குறைவாக (8 சுட்டெண் புள்ளிகள்) வளர்ச்சியடைந்தது. 1993 இல் 75 சதவீதத்தால் (615 சுட்டெண் புள்ளிகள்) முன்னேற்றமடைந்த உணர்விலைச்சுட்டெண் 1994 இல் 0.3 சதவீதம் (4 சுட்டெண் புள்ளிகள்) கொண்ட சிறிதளவு வீழ்ச்சியினைக் காட்டியது. வர்த்தகப் புரள்வு மற்றும் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை என்பனவற்றின் நியதிகளில் சந்தை நடவடிக்கைகளின் மட்டம் 1994 இன் பின்னரைப் பகுதியினைவிட முதல் அரைப்பகுதியில் உயர்வாக விளங்கியது.

எனினும் ஆண்டு முழுவதிலும் காணப்பட்ட சந்தையின் பொதுவான கரடித் தன்மையின் மத்தியிலும் 1993 இனைவிட 1994 இல் சந்தை நடவடிக்கைகள் உயர்ந்த மட்டத்தில் காணப்பட்டன. ஆண்டின் மொத்தப் புரழ்வு 1993 இன் ரூ. 185,790 இலட்சத்திலிருந்து 1994 இல் ரூ. 345,220 இலட்சத்திற்கு அதிகரித்தது. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 1993 இன் 3,510 இலட்சத்திலிருந்து 1994 இல் 5,060 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. 1993 இறுதியில் ரூ. 123.8 பில்லியனாக விளங்கிய சந்தை மூலதனவாக்கம் 1994 பெப்புருவரி இறுதியில் ரூ. 175.8 பில்லியனுக்கு உயர்வடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 143.2 பில்லியனாக விளங்கியது.

இலங்கை நிறுவனம் ஒன்றினால் ஐ. அ. டொலர் 330 இலட்சத்தினை வழங்கும் உலகளாவிய வைப்புப் பெறுகை வழங்கலான முதலாவது யூறோ வழங்கல் 1994 மாச்சில் வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டதனைத் தொடர்ந்து பங்குச் சந்தையில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டது. இலங்கைப் பங்குச் சந்தையில் முதலிடுவதற்கு ஒப்புதலளிக்கப்பட்ட நாடுசார் நிதியங்களின் எண்ணிக்கை இலங்கை நிதியத்திற்கு அளிக்கப்பட்ட ஒப்புதல்களுடன் நான்காக விளங்கியது. 1994 இறுதியில் இலங்கையில் முதலிடுவதற்கு ஒப்புதல் வழங்கப்பட்ட பிரதேச ரீதியான நிதியங்களின் எண்ணிக்கை 195 ஆக விளங்கியது.

**முதலாந்தரப் பங்குச் சந்தை**

1994 இல் பங்கு விலைச்சுட்டெண்களின் பொதுவான மதிப்புயர்வு குறைவாகக் காணப்பட்டமையின் மத்தியிலும் 1993 இல் வழங்கப்பட்ட 12 புதிய வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 15 கம்பனிகள் புதிய வழங்கலை மேற்கொண்டன. 1994 இன் புதிய வழங்கல்களிலும் 14 தொடக்கப் பொது வழங்கல்களாக காணப்பட்டவேளையில் ஒன்று ஏற்கனவே விலைக் குறிப்பீடு செய்த கம்பனியொன்றின் மேலதிக பொது வழங்கல் ஒன்றாகக் காணப்பட்டது. புதிய வழங்கல்களின் வழங்கல் விலை முகப்பு மதிப்பில் இருந்து (ரூ. 10.00) ரூபா 100.00 (மிகைக் கட்டுப்பணம் ரூ. 90.00) வரையிலான வீச்சில் காணப்பட்டது. முதல் மூன்று காலாண்டுகளிலும் செய்யப்பட்ட வழங்கல்கள் மிதமிஞ்சி உதவப்பட்ட வேளையில் (ஒரு சந்தர்ப்பத்தில் உதவு தொகைகள் சந்தை வழங்கலைவிட 42 மடங்கினைக் கொண்டிருந்தது) இறுதிக் காலாண்டில் வழங்கல்கள் குறைவாக உதவப்பட்டமையிலிருந்தும் எதிர்கால சந்தை நடத்தை தொடர்பாக முதலீட்டாளர்களின் நோக்கினை ஓரளவு புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. 1993 இல் விற்பனைக்கு வழங்கப்பட்ட மொத்தம் 490 இலட்சம் பங்குக்கெதிராக (மொத்த முகப்புப் பெறுமதி ரூ. 4,905 இலட்சம்) 1994 இல் மொத்தம் 1,394 இலட்சம் பங்குகள் (மொத்த முகப்புப் பெறுமதி ரூ. 13,940 இலட்சம்) விற்பனைக்கு வழங்கப்பட்டன. 1993 இன் ரூ. 12,468 இலட்சங்கொண்ட சந்தை வழங்கலுடன் ஒப்பிடுகையில் 1994 இல் சந்தை வழங்கலின் மொத்தப் பெறுமதி (மிகைக்கட்டுப் பணம் உட்பட) ரூ. 30,750 இலட்சமாக விளங்கியது. 1993 இனைப்போலவே வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி வகைகள் புதிய வழங்கல்களில் பெரும்பாகத்தினைக் கொண்டிருந்தன.

**அட்டவணை 1.79**

**முதலீட்டு வகை அடிப்படையில் புதியபங்கு வழங்கல்களின் எண்ணிக்கை 1991 - 1994**

| முதலீட்டு வகை | 1991 | 1992 | 1993 | 1994 |
|---|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி | 2 | 1 | 3 | 6 |
| குளிர்பானங்கள், உணவு, புகையிலை | — | 2 | — | 3 |
| இரசாயனமும், மருந்தாக்கல்களும் | — | — | — | — |
| கட்டடவாக்கமும் பொறியியலும் | — | — | — | — |
| காலணிகளும், புடவைகளும் | 1 | 1 | — | 1 |
| உணவகங்களும், பயணங்களும் | 1 | 2 | 4 | — |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | — | — | — | — |
| காணியும் சொத்தும் | — | — | — | 1 |
| தயாரிப்பு | 1 | 3 | 2 | 4 |
| உந்திகள் | — | — | 1 | — |
| ஒயில் பாம் | — | — | — | — |
| பணிகள் | — | 1 | — | — |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | — | — | — | — |
| வர்த்தகம் | 1 | 2 | 2 | — |
| மொத்தம் | 6 | 12 | 12 | 15 |
| கோரப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 12.51 | 78.24 | 49.03 | 139.4 |
| கோரப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ.) | 158.14 | 377.4 | 490.5 | 1,394.0 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

## இரண்டாந்தரப் பங்குச் சந்தை

*ஆண்டின் முதல் இரண்டுமாதங்களிலும் இரண்டாந்தரச் சந்தை 1993 இல் எய்திய பெறுபேறுகளைத் தொடர்ந்தும் பேணியது. அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் 1993 திசெம்பர் இறுதியின் 979 இலிருந்து பெப்புருவரி இறுதியில் 1,375.1 இற்கு (40.5 சதவீதம்) அதிகரித்த வேளையில் உணர் விலைச்சுட்டெண் 1993 திசெம்பர் இறுதியின் 1,442.4 இலிருந்து பெப்புருவரி இறுதியில் 2,093.8 இற்கு (45.2 சதவீத அதிகரிப்பு) உயர்வடைந்தது. எனினும் அதன் பிறகு யூலை இறுதியில் இருந்து இரண்டு சுட்டெண்களும் வீழ்ச்சியடையத் தொடங்கியதோடு அனைத்துப் பங்கு விலைச்சுட்டெண் பெப்புருவரி இறுதியில் காணப்பட்ட அதன் மட்டத்திலிருந்து 29 சதவீதத்தினால் (976.5 இற்கு) வீழ்ச்சியடைந்தவேளையில் உணர்விலைச் சுட்டெண் 30.5 சதவீதத்தினால் (1,455.1 இற்கு) வீழ்ச்சியடைந்தது. ஒகத்து, செத்தெம்பர் மாதங்களில் சந்தையில் சிறிதளவு மீட்சி காணப்பட்டபோதிலும் ஆண்டின் இறுதிக் காலாண்டில் விலைகள் மீண்டும் வீழ்ச்சியடையத் தொடங்கின. 1994 இறுதியில் அனைத்துப்பங்கு விலைச்சுட்டெண் 986.7 ஆகக் (1993 மட்டத்தினைவிட 0.8 சதவீத அதிகரிப்பு) காணப்பட்ட வேளையில் உணர்விலைச் சுட்டெண் 1,438.8 ஆகக் (1993 மட்டத்தினை விட 0.3 சதவீதம் தாழ்ந்து) காணப்பட்டது. ஆண்டின் பெரும்பாலான*

## அட்டவணை 1.80

### 1994 இல் கூட்டுநிலையங்களின் புதிய பங்கு வழங்கல்கள்

| கூட்டு நிலையங்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | முகப்புப் பெறுமதி (ரூபா) | மிகை மதிப்பு (ரூபா) | பங்குகளின் பெறுமதி | உதவப்பட்ட பங்குகளின் பெறுமதி | உதவுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| பீப்பிள்ஸ் மேச்சன்ட் வங்கி லிமிட்டெட் | 3,125,000 | 10 | 10 | 62,500,000 | 131,673,423 | 102,919 |
| லங்கா வோல்ரைல் லிமிட்டெட் | 8,000,000 | 10 | 40 | 400,000,000 | 193,394,800 | 7,840,000 |
| கொக்கோ லங்கா லிமிட்டெட் | 1,000,000 | 10 | 15 | 25,000,000 | 10,255,400 | 20,650 |
| றோயல் செறமிக்ஸ் லங்கா லிமிட்டெட் | 6,400,000 | 10 | 20 | 192,000,000 | 218,180,200 | 64,339 |
| ஈக்குவிற்றி ரூ லிமிட்டெட் | 1,550,000 | 10 | 10 | 31,000,000 | 4,516,000 | 5,740 |
| வியாங்கொட ரெக்ஸ்ரைல்ஸ் மில்ஸ் லிமிட்டெட் | 7,500,000 | 10 | 08 | 135,000,000 | 13,457,461 | 17,217 |
| பேர்ண்டீ லிமிட்டெட் | 2,000,000 | 10 | 20 | 60,000,000 | 5,936,500 | 2,757 |
| சி எவ் வெஞ்சர் பண்ட் லிமிட்டெட் | 3,333,593 | 10 | 05 | 50,003,895 | 34,149,393 | 20,456 |
| ஆசியா கப்பிற்றல் லிமிட்டெட் | 25,000,000 | 10 | 20 | 750,000,000 | 48,912,600 | 10,077 |
| வோர்ப்ஸ் சிலோன் லிமிட்டெட் | 62,500,000 | 10 | - | 625,000,000 | 74,682,800 | 15,038 |
| சிலோன் கிளாஸ் கொம்பனி லிமிட்டெட் | 6,625,000 | 10 | 30 | 265,000,000 | 54,838,266 | 27,984 |
| பைரகா பாம்ஸ் லிமிட்டெட் | 4,000,000 | 10 | 18 | 112,000,000 | 9,501,700 | 6,266 |
| செலிங்கோ செக்யூறிட்டி பினான்சியல் சேவிஸ் லிமிட்டெட் | 5,000,000 | 10 | 10 | 100,000,000 | 83,841,800 | 51,850 |
| த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட் | 2,377,700 | 10 | 90 | 237,770,000 | 8,117,271 | 12,776 |
| டபிள்யூ. எம். மெண்டிஸ் அன் கோ லிமிட்டெட் | 990,200 | 10 | 20 | 29,706,000 | – | – |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

காலப்பகுதியில் பங்கு விலை அசைவுகள் ஊக்கமளிப்பதாகக் காணப்படாவிட்டாலும் சந்தை நடவடிக்கை மட்டங்கள் 1993 இனைவிட 1994 இல் கணிசமாக அதிகரித்துக்காணப்பட்டன. 1994 இல் ஆண்டு மொத்தப் புரழ்வு ரூ. 345,220 இலட்சமாகக் காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டினைவிட 86 சதவீத அதிகரிப்பாகவும் இருந்தது. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 1993 இன் 3,510 இலட்சத்திலிருந்து 1994 இல் 5,060 இலட்சத்திற்கு அதிகரித்ததுடன் 44.2 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது.

1994 இல் சந்தை விலைகளின் வீழ்ச்சிக்கு வெளிநாட்டவர்களினால் மேற்கொள்ளப்படும் கொள்வனவுகள் குறைவடைந்தமையே காரணமாகும். 1993 இலும் 1994 இன் முதல் இரண்டு மாதங்களிலும் விலைச் சுட்டெண்களின் விரைந்த மேல்நோக்கிய அசைவானது சந்தைக்குள் புகுந்த பெரும்பாலும் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நிதியங்களினது உட்பாய்ச்சலின் காரணமாக ஏற்பட்டதாகும். 1993 இல் மொத்தப் புரழ்வில் 51 சதவீதத்திற்கு வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் வகைகூறியவேளையில் வெளிநாட்டு விற்பனைகள் 33 சதவீதத்தைக் கொண்டிருந்தன. வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் வெளிநாட்டவரின் விற்பனையில் 155 சதவீதமாக விளங்கியது. இதேபோன்று 1994 சனவரி பெப்புருவரி காலப்பகுதியில் வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் புரழ்வின் 45 சதவீதத்தைக் கொண்டிருந்தவேளையில் வெளிநாட்டவர்களின் விற்பனைகள் புரழ்வின் 28 சதவீதத்தைக் கொண்டிருந்தன. வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் வெளிநாட்டவர்களின் விற்பனைகளில் 159 சதவீதத்தைக் கொண்டிருந்தன. எனினும் பெப்புருவரிக்குப் பின்னர் உள்நாட்டு அரசியல் ஸ்திரப்பாடு இன்மை அபிவிருத்தியடைந்த நிதிச் சந்தைகளில் வட்டிவீதங்களின் அதிகரிப்பு என்பனவற்றின் தாக்கத்திற்குள்ளாகி வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் புரழ்வில் 42 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் வெளிநாட்டவர்களின் விற்பனைகள் மொத்தப் புரழ்வில் 38 சதவீதத்திற்கு வகைகூறின. வெளிநாட்டவர்களின் கொள்வனவுகள் வெளிநாட்டவர்களின் விற்பனைகளில் 110 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

பெறுமதி அடிப்படையில் வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி வகையானது கம்பனிகளின் பெருமளவு சுறுசுறுப்புடன் வர்த்தகம் செய்யப்பட்ட வகையாக தொடர்ந்து விளங்கி மொத்தப்புரழ்வில் 42 சதவீதத்திற்கு வகைகூறியது. தயாரிப்பு வகை மொத்தப் புரழ்வில் 23 சதவீதத்திற்கு வகை கூறியது. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் நியதிகளில் வங்கிகள், நிதி மற்றும் காப்புறுதி வகையே மிகச் சுறுசுறுப்பாக விளங்கி, வர்த்தகம் செய்யப்பட்ட அனைத்துப் பங்குகளிலும் 29 சதவீதத்திற்கு வகைகூறிய வேளையில் தயாரிப்பு வகையானது மொத்தத்தின் 25 சதவீதத்திற்கு வகைகூறியது.

## கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள்

இலங்கையில் நான்கு கூறு நம்பிக்கைப் பொறுப்புக்கள் தொடர்ந்து செயற்பட்டன. இந்த நான்கு கூறு நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றிணைந்த தேறிய சொத்துக்களின் பெறுமதி 1993 இறுதியின் ரூ. 35,660 இலட்சத்திலிருந்து 1994 இறுதியில் ரூ. 39,470 இலட்சத்திற்கு அதிகரித்து 10.7 சதவீத அதிகரிப்பைக் கொண்டிருந்தது. 1993 இல் தேறிய சொத்துப் பெறுமதியின் அதிகரிப்பு 83.5

அட்டவணை 1.81

1994 இல் இரண்டாந்தர பங்குச்சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்

| முதலீடுகளின் வகை | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| வங்கிகள், நிதி, காப்புறுதி | 135,679 | 143,506,754 | 14,486,125,751 |
| குடிபானங்கள், உணவு, புகையிலை | 39,387 | 87,319,472 | 2,280,153,301 |
| இரசாயனமும், மருந்தகங்களும் | 3,840 | 3,033,149 | 265,390,838 |
| கட்டடவாக்கமும், பொறியியலும் | 5,464 | 8,970,439 | 361,216,093 |
| காலணிகளும், புடவைகளும் | 18,296 | 11,230,007 | 433,757,887 |
| உணவகங்களும் பயணங்களும் | 41,593 | 61,563,381 | 1,999,145,739 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை | 6,600 | 7,704,656 | 1,912,658,273 |
| காணியும் சொத்தும் | 23,843 | 28,125,323 | 872,305,653 |
| தயாரிப்பு | 106,083 | 124,419,677 | 8,100,283,230 |
| உந்திகள் | 6,430 | 8,735,737 | 809,015,752 |
| ஓயில் பாம் | 30 | 22,918 | 11,252,501 |
| பணிகள் | 719 | 1,647,842 | 94,483,246 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் | 3,310 | 5,109,632 | 1,394,252,078 |
| வர்த்தகம் | 11,679 | 16,526,773 | 1,542,998,247 |

மூலம் : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை.

சதவீதமாகும். மெதுவான இவ்வளர்ச்சியானது இவ்விரு ஆண்டுகளிலும் பங்கு விலைகளின் ஏற்றத்தாழ்வுகளையே பிரதிபலிப்பதாக உள்ளது. 1994 இல் பங்கு மூலதனச் சந்தையில் முதலீடு செய்யப்பட்ட மொத்தக்கூறு நம்பிக்கைப் பொறுப்பு நிதியங்களின் விகிதம் 64 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.